MANAVAR MANJARRI.

OR

STUDENT'S BOUQUET

OF

VERSES IN TAMIL

Approved by the Director of Education

(CEYLON.)

For use in Schools

DECEMBER. 1933.

COMPOSED BY

A. J. SCHAFFTER

Head Tamil Pandit & Asst. Master St. Thomas' College,
Head Master Zahira College (1908—1913)
Asst. Master Ananda College (1904—1907)

REVISED EDITION

6
-7
DR

60/-

Catherine P. Hitchcock

STUDENT'S BOUQUET

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

OF

VERSES IN TAMIL

நூலகம்

மாணவர் மஞ்சரி

திருவவதார மாலை யென்னுங் காப்பியத்தின் ஆக்கியோனான

காலஞ்சென்ற சி. பீற்றர் அடால்பஸ் புலவர் அவர்கள்

புத்திரனும் பரி: தோமாஸ் கலாசாலைத் தலைமைத்

தமிழ்ப் பண்டிதருமான

அ. ஜே. ஷாவ்றர்

இயற்றியது

T. Kanagarathnam,
B.A.(Lond.) Dip. ... 1st Class Trained
Consultant Ltd. Editor - ... L. E. S
Lecturer; SLIDA and BCIS
COLOMBO — SRI LANKA.

25126

காபிரைட் விலை ஒரு ரூபாய்

FOREWORD.

(To the Revised Edition)

Mr. Schaffter's "Manavar Manjari" meets. I believe a long felt need.

Its style is simple but elegant and can easily be understood by students of Tamil Literature in the Elementary and Middle classes of our schools.

The subject matter is of local interest and deals with matters of daily activities of student life.

(Sgd:) T. H. Crossette, M. A., F.R. His. S.

Retired Vice-Principal

23rd Sept. 1933. St. John's College. Jaffna.

Appreciations.

Revd; F. Kingsbury, B. A. Lecturer in Tamil, Ceylon University College.

I have read Pandit A. J. Schaffter's "**MANAVAR MANJARI**" a "Bouquet of Verses in Tamil." Though

the book is by a Pandit, it is not written in Pandit's Tamil i. e. in classical or highly literary style. The author never forgets that the book is for boys and girls in Elementary and Secondary Schools and writes in simple colloquial Tamil. The contents of the book reveal a variety of subjects. While religious and moral lessons are not forgotten, the book contains not a few songs on work and play, on beasts and birds and on plants and flowers. The book is well printed on good paper.

(Sgd :) Francis Kingsbury
Ceylon University College,
Colombo,

July, 1931.

I have read with interest Pandit A. J. Schaffter's "Manavar Manjari" or "Garland of Verses for Students." As he says in his preface Mr. Schaffter has written this book in order that it may serve as a key to the great store-house of knowledge the illustrious authors of the Tamil land have left for us.

The cry is raised on every side hat our rising generation at any rate should be encouraged to take seriously to the study of the Tamil language and literature. But beyond a few suggestions nothing practical has so far been done towards the realisation of this object. Mr. Schaffter after an experience of very nearly a quarter of a century as a Tamil Pandit in some of the leading Schools and Colleges has brought out this Garland of Verses as a means of creating interest in the study of Tamil among boys and girls who have very little time to set apart for this useful purpose.

The book contains a variety of subjects and is written to simple and colloquial Tamil. I understand that the book has already been introduced into some schools and wish it all success.

(Sgd :) M. N. Thamotheram,
Tamil Interpreter to the Governor
and
Chief Translator to the Govt.

Governor's Office,
Colombo.
10th Feby. 1932.

Appreciation by Mr. A. R. S. Ratnam, B. A. (London), Royal College, Colombo,

(Some time Acting Divisional Inspector of Schools)

I have read with great interest "Manavar Manjari". It is essentially a children's book, dealing with topics which come within their experience. At the same time, the poems have a beauty of their own. The great merit of the collection seems to my mind to lie in the choice of themes, lighter than those of classical Tamil Poetry usually placed before children. They are sure to be delighted with it.

Srivasi,
Mount Lavinia, (Sgd:) A. R. S. Ratnam.
8th February, 1932.

"Manavar Manjari" or "Bouquet of Verses"
by A. J. Schaffter.

This little collection of verses differs I believe from others in the attempt made to include in it religious, moral and action songs. and should prove useful to Kindergarten Tamil teachers in the Island.

The author realises the importance of placing in the hands of Tamil children in English Schools such

books as will grip their attention and enable them to develop their powers of imagination. The verses are written in simple language and are easily intelligible.

(Sgd :) K. S. Rajasingahm
Government Bilingual School, Head Master.
Wekande.

Appreciation by the Revd : J. Barnabas, B. A., B. D.

I have perused Mr Schaffter's excellent little book of Tamil Verse. It consists of three parts graded and well adapted for use as a text book in schools. The chief merit of the book in my opinion lies in the fact that the themes of which a great many are drawn from English Literature, Ceylon History and Ceylon Life are of natural interest to children.

St. Thomas' College, (Sgd :) J, Barnabas.
Mount Lavinia. Assistant Master.

I have had the pleasure of running over Mr. A. J. Schaffter's "Manavar Manjari", a Bouquet of Tamil Verses The book is intended for boys and girls who

speak Tamil and it well serves its purpose. The language is simple and the subjects are varied, and there is a departure and a very desirable departure from the mode of usual and traditional, Tamil Verses. The book is bound to be popular for the author has tried to view his subjects from the point of view of the young and not of the adults. We wish we had more of Anuradhapura. Duttugemunu and his compatriots ancient and modern than of Rome and Horatius and the Sabines. The book however supplies a long-felt need of Tamil teachers who are anxiously looking for poetry books written in simple language and dealing with familiar and concrete subjects.

(Sgd :) J. C. Amarasingham, B. A.

Principal.

Tellippallai Training School.

Mount Lavinia.

School children it is said are a discovery of the West. In the wide range of Eastern Literature there is abundance of reference to babyhood and infancy on one side and disciples of a priest or Guru on the other, but there is a marked dearth of allusion to what ought to intervene between the two, namely to boys and girls of school-going age.

In the Indian map of life the entire tenure is divided into three periods, namely pupilage, citizenship and asceticism or pilgrimage. The first period of pupilage which one would expect to cover the Kindergarten age does not mean attending school in our modern sense; It means serving a term of discipleship to a holy sage or hermit who had renounced all the worldly entanglements of Mun, Pen and Pon. True to reality one does not find in the Eastern Literature and the Eastern Theatre that reflect Indian life anything corresponding to Children's books in English that constitute a body of such attractive literature covering from the cradle to the Kindergarten,

In a small way Mr. A. J. Schaffter has tried to supply this large gap by his composition "Manavar Manjari". The author is a Pandit and the son of a Pandit. We fear our modern age of doubt and denial will question true poetic inspiration running as a family inheritance, but there is some warrant for it in the East and West alike if any truth is embodied by such maxims as "poets are not made etc". In whatever spirit of high poetry or humbler afflatus inherited the author has added undoubted experience of his own that he has gathered from a long period of teaching Tamil to Junior Classes in Zahira College, Ananda College and last in S. Thomas College where he also holds an assistant Mastership in English.

The result of such combination lies before us in 160 well printed pages priced at One Rupee, of clever; happy and animated renderings of some stories and poems of nursery rhymes and children's books. We recommend the book to the use of our Junior Classes and compliment the author on his achievement of so much success in such an original and pioneer undretaking.

A. S. Gurusamy,
Advocate

I have seen Mr: A. J. Schaffter's book " MANAVAR MANJARI ". This book is divided into three parts. Part 1 consists of songs in tunes popular with and familiar to the masses. These are bound to attract the attention of children.

Parts II and III show considerable skill and are composed in classical metres though the language employed is simple and homely.

(Sgd:) Jno. V. Daniel.
70, Glennie Street, Ex-Manager of Schools.
Slave island
12th Feby: 1932.

I have perused a copy of " Manavar Manjari ". Mr: Schaffter has conferred a boon on children to whom this book would prove a great blessing. It will also ease the lot of the teacher. It is a recognised fact that familiar objects draw the attention of the children and keep them interested.

This " Bouquet of Verses " has been written by one who has studied the mind of child and by long experience has found out the best method of holding its attention and interest. This book seeks to interest, amuse, elevate and instruct. It supplies a long felt want and should be readily welcomed in all our schools.

(Sgd:) A. A. Muthiah,
Ladies' College, (Mrs: J. C. Muthiah)
Colombo. Senior Tamil Mistress.
28 th January 1932.

Preface

முகவுரை

தற்காலப் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்கும் மாணவர் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நீதிநெறி, நாலடியார் முதலான நீதி நூல்களையே கற்பிக்கப்படுவது யாவருமறிந்த விஷயம் மேற்கூறிய நூல்கள் சொற்சுவை, பொருட்சுவை பொருந்தியிருந்தும் அவற்றின்மேல் மாணாக்கரின் பிரியஞ் செல்லாததின் காரணத்தை ஆராய்ந்தறிவது நமது கடமையாகும். இது மாணவரின் குற்றமன்று. ஏனெனில் மேற்கூறிய நூல்கள் (1) ஒரே விஷயத்தைப்பற்றியிருத்தலும், (2) அநேகமாய் அவர்களறிவுக் கமையாத சத்தியங்களைக் கூறுவதும் (3) அவர்கள் மனத்தைக் கவரத்தக்க விஷயங்கள் அதிலில்லாதிருத்தலும் (4) அரும்பதங்கள் மிகுத்தலுமே காரணமெனக் கூறலாம்.

படம், கதை, பாட்டு இம்மூன்றும் பாலர் மனதை மட்டுமல்ல, பெரியவர்களின் கவனத்தையும் கவரும் துணைக்கருவிகளென்பதை ஆசிரிய அநுபோகமுள்ள யாவரும் ஒத்துக்கொள்வார்கள். வசனங்களின் வல்லமையும் எழுப்புதலும் பின்னுடியே தோன்றுமியல்புடையன. குழந்தைகளும் பெரியோரைப் போலவே மனக்கிளர்ச்சியிற் சந்தோஷிக்கிறவர்களாயும், சித்தியிலுவப்புடையவர்களாயுமிருக்கிறார்கள், இராகமினிமையாயுமிலேசாய்க் கற்கக்கூடியதாயுமிருத்தலோடு, பதங்கள் அர்த்தம் விளங்கக்கூடியதாயும் பொருள் எழுப்புதலுடையதாயுமிருத்தல் வேண்டும். இது

பாலர் வகுப்புகளில் இன்றியமையாதது இம்மாணவர் மஞ்சரி இந்நோக்கத்தோடேயே இயற்றப்பட்டது. செய்யுட் கதைகள் நீதிகளை மாணாக்கரின் மனத்தில் எளிதிற் பதியச் செய்து படிப்பவர்களுக்கு உற்சாகத்தை யளிக்குமென்றே இப்புத்தகத்தை இயற்ற விருப்பமுற்றோம். கதைகள் பெரும்பாலும் ஆங்கிலத்திலிருந்தே தெரிந்தெடுக்கப்பட்டன.

"கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழியென" நாவலர் மலிந்த இத்தமிழகத்திலே புல்லறிவாளராகிய யாம் கவியியற்ற முன்வந்த துணிவைப் பெரியோர் பொறுத்தருள் செய்வார்களென்று நம்புகிறோம்.

நம்முன்னோர் சேகரித்து வைத்த செந்தமிழ்க் களஞ்சியத்தினுட்புகுந்து அதன் சுவையை உருசிக்க இதோர் திறவு கோலாயிருக்குமென்று நம்பி அச்சிடத்துணிந்தோம்.

இப்புத்தகத்தின் பிரதியைப் பார்வையிட்டு ஆங்காங்கு சிற்சில சீர்திருத்தங்களுக்கு உதவியாயிருந்த ஜாஃனு காலேஜ் பிரதமத் தமிழ்ப் பண்டிதராகிய கனம் எம். நல்லதம்பி புலவரவர்களுக்கு எம் நன்றியறிதல் கூறுகின்றோம்.

இந்நூலின் முன்னேற்றங் கருதிக் கூறப்படும் குறிப்புகளை வந்தனங்களுடன் ஏற்றுக்கொள்ளக் காத்திருக்கும்,

அ. ஜே. ஷாவ்றர்
ஆக்கியோன்.

மவுண்டலெவினியா,
செப்டெம்பர் மீ 1933

தெல்லிப்பளை அமெரிக்கன் மிஷன் ஆங்கிலப் பாடசாலை ஆசிரியரான. ஜே. வி. செல்லப்பா புலவரவர்கள் எழுதிய

மதிப்புரை

மாணவர் மஞ்சரி.

தற்காலங் தமிழ்த் தேசத்துப் பாடசாலைகளிற் செய்யுட் பாடமலட்சியஞ் செய்யப்பட்டு வருவது யாவருமறிந்த விஷயம். ஒவ்வொரு வகுப்பிலுங் குறித்த தொகையான செய்யுட்பாகத்தை வேம்பினுங் கசப்பாய் மதிப்பதினால், அவர்களுக்குக் குறிக்கப்பட்ட மிகக்குறைந்த அளவு செய்யுட்பாடத்தையாவது கற்பித்துக்கொள்ள இயலாமல் உபாத்திமார் கஷ்டப்படுகின்றனர். "எதற்கு முருகாத மன மிசைக் குருகு" மாதலாற் சிறுபிள்ளைகள் ஆசிரியரின் தூண்டுதலின்றிச் செய்யுட் பாடத்தை வாஞ்சையோடு கற்க வேண்டியதே நியாயமாயிருந்தும் அவர்களதில் வெறுப்படைவதற்குப் பிரதான நியாயம், பாலர் பாஷையில் அவர்கள் கிரகித்துக் கொள்ளத்தக்க விஷயங்களின் பேரிலியற்றப்பட்ட தமிழ்ச் செய்யுட்கள் மிகக்குறைவாயிருத்தலேயாம். இதனால் இத்தேசத்துப் பாடசாலைகளில் இந்தியாவிலியற்றப்பட்ட செய்யுட் புத்தகங்கள் பாவிக்கப்படுகின்றன, அவற்றின் பாஷை நடையும், விஷயங்களும் இந்திய மாணவர்க் கேற்றவகையாயிருத்தலினால் அவைநந்தேசத்துப் பிள்ளைகட்கு மிகவிருப்பையுண்டாக்கமாட்டா.

தமிழ்ப்பாஷையிற் சொற்சுவை மலிந்த பாக்களேராள

மாயிருந்தும் அவை சிறு பிள்ளைகட்கென வியற்றப் பட்ட
னவல்ல. ஆதலினலப்பாக்கள் காடினிய சந்திகளும் கடும்
பதங்களும் நிறைந்து சிறுவரின் மனோசக்திக் கேட்டாத ஆ
ழமான சத்தியங்களை யடக்கியிருக்கின்றன. அவ்விதபாக்கள்
சிறுவருக்குச் செய்யுட்பாடத்தில் வெறுப்பை யுண்டாக்கல்
னுதனமல்ல. வளர்ந்தவர்கள் பேசும் பிழைபற்ற பாஷையிற்
சொல்லப் படுவனவற்றைப் பிள்ளைகள் லட்சியஞ் செய்வது
ம் தமது மழலைச் சொற்களிற் சொல்லப்படுவதையார்வத்து
டன் கேட்பதும் பிள்ளைகளோடுடாடிய யாவருமறிந்த சத்
தியம். பிள்ளைகளும் வயதுக்குத்தக்கபடி குணகுணங்களில்
வித்தியாசமடைகின்றன ரென்பது மானத சாஸ்திர நிபுண
ரால் தெளிவாய் விளக்கப் பட்டிருக்கின்றது. ஆகலாற் பிள்
ளைகளின் நிலைமைக் கேற்க வியற்றப்பட்ட பாக்களே யவர்
கட்குச் செய்யுளில் விருப்பத்தை யுண்டாக்கக்கூடும்.

செண் தோமாஸ் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பண்டி
தர் ஸ்ரீமான் A. J. ஷாவ்றர் அவர்களாலியற்றப்பட்ட "மாண
வர் மஞ்சரி" யென்னும் நூல் பாலர் பாஷையில் அவர்களுக்கு
ஆர்வத்தை யுண்டாக்கும் விஷயங்களின்பேரில், யாவருக்குமி
லகுவாய்ப் பாடத்தக்க இராகங்களிலியற்றப்பட்டிருப்பதால்
அந்நூல் தமிழாசிரியரும் மாணவருமடையுங் கஷ்டங்களைத்
தீர்க்கு மரிய அவுஷதமாகுமெனல் மிகையாகாது. சிறுவர்
சிறுமியர்க்கு மனக்கிளர்ச்சியையும் அகக் களிப்பையுமுண்
டாக்குதல் மாத்திரமே யாக்கியோனின் நோக்கமல்ல வென்
பது இந்நூலைக் கவனமாய் ஆராய்வோர்க்கு தெள்ளிதிற்

புலப்படும். பொழுது போக்குக்காயியற்றப்பட்ட விளையா
ட்டுப் பாக்கள்போற் தோற்றும் சிறிய செய்யுட்களிற் சிவா
மிர்தம் போன்றதிவ்விய போதனைகளை யமைத்திருக்கு மாட்
சி ஆக்கியோனின் ஆசிரிய அநுபவத்தை வெளிப்படுத்து
கின்றது. கடவுள் பக்தியையும், சன்மார்க்கத்தையும் மாத்
திரமல்ல, தேசாபிமானம், பிராணிசாத்திரம், இதிகாசம்
முதலிய பலதிறப்பட்ட விஷயங்களையும் பற்றிய பாக்கள்
விளையாட்டு மேரையா யியற்றப்பட்டிருக்கின்றன. இவ்வித
நூல்களையாதரிக்கும் போதுதான் இன்னும்பலர் இவ்வித
முயற்சியிற் கையிடவும் நந்தாய்ப் பாஷை விருத்தியடைய
வுமேது வாகும். ஆதலாலிவ் மாணவர் மஞ்சரியை மகிழ்வு
டனாதரித்து அதனாக்கியோன் இன்னும் இவ்வித முயற்சியிற்
கையிட அவரைத் தைரியப்படுத்திவிடல் தமிழபிமானிகள்
கடமையாம்.

(*Sgd.*) ஜே. வி. செல்லப்பா

கலித்துறை

கரும் பினினிய கனிமொழி பேசுங் களங்கமற்ற
அருஞ்சிறுபால ரகநிலை தன்னை யனுபவத்தாற்
தெரிந்து நன் மாணவர் மஞ்சரிசெய்து சிறந்தபுகழ்
பொருந்தினன் ஷாவ்றர் புலவர்சிகாமணி போற்றுவமே.

Contents

பொருளடக்கம்

முதற்பாகம்

		பக்கம்
1.	மழையும் மின்னலும்	3
2.	வயிற்றுவலி	3
3.	மங்களம்	4
4.	காற்றாடி	5
5.	குழந்தையும் கூட்டுப் பிராணிகளும்	5
6.	செல்லப் பிள்ளை	6
7.	கவனமில்லாத பிள்ளை	7
8.	நல்ல பிள்ளை சொல்வது	8
9.	மின்னு மின்னு வெள்ளியே	9
10.	விடாமுயற்சி	10
11.	ஓர் விடுகதை	11
12.	மூளியுங் காளியும் (கும்மி)	11
13.	கமக்காரன்	12
14.	சிப்பியின் இரகசியம் (குரிசொல்தரு)	12
15.	விடுமுறை நாட்கள்	13
16.	வேலையின் பின் விளையாட்டு	15
17.	உலோபி	16
18.	வேலையும் விளையாட்டும்	16
19.	உடம்புப் பயிற்சி	17

பொருளடக்கம்

20.	கைவிரல்கள்	18
21.	தண்டலின் பாட்டு	18
22.	நீட்டலளவு	19
23.	கூட்டாஞ்சோறு (தெம்மாங்கு)	19
24.	தாயை இழந்த பிள்ளையின் புலம்பல்	20
25	இலங்கையின் சிறப்பு	22
26.	வனவாசிகள்	25
27.	பொம்மைத் தாலாட்டு	26
28	நோக்கணக்கு	27
29	குழந்தையும் தமையனும்	27
30.	கிளிப் பிள்ளை	28
31.	வெள்ளப்பெருக்கு	29
32.	மேரியின் ஆட்டுக்குட்டி	30
33.	சிருட்டி கர்த்தாவுக்குத் துதி	32
34.	காற்றின் சேட்டை	33
35.	பிறந்த நாள்சோசியம்	33
36.	காகம்	34
37.	பாட்டைத் தலையன்	35
38.	பிறவிக் குருடன்	36
39.	சேரிடமறிந்து சேர்	37
40.	சகசண்டி	38
41.	அண்டங்காகம் மூன்று கக்கினேன்கதை	40
42.	என்தாய்	41
43.	நதி	42

பொருளடக்கம்

44.	அரசனும் சிலந்திப் பூச்சியும்	44
45.	குருக்கள் வளர்த்த கிளி	46
46.	கார்காலக் கோஷ்டம்	50
47.	குளவியும் தேனீயும்	51
48.	பொன் யுகம்	52
49.	கோணும் மனிதனும்	53
50.	பூச்சாண்டி	55
51.	வீண்பெருமை	56
52.	ஜாவர்பெருமான் அல்லது நன்றிமறவாமை	58
53.	மாண்டது நாயே	60
54.	சக்கரவர்த்திக்கு மங்களம்	61

இரண்டாம் பாகம்

1.	மேலோரைக் கனம் பண்ணல்	63
2.	விருது விரும்பிய சித்திரர்	64
3.	கிளிப்பிள்ளையின் கதை	66
4.	ஆர்மோசன்	67
5.	சபீனரின் சீர்பங்கம்	68
6.	அலெக்சந்தரும் ஆந்தைகளும்	71
7.	சுவாமி பத்தி	73
8.	ரோமாபுரியின் ஆதி	75
9.	துட்டகைமுனு	80
10	ஒரேசியஸ் வீரன்	90
11.	குறள் அறுபது	108

பொருளடக்கம்	பக்கம்
12. விடுகதை வெண்பாக்கள்	115
13. நீதி வசனங்கள்	117

மூன்றுவது பாகம்

சிம்சோன் வெண்பா

பாயிரம்	123
செனன காண்டம்	125
மணம்புரி காண்டம்	137
வினைசூழ் காண்டம்	145
வாழி	162

மாணவர் மஞ்சரி

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

பாயிரம்

காப்பு

பிதாவணக்கம்.

வெற்பதின் உச்சி நின்று விருப்பொடு சிலையிற் றீட்டி
கற்பனை பத்து முன்னே கருணையோ டீந்து மாண்பின்
சற்குரு வாகப் பின்னர் தனதருட் சுதனைத் தந்த
பொற்புறு தாதை பாதம் புகலெனப் போற்று வாமே.

குமாரன் வணக்கம்.

சிரிப்புடன் மலர்ந்து முன்னாள் சிறார்தமை யணைத்துக் கை
விருப்புடன் ஆசி கூறி விண்ணகம் அன்னார்க்கென்று (யால்
விரித்துரை செய்து வந்த விமலனின் மகத்வ சேயை
கருத்தினி விருத்தி யாங்கள், கைதொழு தேத்து வோமே.

பரிசுத்த ஆவி வணக்கம்.

சொன்னல மில்லாச் சீடர் தொன்மறைப் போத மெய்த
பன்னிநா வாக வந்த வரப்பிர சாத ஆவி
நன்னெறி சாற்று தற்கு நற்றுணை யாக வென்று
தொன்னெறி யளித்ததேவைத் தொழுதினிதேத்து வோமே

அவையடக்கம்

பெரியோருக்கு.

மாதரார் கதைகள் தேடி மஞ்சரி யாகச் சேர்த்திங்
கேதமில் சிறுவர் கற்றே எழுப்புத லடைய வென்ன
ஓதினேன் கவியி னாலே உளறுமென் புன்சொற் செய்யுள்
தீதறு கவிவா ணர்க்கே சிரிப்பதை விளைக்கு மன்றோ

மாணவர்க்கு நன்மொழி.

தொன்மைசேர் பூங்கானத்தே தொழிலொழிநோய்போக்து
பன்மலர்க்கொத் துச்சேர்த்துப்பணிவுடன்முன்னர்வந்தேன்
நன்மலர் ஆய்ந்து மக்காள் நலமதை நுகர்ந்து நுங்கள்(வீ
மென் சால் நண்பன் சொல்லா மேற்கொண்டு வழுத்து

முதற்பாகம்.

மதலைப் பகுதி.

வாழ்த்து

சீர்மேவும் சீயோன் செல்வ மணாளனும்
கார் மேக வாகனன் கழலே காப்பு.

1-ம் பாட்டு

மழையும் மின்னலும்.

மழையே! மழையே! மதுரைபோ
மழையே! மழையே! நாளைவா.

மின்னே மின்னி முழங்காதே
பின்னே மழையைப் பெய்யாதே.

2-ம் பாட்டு

வயிற்றுவலி

1. வயிற்றுவலி, வயிற்றுவலி
வாட்டுதே வாட்டுதே
பயற்றைத் தின்ற குற்றத்தை
காட்டுதே காட்டுதே.

2. விடுபற்றி, விடுபற்றி
வேகுதே வேகுதே
ஓடி நீரைக் கொண்டுவந்து
ஊற்றுமேன் ஊற்றுமேன்.

3. வாதக்காலும், வாதக்காலும்
வருத்துதே வருத்துதே
வாதைநீங்க தைலங்கொண்டு
வாருமேன் வாருமேன்.

3-ம் பாட்டு

மங்களம்

ஜீச்சுக்கீச்சுத் தம்பளம் என்றமெட்டு.

1. மாசில்லார்க்கு மங்களம்
மறையவர்க்கு மங்களம்
ஆசி ஆசி மங்களம்
அனைவருக்கும் மங்களம்.

2. மாத மாதச் சம்பளம்
மடி நிறைபச் சம்பளம்
சாதத்தோடு சம்பளம்
சாய்ந்திருக்கச் சம்பளம்.

3. சின்னச் சின்னத் தப்பிதம்
தீதே தீதே தப்பிதம்
இன்னம் இன்னம் தப்பிதம்
இன்னல் ஊட்டும் தப்பிதம்.

4-ம் பாட்டு

காற்றாடி

பல்லவி:- ஆலவட்டம் போடுது பட்டம்.

கண்ணிகள்

1. காற்றிலே நின்று காற்றாடியும்
ஆலவட்டம் போடுது பட்டம்.

2. கையிலே காசு வாயிலே தோசை
அல்லாது நஷ்டம் பொல்லாத கஷ்டம்.

3. வாலிபர் கூட்டம் பாலியர் ஆட்டம்
தடையிலா ஓட்டம் கடைசியில் வாட்டம்.

5-ம் பாட்டு

குழந்தையும் கூட்டுப்பிராணிகளும்

1 பசுவே! பசுவே! எங்குபோனாய்?
பசும்புல் தேடிச் சென்றலைந்தேன்.
பசுவே! பசுவே! என்ன கண்டாய்?
பாலகர் விளையாடக் கண்டேன்.

2 சேவலே! சேவலே! எங்குபோனாய்?
செயிக்கச் சத்துரு தேடிச்சென்றேன்.
சேவலே! சேவலே என்னசெய்தாய்?
செருவில் வென்றபின் கூவிவந்தேன்.

3. கோழியே! கோழியே! எங்குபோனுய்?
கோதுமை வயலே நாடிச் சென்றேன்.
கோழியே! கோழியே! என்னசெய்தாய்?
கொத்திக் கொத்திபதைத் தின்றுவந்தேன்.

4. பூனேயே! பூனேயே! எங்கு போனுய்?
புதின காரியம் பார்க்கச்சென்றேன்.
பூனேயே பூனேயே என்ன கண்டாய்?
புற்றிலே நாக மிருக்கக் கண்டேன்.

5 மறியே! மறியே! எங்கு போனுய்?
மலேயின் சாரலேத் தேடிப்போனேன்.
மறியே! மறியே! என்னசெய்தாய்?
மகிழ்ந்து குட்டிக் காணமிட்டேன்.

6. குக்கலே! குக்கலே! எங்குபோனுய்?
குரைக்குந் தொனியைக் கேட்டுச்சென்றேன்.
குக்கலே! குக்கலே என்னசெய்தாய்?
கொடுத்து வாங்கியே ஓடிவந்தேன்.

6-ம் பாட்டு

செல்லப்பிள்ளை

1. செல்ல முற்றின சிறுவனும்
பல்லே முத்தெனக் காட்டுவான்.

2. அழுத பிள்ளேயுஞ் சிரிக்குமாம்
அழுகற் பழமும் தின்னுமாம்.

3 அழுத மகவே பாலுணும்
உழுத வயலே உரமுணும்.

4 எடுத்த முயற்சியே பயன் தரும்
படித்த பிள்ளேயே மாண்புறும்.

5 உழுத்த மாமும் சரியுமாம்
பழுத்த பழமும் உதிருமாம்.

6 இறைத்த கிணறே பெருகுமால்
இறைத்த தனமே ஊறிடும்.

7-ம் பாட்டு

சவனமில்லாத பிள்ளை

1 நாக்குச் சிவந்ததென்ன? நேசமணி?
நாணமுற வந்ததென்ன? நேசமணி?
பாக்குவெட்டி வைத்ததெங்கே? நேசமணி?
பல்லே விளக்காததென்ன? நேசமணி?

2 தாம்பூலம் போட்டதென்ன நேசமணி?
தாய்வார்த்தை கேட்கலேயோ நேசமணி?
தாம்பாளம் வைத்ததெங்கே நேசமணி?
தட்டுக்கெட வந்ததென்ன நேசமணி?

3 காவில் மண் வந்ததென்ன நேசமணி?
கட்டளேமீ கடக்கலாமோ நேசமணி?
பாலுஞ் சிந்திப்போனதென்ன நேசமணி?
பார்க்கச் சொல்லிப் போகலேயோ நேசமணி?

4 மாவுகொட்டிப் போனதென்ன நேசமணி?
மண்ணுங் கல்லும் சேர்ந்ததென்ன நேசமணி?
காவல் விட்டுப் போனதென்ன நேசமணி?
கவலையற் றிருந்ததென்னோ நேசமணி?

5 மட்குட முடைந்ததென்ன நேசமணி?
மட்டியென்று கேட்டதென்ன நேசமணி?
கட்கலங்கி நிற்பதென்ன நேசமணி?
கண்ணீரும் வந்ததென்ன நேசமணி?

8-ம் பாட்டு

இராகம்:- தெம்மாங்கு

நல்லபிள்ளை சொல்வது

1 வீதியிலே நிற்கமாட்டேன் வீண்வழக்குப் பேசமாட்டேன்
பாதகரைச்சேரமாட்டேன் பாவம்பழி செய்யமாட்டேன்.

பல்லவி

சொன்ன சொல்லைக் கடப்பேனோ தோழர்களே
என்ன தான் வந்தாலும் நானிலத்தில்
நன்னெறியைக் காத்திடுவோர் நண்பர்களே
பொன்னுலகைத் தானடைவர் பொன்றிடினும்.

சுருட்டுப் பிடிக்கமாட்டேன் சூதுவிளையாட மாட்டேன்
திருட்டுத்தனம் பண்ணமாட்டேன் தெருவுலாத்தித்திரிய
மாட்டேன்.

3. பொல்லாப்பு பேசமாட்டேன் பொய்புரட்டுச் செய்யமாட்
வல்லபங்கள்கூறமாட்டேன்வாயாடித்திரியமாட்டேன்(டேன்

4, சண்டைஎழுப்பமாட்டேன்சந்தடிகள்பண்ணமாட்டேன்
குண்டணிகள்சொல்லமாட்டேன் குளிப்புத்தவறமாட்டேன்

5 அழுக்கை அணியமாட்டேன் அழுது புரள மாட்டேன்
பழுக்காமற் தின்னமாட்டேன் பார்க்கவைத்து உண்ணமாட்
டேன்

6, சத்தியம் பிறழமாட்டேன் சச்சரவு பண்ணமாட்டேன்
உத்தமர் வழியினின்று ஒருபோதும் நீங்கமாட்டேன்.

9-ம் பாடம்

மின்னு மின்னு வெள்ளியே

1, மின்னு மின்னு வெள்ளியே
விண்ணின் நின்று வெள்ளியே
உன்னதத்தில் சோதியாய்
உயர வானில் சொலிக்கின்றாய்.

2, திசைகள் தப்பி மாலுமி
திகைத்துமே கலங்கையில்
பிசகிடாது செல்லவுன்
பிரகாசத்தைக் காட்டுவாய்.

3, யாத்திரிகை பண்ணுவோர்
இராத்திரி வேளையில்
பார்த்துவுன் வெளிச்சத்தை
பரமனையே வாழ்த்துவார்.

4, மேகம் வந்து மூடினும்
விண்ணினின்று வெள்ளியே
வேகமே குறைந்திடாது
மின்னு மின்னு வெள்ளியே.

10-ம் பாட்டு

விடாமுயற்சி

1, வேலையதுண்டானால் விருப்பமுடன் செய்திடுவாய்
காலெடுத்து ஏறினாலே கன்மலையி னுச்சிவரும்.

2, மலையடியில் நின்றுகொண்டு மாய்ச்சலெடுக்காமலங்கே
கலந்தோடு மேகநோக்கில் கன்மலை யுச்சிவரா.

3, காலிடறிப் போகிலென்ன? கல்தடுக்கி வீழ்ந்துமென்ன?
பாலகரே நுங்கருமம் பண்புடனே செய்திடுவீர்.

4, அடிமேல் அடியடித்தால் அம்மி நகருமென்பர்
முடிவிலே தான் சித்திவரும் முன்னேறி நீர் முயன்றால்

11-ம்பாட்டு

ஓர் விடுகதை

1. இரண்டு காலன் மூன்றுகாலில் இருந்துகொண்டே இன்ப
கொண்ட ஒற்றைக்காலையே குறுக்கேமடியில்வைத்திட [மாய்

2. நாலுகாலன் கண்டுநாடி நடுவேவந்து சாடியே
காலைக் கௌவி ஓடிடக் கண்ட இரண்டு காலனும்,

3. மூன்றுகாலைத் தூக்கியேகி முன்னே வீசி முடுக்கிட
நான்குகாலன் ஒற்றைக்காலை நழுவவிட்டே ஓடினன்.

12-ம்பாட்டு

மூளியுங் காளியும்

1. மூளியுங்காளியுங்கூடிக்கொண்டு முட்டியிற்தண்ணீர்மொ
[ள்ளவென்று
தோளிலே முட்டியைத் தூக்கிக்கொண்டுதுரவைநோக்கியே
[போயினராம்

2. காளியின் காலிற்கல்தட்டிடவே கதறிவீழ்ந்தாளே காளி
[யம்மாள்
தானாய்த்துண்டாய்ப் போனதேமுட்டி துரவண்டையிற்
[சேருமுன்னே.

3. முட்டிதான்போனதுமல்லாமல் மூளிதான்வந்தவள்பார்
[க்கையிலே
முட்டிலே காயம்பட்டுபங்கே மோசமாய் இரத்தமும்வ
[ந்ததுவே.

13-ம் பாட்டு

கமக்காரன்

1. கமக்காரன் வயல்வெளியிற் கருத்துடனே நாள்முழுதும்
நமக்காகத் தன்தொழிலை நன்றாகச் செய்கின்றான்.

2 எருத்துக்களைக் கொண்டுவந்து ஏர்பூட்டி உழுதபின்னர்
எருத்தூவிப்பண்படுத்தி ஏற்றவிதை விதைக்கின்றான்

3. விளைகதிர்க்கு நீள்வரம்பு விந்தையுறக்கட்டிபின்னர்
களைகொய்து முளையதையே காப்பாற்றி வருகின்றான்.

4 ஏற்றவேளை நீர்ப்பாய்ச்சி இடையடைத்து வேலிதன்னில்
சாற்றுமிகச் செய்திடுவான் சலியாது கமக்காரன்.

5. கதிர்முற்ற அறுத்ததையே கருத்துடனே கட்டாக்கி
பதர்விழுந்து தாளகலப் பாங்காகப் போரடிப்பான்.

6 நெல்லதையே பதரினின்று நீக்கிடவே தூவிபின்னர்
நல்லதெல்லாம் களஞ்சியத்தில் நமக்கென்றே சேர்த்து
[வைப்பான்

14-ம் பாட்டு.

சிப்பியின் இரகசியம்

1. ஆழத்தின் மணலில் ஆய்ந்து மேய்ந்து
ஆயிரக் கணக்காய் அலைந்து திரிந்து
வாழ்ந்தவர் கதையை வகுத்தே எனக்கு
வருணச் சிப்பியே! விரித்துரை நீ.

2. உன்னிலே வசித்து உள்ளமே களித்த
ஊர்ந்திடும் செந்துவின் கதையைச் சொல்லு நீ
தன்னோ டுன்னையும் தூக்கிச் சுமந்த
தந்திரச் சிற்பியின் கதை யென்னே?

3. வர்ணக் கூரையை வரைந்து செய்திட
வருஷம் எத்தனை பிடித்த தங்கே?
பர்ண சாலைகள் ஆழத்தி லுண்டோ?
பந்துக்கள் வந்து கூடுவதுண்டோ?

4. ஒரே நாளையில் எத்தனை கட்டை
ஓயாமல் நடந்ததுண்டு கூறாய்
பெரும்புசலா லுங்களுக் கெல்லாம்
பெரிய துன்பங்கள் நேரிடுமோ?

5 சத்துரு எத்தனை விதவிதமாய்ச்
சதாகாலமாய்க் காத்திருந்தும்
சித்திர வீட்டி னுள்ளிருந்து
சிறைப்படாமற் தப்பினரோ?

15-ம் பாட்டு.

விடுமுறை நாட்கள்

1. கைதட்டம்மா கைதட்டு கடைக்குப் போகலாங் கைதட்டு
கைதட்டம்மா கைதட்டு காட்சிகள்பார்க்கலாம் கைதட்டு

1. கடலை தின்னலாம் கைதட்டு கனிகள்தின்னலாம்கைதட்டு
நடையிற்தின்னலாம் கைதட்டு நகைத்துத் தின்னலாம்
(கைதட்டு

3. பயஸ்கோப் பார்க்கலாம் கைதட்டு படங்கள் பார்க்கலாம்
(கைதட்டு
பைசிக்கள்ஏறலாம் கைதட்டு பயணப்போகலாம்கைதட்டு

4. விடுகட்டலாம் கைதட்டு வித்தைகள் செய்யலாம் கைதட்டு
ஓடியேசாடலாம்கைதட்டு ஒளித்துத்தேடலாம் கைதட்டு

5 காட்டைக்கிட்டலாம் கைதட்டு கரும்புதின்னலாம் கை
(தட்டு.
தோட்டஞ்செய்யலாம் கைதட்டு தோரணஞ்செய்யலாம்
(கைதட்டு

6. சுட்டிபிடிக்கலாம்கைதட்டு சோபனம் பாடலாம் கைதட்டு
கிட்டியடிக்கலாம் கைதட்டு கீதங்கள்பாடலாம் கைதட்டு.

7. கும்மியடிக்கலாம் கைதட்டு குதித்துப்பாயலாம் கைதட்டு
அம்மியரைக்கலாம் கைதட்டு ஆட்டங்கள் ஆடலாம்கை
(தட்டு

8. தட்டுமறிக்கலாம்கைதட்டு தாண்டியேபாயலாம்கைதட்டு
பட்டம்விட்டாடலாம் கைதட்டு பந்தடித்தாடலாம் கை
(தட்டு.

9. பந்தயம் ஓடலாம் கைதட்டு பண்டங்கள் வாங்கலாம்கை
(தட்டு
விந்தைகள்பார்க்கலாம் கைதட்டு விருந்துமுண்ணலாம்
(கைதட்டு.

16-ம் பாட்டு.

இராகம்:—சகோதரர்கள் ஒருமித்து.

வேலையின்பின் விளையாட்டு

1. பாடம்படித்து முடிந்தபின்
பக்கத்திலோர் வெளியிலே
ஓடியாட நாங்களும்
ஒன்றாய்ச் சேர்ந்துகூடுவோம்

2. மாணாக்கர்கள் ஓடியே
மகிழ்ந்து விளையாடுதல்
காணக்கண்ணும் களிக்குதே
கல்லாய்நெஞ்சும் கரையுமே.

3. நண்பரே நீரறிந்திவீர்
நாள்முழுதும் வாசித்தல்
கண்களுக்குக் கெடுதியாய்க்
கட்டாயமாய் முடியுமே.

4. மெலிந்ததேக முள்ளோர்க்கு
பேணிதேறிப் பொலியுமே
வலிகுறைந்த பாலர்க்கு
மருந்தாமென்றும் சொல்வரே.

17-ம் பாட்டு.

கும்மி. உலோபி

1. முன்னொரு காலத்திற் முட்டாளாம் லோபி
தன்னுடை ஆஸ்தியைத் தான்திரட்டி
மண்ணிலே பொன்னை மறைத்துவைத்துக்
கண்ணாலே பார்த்துக் களிகூருவான்

2. கள்ளனைப் போலவே காலையும் மாலையும்
மெள்ளவே பார்த்தபின் மீண்டும் வைப்பான்
கள்ளன் ஒருவன் கண்ணுற்றிவ்விந்தையை
தள்ளிபிருந்துமே தட்டிவிட்டான்.

3. புதைத்தவிடத்திலே போயவன் பார்த்திட,
சொத்து முழுவதும் சோரமாய்ப் போனதை
கண்டவன் தானும் கத்திக்குளறிட
அண்டை வீட்டானும் எதுரைப்பான்.

4. "பெரியகல்லொன்று புதைத்துவைத்து நீ
அரியபொன்னென்று அறியிருப்பாய்
பூமியிற் புதைத்த பொன்னுக்கும் கல்லுக்கும்
நேமியிற்பேதங்கள் நினைப்பருண்டோ?"

18-ம் பாட்டு.

அம்மானை.

1 வாசிப்பு ஓய்ந்தே வகுப்புக் கலைந்ததன்பின்
ஊசியுடன் நூலெடுத்து ஊக்கமொடு தைத்திடுவோம்

2. பாசிதெரிந்தெடுத்துப் பத்திரமாய்த் தான்கோர்த்து
காசுப்பைசெய்தே கவனமாய்ப் பின்னிடுவோம்.

3. உவமான பவளமதிற் பாங்காசப் பின்னிடுவோம்
நவமான பின்னலிலே நன்றாகப் பின்னிடுவோம்.

4. பார்த்தோர் வியந்திடவே பந்துகளும் செய்திடுவோம்
பூத்தையல் வேலை புதினமாய்ச் செய்திடுவோம்.

5 வேலை முடித்தே விளையாடக் கூடிடுவோம்
சோலை மலரெடுத்து தோரணங்கள் செய்திடுவோம்.

6. செண்டுகள் கட்டிடவே செண்பகப் பூவெடுப்போம்
தண்டுடனே பூவெடுத்துத் தார்செய்தணிந்திடுவோம்.

7. கும்மியடித்திடுவோம் கோலங்கள் போட்டிடுவோம்
பம்மியொளித்திடுவோம் பாசாங்கு பண்ணிடுவோம்.

8. பொம்மை வைத்தாடிடுவோம் பூக்களாற்சூட்டிடுவோம்
சும்மாவிருக்காமற் சுற்றிவந்தாடிடுவோம்.

19-ம் பாட்டு.

உடம்புப் பயிற்சி

அம்மானை.

1. படிப்பு முடிந்ததன்பின் பாடங்கள் ஓய்ந்ததன்பின்
உடம்புப் பயிற்சிசெய்ய ஒன்றாகக் கூடிடுவோம்.

2. யுத்தசிட்சை செய்திடுவோம் யூகமாய்ச் சுட்டிடுவோம்
சுற்றிநடந்திடுவோம் சூரரைப்போல் காட்டிடுவோம்.

3. தோற்பந் தடித்திடுவோம் தோற்காமல்வென்றிடுவோம்
கோற்பந்தடித்திடுவோம் குதித்துவிளையாடிடுவோம்.

4. ஓடி யொளித்திடுவோம் ஒற்றைக்கால் ஆடிடுவோம்
சாடி மறித்திடுவோம் தடடுக்கிளியாடிடுவோம்.

20-ம் பாட்டு.

கைவிரல்கள்

தடித்த குள்ளன் தம்பியே பெருவிரல்
அடுத்த விரலோ ஆட்காட்டி யென்பர்
நடுவி லுள்ளது நல்நடு விரலாம்
மோடியானதே மோதிர விரலும்
கோடி சுண்டெனக் காட்டுவருண்டே.

21-ம் பாட்டு.

தண்டலின் பாட்டு

1. வள்ளத்தையே ஏலேலோவலித்துக்கொண்டு ஏலேலோ
வெள்ளமதில் ஏலேலோ விரைந்திடுவோம் ஏலேலோ.

2. இருபக்கமும் ஏலேலோ இரையுதையா ஏலேலோ
பெருங்காற்று ஏலேலோ பிடிக்குதையா ஏலேலோ.

3. தோழன்மாரே ஏலேலோ துஞ்சிடாமல் ஏலேலோ
தொழவென்றால் ஏலேலோ வலித்திடுவீர் ஏலேலோ.

4.
மிகுந்திருக்கும் ஏலேலோ மீன்கணங்கள் ஏலேலோ
பகிர்ந்தெடுக்க ஏலேலோ பார்த்திருக்கும் ஏலேலோ.

5. வலியுடனே ஏலேலோ வாலிபரே ஏலேலோ
வலித்திடவே ஏலேலோ வருங்கரையும் ஏலேலோ.

6. பாடுபட்டால் ஏலேலோ பயனுமுண்டு ஏலேலோ
நாடுங்கரை ஏலேலோ நாமடைவோம் ஏலேலோ.

22-ம் பாட்டு.

நெடுங் கணக்கு

ஆறிரு அங்குலம் அடியென எண்ணாய்
அடிமூன் றுனல் அளவில் கெஜமே.
இருபான் கெஜமது இரண்டுடன் சங்கிலி
பத்துச் சங்கிலி பர்லாங் ஆகுமே
எட்டுப் பர்லாங் எண்ணிட மயிலே.

23-ம் பாட்டு.

கூட்டாஞ்சோறு.

1. சின்னச் சின்னச் சட்டிபானை சீசாவும் தானெடுத்துத்
தின்னக் கறிவகைகள் சீருடனே சமைத்திடுவோம்

பல்லவி:—உத்தரவு பெற்றபின்னே எல்லோரும்
ஒன்றாகச் சாக்குகளைச் சேர்த்தெடுத்து
பத்திரமாய்ப் பாகமது பண்ணிடவே
பாங்காகக் கூடிடுவோம் தோழிகளே !

2. நல்ல நல்ல கத்தரிக்காய் நாலுவகைக் காய்கறிகள்
எல்லோரும் பார்த்தெடுத்து ஏகமாயக் கூடிடுவோம்.

3. தென்னமரத் தோப்பினிலே சிறுமிகளாய் நாம்கூடி
பன்னுடை தானெடுத்துப் பச்சரிசி சமைத்திடுவோம்.

4. பச்சைப் பச்சைவாழையிலே பாங்காகத் தானெடுத்துப்
பச்சடி பால் தயிர்மோர் பருப்புடனே புசித்திடுவோம்

5. வட்ட வட்ட அப்பளத்தை வாசமுள்ள அப்பளத்தை
முட்ட முட்ட அப்பளத்தைமுச்சுமுட்டத்தின்றிடுவோம்

6. சின்னச் சின்ன வாழைப்பழம் சிங்கார வாழைப்பழம்
தின்னத் தின்ன வாழைப்பழம் தெவிட்டாமற் தின்றி
(டுவோம்

24-ம் பாட்டு.

தாயை இழந்த பிள்ளையின் புலம்பல்

வெண்பா.

பேணி வளர்த்தவுன் பிள்ளை மழைமுகம்
காணப் பயமெனக் காய்ந்திங்கு—வீணாக
கண்ணீர் வடித்தல் கடவுளின் செய்கையென
வெண்ணலெளி தாயா யெமக்கு.

இராகம்;—நீலாம்புரி. அடதாளம்

1. பசியெடுக்கும் நேரத்திலே பால்கொடுக்கும் தாயார்
பால்கொடுக்கும் தாயாரும் பறந்தவிட மெங்கே?

2 பக்கத்திலே படுத்திருக்கும் பட்சமுள்ள தாயார்
பட்சமுள்ள தாயாரைப் பார்க்குமிடம் எங்கே?

3, அழகழகாய் உடுத்துவிக்கும் ஆவலுள்ள தாயார்
ஆவலுள்ள தாயாரும் அகன்றவிடம் எங்கே?

4. நித்திரிக்கும் வேளையிலே நிதம்விழிக்குந் தாயார்
நிதம்விழிக்குந் தாயாரும் நீங்கிநின்ற தெங்கே?

5 நோயென்னை வருத்துகையில் நொந்தழுகும் தாயார்
நொந்தழுகும் தாயாரும் நுழைந்தவிட மெங்கே?

6. ஈயெறும்பு அண்டவிடா இரக்கமுள்ள தாயார்
இரக்கமுள்ள தாயாரும் இருக்குமிடம் எங்கே?

7. அம்மாவென்றால் ஓடிவரும் அன்புமிகும் தாயார்
அன்புமிகும் தாயாரும் அண்டைவாராதென்னே?

8. கர்த்தருடை வசனமதைக் கற்றுவித்த தாயார்
கற்றுவித்த தாயாரும் கவனமற்றதென்னே?

9. விம்மியழும் எந்தனையே விட்டுவிடத் தாயார்
விட்டுவிடத் தாயாரும் விருப்பமுற்றதென்னே?

10. அழுகைக்குரல் கேட்டவுடன் அருகில்வரும் தாயார்
அருகில்வரும் தாயாரும் அசந்திருப்பதென்னே?

11. மாசில்லாப் பாலகனை மறந்துவிடத் தாயார்
மறந்துவிடத் தாயாரும் மனந்துணிந்ததென்ன?

12. நானிலத்தில் நாதியற்று நான்வளரத்தாயார்
நான்வளரத் தாயாரும் நாட்டமுற்றதென்ன?

25:-ம் பாட்டு

இலங்கையின் சிறப்பு

வெண்பா

அன்னையோ! அன்னையோ! ஆயிரம்நாவாலுன்
பன்னருஞ் சீர்பகரற் பாலதோ—சென்னலமில்
என்னால் முடியுமோ? ஏற்றிடுவாய் மைந்தனேன்
பன்னு பழிச்சொல் மற்று.

இராகம்:—குறிசொல்தரு

கண்ணிகள்

1. உயர்ந்தமலை அகன்றவனம் உள்ள தென்னிலங்கை
பயந்தருவெம் மதகரிகள் பலுகிவரும்நாடு

2. பரந்தவெளி நீண்டநதி பாயும் வளநாடு
மாஞ்செடிகள் தீங்கனிகள் மணஞ்செறியும் நாடு.

3. காடியுடன் சிறுத்தையுமே காத்திருக்கும் காடு
நரிகளுடன் மான் மரைகள் நயந்திருக்கும் காடு.

4. தென்னையுடன் பனைவளர்ந்து திருப்திதரும் நாடு
அன்னந்தரும் நீள்வயல்கள் அடுத்திருக்கும் நாடு

5. வாழைபலா மாமரங்கள் வளர்ந்திருக்கும் நாடு
ஏழைகளும் கட்டமின்றி யிருந்துவரும் நாடு

6. குதிரையுடன் பாலைமரம் மூங்கில் வளர் நாடு
முதிர்ந்தகரு வாலியண்டை முயல்பதுங்குங் காடு.

7. நறுமணங்கள் கமழுமந்த நலமிகு கிராம்பு
கறுவாவுடன் ஏலரிசி காடிருக்கும் நாடு.

கொழும்பு தமிழ்ச் சங்க நூல

8. ஈடில்லாக் குளிர்ந்தஜல அருவிமிகவுண்டு
சூடுள்ள கேணிஜலம் சுரந்துவரும் நாடு.

9. வாவியண்டை மயிலினங்கள் வாழ்ந்திருக்கும் நாடு
கூவுகின்ற குயிலுடனே குரங்கிருக்கும் நாடு.

10. பெருங்காற்றும் கொந்தளிப்பும் பெருகிவரும் நாடு.
மரக்கலங்கள் நாடிவரும் வர்த்தகரின் நாடு.

11. சூழ்ந்திருக்கும் ஆழியிலே தொகைதொகையாய் மீன்கள்
வாழ்ந்திருக்கும் ஆமையுடன் வலைஞர் மனமாற.

12. எத்தலமும் மறைந்திருக்கும் இரத்தினங்கள் மெத்த
நித்திலத்தைக் கொப்புளிக்கும் நீள்கடல்சூழ் நாடு.

13. மரகதமும் நீலக்கல்லும் மாணிக்கமும் உண்டு
இரத்தின வைடூரியங்கள் எடுக்குமிடமுண்டு.

14. காரீயம காக்கைப்பொன்னும காணுமிடம உண்டு
ஆராதனை செய்வோர்க்கு ஆச்சிரமம உண்டு

15. புண்ணியமா சேத்திரங்கள் போற்றிடவே உண்டு
எண்ணிறந்த கோவில்களும் ஆலயமும் உண்டு.

16. இயற்கைநலன் செயற்கைநலன் வாய்ந்திருந்த நாடு
தியக்கர்தரும் படைகள்வர செயலழிந்த நாடு.

17. அனுமந்தன் எரித்ததென்ற அழகுபெறும் நாடு
சினமிகுத்தோர் கையாலே சீரழிந்த தன்று.

18. சோழியரும் பாண்டியரும சூறையிட்ட நாடு
பாழடைந்து போனதுவே பாவிகளால் நாடு.

19 மாடங்களும் மாளிகையும் மதிலிடிந்து வீழ
காடுவந்து மூடினதே காவலர்தான் மாழ.

20. மேற்றிசையோர் ஆட்சியிலே மேன்மையது மீள
நாற்றிசையும் தொனித்திடுதே நலமடைந்து யின்று.

21. காடுவெட்டித் தேயிலையைக் காப்பியுடன் தேடி
நாடெங்கும் ரபருடனே நாட்டினர்காண் நன்று.

22. கொக்கோவுடன் சிங்கோனா கூடவளர் நாடு
பக்கமெல்லாம பயிர்வகைகள் பச்சென்றுள்ள நாடு.

23. வர்த்தகரும் செல்வர்களும் பலிந்திருக்கும் நாடு
சித்திரரும் சிற்பிகளும் செறிந்திருக்கும் நாடு.

24. சாலபட்சி போலெழுந்து காந்தியுடன் தோன்றி
வாலிபமும் தானடைந்து வளருதெங்கள் நாடு.

26-ம் பாட்டு

வனவாசிகள்

தெம்மாங்கு

1. காடை கூகை கானகத்தில்—அங்கு
ஓடி மறைந்து வாழ்ந்திடுதே.

2. மயிலும் குயிலும் மரங்களிலே—அங்கு
உயர விருந்து கூவிடுதே.

3. கிளியும் புறவும் கிளைகளிலே—அங்கு
களியோடு தான் பார்த்திடுதே.

4. உடும்பாவம் ஓணான்களும்—அங்கு
உடம்பால் நகர்ந்து ஊர்ந்திடுதே.

5. மானும் மரையும் பக்கங்களில்—அங்கு
கானம் நோக்கி ஓடிடுதே.

6. கருப்புக் காடி குட்டியுடன்—அங்கு
கருத்தாய்த் தேனைத் தேடிடுதே.

7. சிரத்தையுடனே சிறுத்தையுமே—அங்கு
பருத்தக் குரங்கை நாடிடுதே.

8. முயலுடனே மொழல்களும்—அங்கு
வயலை நோக்கி யோடிடுதே.

9. கானக்கோழி காட்டெருமை — அங்கு
கானாற்றைத் தேடிடுமே.

27-ம் பாட்டு

பொம்மைத் தாலாட்டு.

1, மேனாட்டுப் பாவையரோ மேன்மைச் சிகாமணியே
நானாட்டும் தொட்டிலிலே நன்கயர்ந்து கண்வளராய்.

2, கடைகடையாய் நான்தேடிக் கண்டெடுத்த கண்மணியே
கடைக்கண் நீ மூடக் களிப்புமிகப் பொங்கிடுதே.

3 கூந்தல் முடித்துவிப்பேன் குஞ்சங்கள் கட்டிடுவேன்
ஏந்தி அணைத்திடுவேன் ஏங்காமல் நீயுறங்காய்.

4. மெச்சிடவே விந்தையதாய் மேன்மையுறு தொட்டிலொ
தச்சர்களாற் செய்துவித்தேன் தங்கமே நீயுறங்காய்(ன்று

5. ஆடைகளோ அந்தமுற ஆரணங்கே செய்திடுவேன்
நாடி நலந்தெரிந்து நன்னகைகள் செய்திடுவேன்

6. நீலத் துணியெடுத்து நீளுடுப்புச் செய்திடுவேன்
நாலுநிற நாடாவை நான்சுற்றித் தைத்திடுவேன்

7. வருண மணிகொண்டே மாலைகள் தான் செய்வித்து
சொர்ணமணி மாலையுடன் பூட்டுவிப்பேன் உந்தனுக்கு

மதலைப்பகுதி முற்றிற்று.

பாலியர் பகுதி

28-ம் பாட்டு

நேரக் கணக்கு

அறுபது விநாடி ஆவது நிமிஷம்
அறுபது நிமிஷம் ஒருமணித் தியாலம்
இருபான் நான்கு மணிதான் சேர்ந்தே
ஒருநாள் ஆகும் இரவும் பகலும்
நாட்கள் ஏழு நவின்றிட வாரம்
நாட்கள் முன்னூற் றறுபான் ஐந்து
கூட்டியே ஆண்டெனக் கொள்வர் பின்னே.

29-ம் பாட்டு

குழந்தையும் தமையனும்

1. மருண்ட மகவே
வெருண்டிடா விள்ளாய்
உருண்டை விழினைய
உருட்டுவ தென்னோ?

2. நித்தமும் உன்னை
முத்தமே செய்வோன்
மெத்தப் பெரிதாய்ப்
புத்தியிற் பட்டோ?

3 முன்னரோ யானும்
உன்னையே போல

கன்னம் பருத்த
சின்னச் சிசுவே.

4. சூரிய காந்தியை
நேரிய வுன்முகம்
காரிருள் நீக்கிடும்
சூரியச் சோதியே!

5. நாட்டில் முளைக்கும்
வாட்டமில் பூக்கள்
கேட்டு மழகை
வாட்டும் வதனாய்.

30-ம் பாட்டு.

கிளிப்பிள்ளை.

1. காட்டிற் களித்துமே
கூட்டமாய்க் கூடியே
பாட்டை இசைத்திடும்
கூட்டுக் கிளியே.

2. பச்சை யிறகொடு
பச்சிலைச் சோலையின்
உச்சி உறைந்துநீ
அச்சமற் றுடினாய்,

3. நார்தம் நடக்கை
தெரிந்திடத் தேடியோ
விரிவலை தன்னில்
விரைவில் விழுந்தாய்?

4. வஞ்சக மின்றி
தஞ்சமே தந்தேன்
கொஞ்சுக் கிளியே
கொஞ்சமும் அஞ்சேல்.

5. வாயால் வசனம்
நீயும் நிசழ்த்த
காயும் கனியும்
நேயா அளிப்பேன்.

31-ம் பாட்டு

வெள்ளப்பெருக்கு

1. நீரால் நிறைந்த
காரதைக் காற்று
தாரை யதாகப்
பாரினிற் பெய்திட,

2. ஊற்றுகள் ஒக்க
நாற்றிசை நின்று

ஆற்றில் அணையக்
காற்றது மோத.

3. வரையது மீறிக்
கரையைக் கடந்து
பெரிய பெருக்காய்ப்
பெருகிப் புரண்டு,

4. ஏகமாய் எங்கும்
வேகமாய் வெள்ளம்
ஏக எமன்போல்
ஆகிற் றழிவே.

5. வீடுகள் வீழ்ந்தன
ஆடுகள் மாடுகள்
வாடியில் மாண்டன
வாடினர் மக்களே.

32-ம் பாட்டு.

மேரியின் ஆட்டுக்குட்டி.

1. மேரியின் ஆட்டுக் குட்டிக்கு
மேனியின் ரோமம் வெண்மையாம்
மேரிதான் எங்கே சென்றாலும்
மறியுங் கூடச் செல்லுமாம்,

2 மேய்ப்பன் எங்கே போனாலும்
மேய்ச்சல் விட்டுமே நாங்களும்

மூப்பன் பின்னரே ஏகுவோம்
மூத்தோர் சொல்லதைத் தட்டிடோம்.

3. காலையில் எழுந்தே நாங்களும்
வேலைகள் சோலிகள் முடித்தபின்
காலி யான நேரத்தில்
பாலியர் கூடிச் சேர்ந்துமே,

4. வாதை யுற்றிடும் மாந்தர்க்கு
வருவோம் துணையாய் நாங்களே
பாதை காட்டுவோம் நாங்களும்
பார்வை யற்றிடு மாந்தர்க்கு.

5. வயது சென்ற மாந்தர்க்கு
வருவோம் துணையாய் நாங்களும்
பயந்து செல்லும் மாதர்க்கு
பரிந்து தவுவோம் நாங்களும்.

6. மாரியின் காற்று வீசினும்
காரிருள் வந்தே மூடினும்
சீரது சற்றும் பிசகிடா
போதைக் காத்து நடப்போமே.

33-ம் பாட்டு.

சிருட்டிகர்த்தாவுங்குத் துதி

1. சூரியன் சோதியாய்ச் சொலித்திடப்
பாரிலே பூண்டுகள் பயன்தர
மாரியும் நாடதிற் பெய்திடச்
சீராய்ச் செய்தவா போற்றுவேன்.

2. மண்ணோர் வாழ்ந்திடத் தரையையும்
மண்ணில் மல்கிடும் பூண்டையும்
எண்ணில் மாக்களும் படைத்திடும்
விண்ணோன் பாதமே போற்றுவேன்.

3. ஆதரித்திட அப்பனை
மாதா வோடுமே தந்தனை
சாதம் நித்தமும் ஈந்துமே
பாது காத்தவா தோத்திரம்

4. ஆதித் தேவனே தோத்திரம்
நாதி யற்றவர் நாதனே
சோதிச் சூரியா தோத்திரம்
ஏத மற்றவா தோத்திரம்.

34-ம் பாட்டு

காற்றின் சேட்டை

காற்றைக் கண்டோர் காசினி யுளரோ
ஆற்றலா யடித்து ஆடிடுஞ் சோலையில்
கூரை வீட்டைக் குப்புறத் தள்ளி
வேரொடு மரத்தை விழவே சரித்து
ஆழியின் நீரதை அலையாய்த் திரட்டி
சூழுங் கரையிற் றூக்கி மோதும்.
கடலிற் கப்பலை கலங்கத் தாக்கி
அடலுட னெழுந்து அவனிமேற் செல்லும்
இரவி யெழுப்பும் இருண்ட காரை
பரவச் செய்து பார்மே லூற்றும்
நாற்றிசை வீசி நாற்றம் போக்கும்
காற்றைக் கண்டோர் காசினி யுளரோ.

35-ம் பாட்டு

பிறந்த நாள் சோசியம்

எங்கணுமூடிய இருளை நீக்கும்
திங்களிற் பிறந்தோன் சிறந்த முகத்தோன்
செவ்வா யோடும் சிரிமுகத் தோடும்
செவ்வாய் பிறந்தோன் செவ்வை மனத்தோன்

நிதமும் வேண்டி நிமலன் அருளினும்
புதனிற் பிறந்தோன் புன்ணே யடைவான்
தயாளி வயிற்றிற் தரித்தோன் ஆயினும்
வியாழன் பிறந்தோன் வேற்றிடஞ் செல்வான்
வெள்ளியும் பொன்னும் வேண்டிய தெல்லாம்
வெள்ளியிற் பிறந்தோன் விருப்புடன் ஈவான்
பனியிலும் மழையிலும் பட்டப் பகலிலும்
சனியிற் பிறந்தோன் சலியா துழைப்போன்
ஞாயிறு பிறந்தோன் ஞால மதிலே
நேயமும் மகிழும் நிறைந் திருப்பானே.

36-ம் பாட்டு

காகம்

1. விண்டோய் சோலையில் வீசிடும்
கொண்ட லாட்டிடும் கொம்பிலே
அண்டங் காகமும் அமர்ந்திட
கண்ட எனுளங் களிக்குதே.

2. பாதை யற்றவான் பறந்துமே
காத மெத்தனை கடந்தனை?
சேத மற்றநீ சென்றிட
வேறு பின்னினிக் கூறுவாய்.

3. நாடு காடுகள் நகர்களும்
வீடு வீதிகள் வயல்களும்
தேடி நீயுயர்ந் தேகையில்
நாடிக் கண்டதை நவிலுவாய்.

4. வாகாய் வந்துரை செய்யவோ
காகா வென்றுமே கத்தியே
வேக மிஞ்சிடு காற்றிலே
ஆகா யத்திலே ஆடுவாய்.

5. பகிர்ந்து தின்றிடு பட்சியே
மகிழ்ந் திருந்துநீ கத்திட
நிகழ்ந்த சம்பவம் உரைத்திடாய்
உகந்து நானதைக் கேட்கவே.

37-ம் பாட்டு

பரட்டைத் தலையன்

பம்பை முடியினன் பரட்டைத் தலையினன்
தும்புக் கட்டையைத் தூக்கித் திரிபவன்
அந்தோ! அழுக்கணி அவன்நிலை பாராய்
எந்தச் சீப்பும் இட்டே அறியான்
காமதைப் பார்க்கில் கரித்தொழில் என்பாய்
விரலதின் நுனிகளில் மிகுந்திடும் மாசே

களிப்பிற் காலம் கழித்து வருவான்
குளித்துக் கழுவிட கொஞ்சமும் நினையான்
மேனியில் அழுக்கு மெழுகெனப் படிந்தே
ஊனெழு நாற்றம் உரைப்பதிற் பயனென் ?

38-ம் பாட்டு

பிறவிக் குருடன்

தெளிந்த பார்வைச் செல்வரே வந்து
வெளிச்சம் யாதென விளங்கக் கூறுமின்
ஒளியின் நன்மையை ஒளியா திப்போ
வெளியாய் இயம்புவீர் விழியிலா னெனக்கே.
இரவியின் ஒளியை யேற்றிப் பேசுவீர்
இரவும் பகலும் எப்படி யாகுமோ ?
வெய்யோன் எரிக்கும் வெப்பம் உண்டதை
மெய்யா லுணர்ந்து மெய்யென் றறிவேன்.
நித்திரை எனக்கு நிகழ்த்திட இரவாம்
நித்தியம் விழித்தால் நிகழ்வது பகலே
பீடிலான் எனவே பெருமூச் செறிவீர்
தேடியான் தியங்கேன் தெரியா நலத்தை.
எட்டாப் பழத்திற் கேமாக் தேயான்
கொட்டாவி விடடுக் கொண் டிருப் பேனோ?

39-ம் பாட்டு

சேரிட மறிந்து சேர்

மடமை மிகுந்த மடங்கற் குட்டி
அடவில் தோழமை அணைய விரும்பி
தாழ்ந்த கர்த்தபச் சாதியை நாடி
வாழ்ந்து களித்து வந்திடு நாளில்
பன்றி யோடு பழகின கன்றும்
நன்றில் தீனை நச்சுவதே போல்
சிங்கக் குட்டி செவியிற் தவிர
அங்க முழுதும் அத்திரி யாகி
சத்தமும் மாறச் சபையி லுள்ளோர்
நித்தமும் வாழ்த்தி நிபுணன் என்றே
செப்பிடும் துதிகள் செவியிற் கேட்டே
ஒப்பில் பெருமை உண்டுபட் டிடவே,
குரவ ரண்டை கோளரி சென்று
விரகைக் காட்ட விசையாய்க் கத்த
கேசரி கேட்டு "கெட்டது காரியம்
நீசரைச் சேர்ந்து நீசனே ஆனாய்
காண மின்றி கனவ பாராட்டும்"

வீணர் போல்நீ விளக்கினாய் குணமெனத்
தந்தையை நோக்கிச் சாற்றிடும் குட்டி
''எந்தாய்! கேளீர் எந்தன் குரலை
கர்த்தபச் சபையில் கனம்பர் மெச்சினர்''
வித்தக மேலோய்! வெறுத்தல் என்னென
சிங்க மப்போ சிரிப்புடன் சொல்லும்
''மங்குவர் மூடரே மடையர் புகழால்
முகமனாற் பலர்தாம் மூழ்குவர் பெருமையில்
அகமதிற் தக்கோர் அப்புகழ் வெறுப்பரே
கீழ்மகார் மெச்சும் கெலிப்பை மேலோர்
ஆழ்மதி யதனா லசடென அறிவரே''.

40-ம் பாட்டு

சகசண்டி

கிராம மதிலே கெடுதி விளைக்கும்
இராம னென்ற இடும்பன் ஒருவன்
குளத்தில் வந்து குளிக்குஞ் சிறுவர்
களைந்து வைத்த கந்தையி லெங்கும்
சேற்றை யள்ளித் தெளித்து நீரையும்

ஊற்றிப் பலபல ஊறுகள் செய்வான்
தடுத்துப் பேசுந் தனக்கிளை யோரை
முடுக்கிக் காதை முறுக்கி வைப்பான்
இம்மிசை யடைந்த இளைஞர் யாரும்
தம்முடை நோவைத் தாய்க்குஞ் சொல்லார்
சொன்ன பேரைத் தொலைத்தே விடுவதாய்
முன்னரே உருட்டி முரணது செய்வான்.
இப்படிப் பன்னாள் இடும்பொடு கூடிய
தப்பிதஞ் செய்துந் தப்பி வருங்கால்,
சிறுவர் நீந்தித் தெண்ணீர் ஆடலைக்
முறுவ லோடு முன்னின்று பார்த்த
குலமகன் ஒருவர், குறும்பன் வந்து
சலமொடு சேற்றைத் தன்கையி லள்ளி
அடங்கலுந் தெளித்து ஆடிடக் கண்டு
அடங்காச் சினமது அகத்தில் மூள
இராமனைப் பிடித்தே இழுத்துத் தள்ளிச்
சிரமதிற் குட்டிச் சிக்கெனத் தூக்கிக்
''குளித்து வா' வெனக் குளத்தி லெறிந்தார்.
இளைஞரே நீர் இதனா லறிமின்
வினையை விதைத்தோன் வினையை அறுப்பான்
தினையை அறுப்பவன் தினைவிதைத் தவனே.

41-ம் பாட்டு.

அண்டங் காகம் மூன்று கக்கினோன் கதை.

" அண்டிக் கேளும் அற்புதக் கதையிதை
அண்டையி லுள்ள ஊரில் ஒருவன்
அண்டங் காகமாம் அவற்றில் மூன்றைத்
தொண்டையி லிருந்து தோற்றுவித் தானென"
மற்றவன் " தம்பி ! மந்திர மோவிது
வித்தையில் வல்லான் விந்தை யோவிது
பத்தியில் மிக்கப் பத்தனோ அவனும்
எத்தனோ பித்தனோ எத்தன்மை யோனென",
" பிணியாற் பீடிக்கப் பெற்றுளா னொருவன்
பணிவுள குடியவன் பார்த்தவன் தானே
கண்டதை உரைக்கக் காதாற் கேட்டவன்
அண்டையி லுண்டு அறியலாம் வாவென"
இருவரும் சேர்ந்தவன் இருப்பிடம் சென்றனர்
வரவை யேற்றவன் வந்தோர் வினவி
" இரண்டே காகம் இருந்தது உண்மை
பரிந்தே எனக்கு பகர்ந்தவன் உண்டென"
மூவரும் கூடி முக்கிய சாட்சியை

மேவிச் சேர்ந்தே வினவிட அவனும்
" நீவிர் உரைப்பதில் செமுண் டெனினும்
பாவி கக்கிய பட்சி ஒன்றே.
அவன்தான் உரைக்க அறிந்தனன் யானென"
அவர்கள் நால்வரும் அயலூர் வந்து
அவனை யடுத்தே அழைத்தவர் வினவ
அவனோ மலைத்து அறைகுவா னப்போ
காகம் கக்கல் கனவிலு மறியேன்
சோகைமே விட்டுச் சுகவீ னமாகக்
காக மதுபோற் கறுப்பாய்க் கக்கினேன்
ஆகமச் சத்தியம் அதிசய மிதிலென்?

42 -ம் பாட்டு.

என் தாய்

1. தன்னைப் பேணக் கருதாமற்
தயவு செய்த மாதாவை
என்னைப் பெற்ற தாயைத்தான்
இயலு மட்டும் போற்றுவேன்
சொன்ன எந்தப் பணியையும்
சுணக்க மொன்று மில்லாமல்
சொன்ன வாறு செய்வேனே
தொழுது போற்றி மகிழ்வேனே.

2. அருந்திச் சான்ற தந்தைதானும்
அருளுஞ் சொல்லைக் கேளுங்கள்
வருத்தமாய்நான் சுரத்தில்முன்
வருந்திக்கிடந்தங் குழல்கையில்
கருத்தி னோடு தாயவடான்
கங்கு லென்றும் பாராமல்
ஒருத்தி யாக வெனைக் காத்தே
உயிரை மீட்டுத் தந்தனளாம்.
3. சணமும் என்னைத் தனிமையாகத்
தயங்க விட்டுப் போகாமல்
உணவை விரும்பும் போதெல்லாம்
ஊட்டி அமுதை யுய்யவைத்தாள்
பணமி தென்றும் பாராமற்
பட்டுப் பணிகள் அணியவைத்தாள்
குணமி குந்த தாயாரைக்
கும்பிட்டேத்தி வாழ்வேனே.

43-ம் பாட்டு.

நதி

1. கோடுள கேழல்கள் கூடிடும் சோலைகள்
காடுகள் மேடுகள் கன்மலைப் பாருள
பீடுறு வெற்பதைப் பிரியே வந்துபின்
ஓடைக ளாகவே ஊறியே வாரேன்.

2 கானலில் வாடிடும் காடுறு வேங்கையும்
வானரக் கூட்டமும் வந்தெனைச் சேருமே
மானுடன் வேழமும் மேதியின் மந்தையும்
ஏனமோ டேகிடும் எய்ப்பதைத் தீர்த்தே.

3. கொஞ்சிடு கிள்ளையும் கூட்டமாம் புட்களும்
மஞ்சுறு மேனியை வந்திவண் கோதிடும்
மஞ்சள் பூசிய மாதரும் மக்களும்
மஞ்சனம் ஆடியே மாசிலா ராவர்.

4. நாதமே செய்துயான் நண்பனே! ஓடுழி
கீதமே கேட்டிடக் கிட்டிநீ வந்திடாய்
ஓதமில் வாடிடும் ஊர்ப்பிர யாணிகள்
ஏதமில் நீரதை வாருவர் மண்ட.

5 காற்றது வீசவே கண்டதும் பின்னிடா
தாற்றலாய்க் கொந்தளித் தார்த்துமே நிற்பனுன்
ஆற்றிரு பக்கமும் அந்தமாய் வேயயான்
சாற்றுவர் யாவரும் தாரெனப் போற்றி.

6. தீய்ந்திடும் பாரது தீம்புனற் பெற்றிட
யாய்ந்திடும் புற்பயிர் வாய்ப்பதாய் ஓங்கிட
மேய்ந்திடும் மாவினம் வேதனை நீங்கவே
பாய்ந்திடு வேன்மிகு பாக்கிய மீந்தே.

7. சாலிற் கண்டிடும் சாரமாம் மண்ணதை
வாரியே தூக்கிம கிழ்ந்துகொண் டேகியே
பாரெலாம் தூவிடப் பைம்பயி ரோங்கிடும்
நீரது பாய்ந்திட நீள்கதிர் வாய்க்கும்.

44-ம் பாட்டு.

அரசனும் சிலந்திப் பூச்சியும்

1. மன்னன் ஒருவன் மகிழ்ந்தரசு செய்துவந்தோன்
ஒன்னார் படைவர ஊர்விட்டுத்— தன்னந்
தனியே வனக்குடில் தங்கித் தவித்தான்
இனியா ரெனக்குதவி யென்று.

2, எத்துணை போர்தான் எதிர்த்துப் புரிந்திட்டும்
சத்துரு பட்சமே சார்ந்திடச்—சித்தியும்
மத்திற் கடைதயிர்போல் வாடும் நிருபனங்கு
நித்திரை யற்றான் நினைத்து.

3. சித்திர வேலைச் சிலந்தி ஒருநாளங்
குத்திரம் நின்றுவீழ்ந்து ஓரிழையிற் —தொத்தி
உயர்ந்து செலமாட்டா துயங்கித் தவித்தங்
கயர்ந்திடலைக் கண்டான் அவன்.

4 தொல்லையி லாழ்ந்தங்கு தொங்கின செந்துபின்
மெல்லிய நூலில் மெதுவாய்மேற் —செல்லலை
அல்லல் பெருகிய ஆண்டகை நோக்கினன்
சொல்லில் வியப்பிற் றொடர்ந்து.

5 நோக்குங்கால் அச்சிலம்பி நூல்வழுக்கி மேனின்று
பார்க்குள் விழும்பின் பதறாது —பார்த்தேறும்
ஒன்பான் முறையிவ்வா றேயாம லேமுயன்று
இன்பான் அடைந்த திலை.

6. மீண்டு மொருவிசை மேலே நகர்ந்தது
நீண்டிடும் நூல்வலை நேர்வரத்— தாண்டியோர்
வீச்சிற் றனதில் விருப்புடன் சேரவே
ஆச்சரியம் கொண்டா னரசு.

7. மானிடரும் இவ்வாறு மாளாத நெஞ்சினராய்
மானந் திகழூக்கம் மன்னுவலி — ஞான
முறப்பெற்றே யென்வரினும் ஓதுமடி கொள்ளார்
சிறப்புறுவர் என்றுமே தேர்ந்து.

8. காவலன் பின்பு கருத்துடன் சேனைகள்
ஆவலாய்ச் சேர்த்தான்; அணிவகுத்தான்— ஏவியே
மேவலர் கூட்டத்தை வென்றே புரந்துநின்றான்
பாவலர் போற்றிடப் பார்

45-ம் பாட்டு

குருக்கள் வளர்த்த கிளி

மஞ்சை என்ற மாநகர் தனிலே
எஞ்ச லிலாத ஈசன் கோயிலிற்
பஞ்ச வர்ணப் பைங்கிளி யொன்றை
கொஞ்சி வளர்த்தார் குருக்களில் மேலோர்
குருவை வணங்கிக் கும்பிடு வோர்கள்
பெருமை பூண்டு பெரியோன் யானென
அருகி லுள்ள ஆசன மொன்றில்
அருமைக் கிளிதான் அமர்ந்திடக் காண்பர்.
பூசை செய்யும் போது மக்கிளி
பேசையின் மீது வீறுட னிருந்து
நாமே பெரியோர் நாட்டினி லென்று
சாமியின் முகத்தைச் சரிந்து பார்க்கும்.
முத்தியை நாடுவோர் முறையே ஈயும்
பத்தியின் பலிதனை பார்த்துள மகிழும்.
சாமியு மோர்நாள் ஸ்நானம் செய்யவே
தாமணி ஆழியைத் தரையில் வைத்து

எண்ணை தேய்த்து இருக்கும் வேளை,
கண்ணிற் தென்படக், கல்பதி மோதிரம்
அண்டை யிருந்த அருமைக் கிளிதான்
கொண்டதைத் தன்னின் கூட்டிற் சேர்த்ததே.
மோதிர மிழந்த முதற்குரு வான
ஆதிரான் அப்போ அங்கு மிங்கும்
ஆழியைத் தேடி அலமந்து பின்னும்
ஊழியர் தம்மை ஒக்க அழைத்து
மூலையிற் தேடினர் முடுக்கிற் தேடினர்
சாலையிற் தேடினர் சந்திற் தேடினர்
பெரியரைச் சிறியரைப் பெண்களை ஆண்களை
பரீட்சனை செய்தும், பயனற் றிடவே
குருக்கள் தாமும் குறிசொல் வோரை
சுறுக்கென வழைத்துச் சோதனை செய்ய
மையிட் டவரும் மயங்கி நிற்க
செய்வதொன் றின்றி தியங்கும் குருக்கள்
நேர்த்திக் கடன்கள் நேர்ந்தே பின்னும்
பார்த்தவ ரேவரும் பயமுற் றிடவே
சோரனைச் சபித்துச் சொல்வா ரப்போ

“தாரணி பீதவன் தமருடன் அழிக
நித்திரை தன்னில் நீறாய்ப் போக
புத்தியே மடிந்தவன் புகைந்து போக
காளியுங் கூளியும் கனவிலு மவனைக்
கோளது செய்து குடியது கலக்க
விழுங்கு முணவது விஷமதே யாகி
அழுங்கல் விழைத்தே அடியொடு மாய்க்க
இருப்பிலும் நடையிலும் எடுப்பிலும் போக்கிலும்
வருத்தமே யுற்று வாடிட” வென்றார்
நாட்கள் பலசெல நலிந்தில ரெவரும்
வாட்ட முற்று வதங்குவ ரிலரால்
பிழையது செய்தோன் பின்னை யாரென
அழுவதே போல் அரற்றினர் யாவரும்
கொஞ்சுக் கிளிதன் குஞ்சினை யிழந்து
கொஞ்சம் நொண்டிக் கூனது வளைந்து
வாடி யிறகை படக்கிவைத்து
ஆடி பாடி அங்குறக் கண்டார்.
அந்த மிருந்த அக்கிளி நிலையை
சிந்தனை யோடு சிலர்தாம் பார்த்து

கையு மெய்யுமாய்க் கண்டோம் கண்டோம்
கையனைத் தெய்வம் காட்டிற் றென்றார்
பஞ்ச வருணப் பைங்கிளி யப்போ
அஞ்சி யடங்கி அவர்களை யழைத்துக்
கூட்டி யேகிக் கூட்டின் மத்தியில்
காட்டிற் றங்கே கணையா ழியைத்தான்
கொண்டு போயவர் குருவிடங் கொடுத்துக்
கண்ட யாவையுங் கனிவுடன் கூறக்
குறையது செய்துங் குற்ற முணர்ந்தே
கறையது நீக்கின் கடவுள் தாமும்
இரக்கமாய்ப் பாவியை ஏற்பது நிசமால்
உரைத்த சாபம் ஒருங்கு நீங்கிட
உருக்க முடனே உபாதியை நீக்கக்
குருக்க ளப்போ கூறினர் மந்திரம்
மந்திரங் கூறி மன்னிப் பீந்திட
முந்திய பீடை முற்றும் நீங்க
பொட்டந் தலையை மூடிடத் தூவி
சட்டெனப் பெருத்துச் சரீரம் விளங்க
நிறைவுறச் சிறகு நீண்டு வளர
குறைவற வாலுங் கூத்தா டியதே
ஆகிலுங் கிளிதான் அன்று தொடங்கி
யோகியைப் போல யோக்கிய மாகத்

தோமில் நடையொடும் தூய குணனொடும்
சாமியைத் தொழுவது சாலமும் நன்றெனப்
புத்தி யுடனே பணிந்து வந்திடப்
பத்த ருடனே பரகதி யுற்றதே.

46-ம் பாட்டு.

கார்காலக் கோஷ்டம்.

1. இடியது முழங்கிட இயங்க மின்னலும்
மடிவுறு நிலமதில் வடகீழ் வீசிடத்
திடமுடன் நின்றுமே தென்மேல் ஆர்த்திட
கடலிலே திரையெழக் கலங்கும் கப்பலே,

2. கறுத்திடும் முகிற்குழாம் கலைந்து காற்றினால்
வறத்தல்கொள் புவிதனில் வளஞ்செய் நீரதை
இறைத்தன மழையென இரைந்தே ஓடியே
நிறைத்தன குளமொடு நெடுங்கால் முற்றுமே.

3. ஆறுடன் குளங்களும் அணைகள் மீறியே
வீறுடன் உருட்டியே வீட்டைப் பேழையை
வேறுள பொருளொடு விலங்கு மக்களைச்
சீறியே வலியொடு சிந்திற் சேர்த்தன.

4' பாதைகள் அழித்தன பயத்தை யூட்டின
ஓதையாய்த் தரையெலாம் உருண்டே ஓடிபின்
வாதையை விளைத்தன வரம்பில் கட்டமும்
சேதமு, மிழைத்திடும் செருநர் மானவே.

47-ம் பாட்டு.

குளவியுந் தேனீயும்

1. உளங்கொள் மலரின் தேனை உவந்தே அருந்திவீணோ
ஞளங்கு குளவி யொன்று சுறுக்கிற் தேனைச் சேர்க்கும்
களங்க மற்ற ஈயைக் கண்டு "நேசா வுரைப்பாய்
விளங்க மண்ணோர் உன்னை விரும்பி அணைப்ப தென்னோ

2. பொன்னைப் போன்ற அங்கப் பொலிவு எனக்கு முளதே
உன்னைப் போல யானு முருவிற் சிறந்தே யிருக்க
என்னை எள்ளி உன்னை யேற்க உளதோ நிமித்தம்?
இன்னங் கூற உண்டே யிருப்பாய் சிறிதிங் கிசைந்து.

3. நந்த வனத்தில் நல்ல நறும்பூஞ் செடிகள் நிறுவி
அந்த மாரும் இல்ல மமைத்தே உனக்குத் தருவர்.
சொந்த மாக நானே சுயமாய்ச் சமைத்த மனையைப்
புந்தி யிலாத மாந்தர் பொருது சிதைத்தல் தகுமோ?"

4. அண்டி நீகே ளெனவீ "அன்பை விதைத்தோர் அறுப்பர்
கண்டாய் அன்பே விடத்தை கறக்கும் கொடுக்கே வுனக்கு
மண்டு தீங்காம் யானோ மதுர மளிக்கும் நறவம்
கொண்டு கொடுப்பேன்" என்று கூறிச் செலுமால் விரை
(ந்தே.

48-ம் பாட்டு

பொன்யுகம்.

"கோதறு மக்காள் ! கூறு வேன் கேளீர்
போதகர் போற்றிடும் பொன்யுகந் தனிலே
காப்பவர் இலாமலே கவலையற் றிருப்பர்
மூப்பர் இலாமலே முழுபெயர் இருப்பர்
தானை யிலாமலே தைரிய மாகவே
சேனை யிகழ்ந்தவர் சேதமற் றிருப்பர்
சாதிகள் யாவுஞ் சச்சர வின்றி
மேதினி மீதில் மெச்சிட வாழ்வர்
தீர்ப்பதை அஞ்சித் திகிலுடன் நிற்கும்
சார்பினர் கூட்டஞ் சகலமு மற்று
வியாச்சியம் வழக்கு வீணதாம் வம்பு
நியாய சபையும் நீக்கியே வாழ்வர்
கலப்பை யினாலே காயப் படாத
நிலத்தில் கதிரும் நிறைவுடன் வளரும்
நடுவோ றின்றி நற்கனி மிக்க
வடிவொடு காப்க்கும் மரங்கள் எங்குமே."

49-ம் பாட்டு.

கோணையும் மனிதனும்.

1. மடியிலே வந்தமர் மகிழ்ந்து பிள்ளையே
இடியொடு மின்னலே இயங்க இன்றுபோல்
கடுமழை பெய்திடும் கரிய தோரிரா
நடுவிலே நடந்ததை நவிலக் கேட்டிடாய்.

2 உவப்புடன் நீயிதை உரைக்கக் கேட்டபின்
சிவத்திடும் வாயதால் சென்னி முத்திநீ
உவத்தலைக் காட்டுவாய் உன்தன் தந்தையும்
தவித்தனன் செல்திசை தப்பி யோரிரா.

3. மறமிகு வேடுவர் மலிந்த காடது
மறைவென விலங்குகள் மல்கும் வெவ்வனம்
உறைவிடம் தேடியே செல்ல ஒன்றியாய்
குறைவுற வந்ததே கொடிய கங்குலும்.

4. பட்டிடு காலிலேல் படுமென் றோதுவர்
தட்டியுந் தடவியும் தளர்ந்து செல்கையிற்
கிட்டின மழையதால் கிளரும் காற்றதால்
எட்டின பருவரல் இயம்பற் பாலதோ?

5. அப்பெரு மாருதம் அடித்து வீசிட
கோப்பெனத் தருக்களே சோலை எங்கணும்
கொப்பொடு கொடியொடு கூடி வீழ்ந்தன
தப்பினேன் என்றொரு தாணு வண்டினன்.

6. ஒதுப்புற மாகவே உயர்ந்த கல்லது
எதிர்ப்பட யானுமே யேகிப் பக்கமாய்
முதிர்ப்பது தீர்க்கவே முடுகிக் கிட்டினேன்
விதிர்ப்பது நீக்கிய விமலன் போற்றியே.

7. விரட்டிட ஓடிடும் விலங்கு போலங்கு
இருட்டிலே என்னரு கோடி வந்துபின்
மருட்சியோ டிருந்தவென் மருங்கிற் சேர்ந்ததே
வெருட்சியை விளைத்திடும் ஒறுப் ஒன்றரோ.

8. அருண்டுநீ பயப்படேல் அருமைப் பிள்ளையே
இருண்டவண் மழைபெய இருங்கால் வீசிட
வெருண்டிடு மிருவரும் வெறுப்பி லாமலே
உருண்டனம் தரையிலே உறவோர் ஆகவே.

9. விலங்கதின் உரோமமென் மேனி பட்டிட
விலங்கின தென்குளிர் வெப்பம் பெற்றுமே
துலங்கியே தெளிவதாய் தொல்லை எய்கிட
விலங்கினன் தமரென விளங்கிற் றன்றுதான்.

10. கதிரவன் எழும்பிடும் காலை நாங்களும்
கெதியுட னெழும்பியே கேபிவிட் டேகினம்
அதிருறும் இக்கதை அறையக் கேட்டியால்
பதிலென முத்தியே பட்சம் காட்டுவாய்.

25126

நூலகம்

50-ம் பாட்டு.

பூச்சாண்டி.

முன்ன மோர்நாள் முற்பகல் வேளையிற்
தன்னந் தனியே தங்கியில் இருக்கையில்
பூத மொன்று புறப்பட் டங்கோர்
காத னைப்போல் கதவடி நிற்க
கோர வடிவையும் குரூர முகத்தையும்
பாரா நடுங்கிப் பயந்த போதிலும்
முன்னே வந்து முறுக்காய்ப் பேசி
" உன்னேர் நிற்பேன் ஓடேன் ஒளியேன்
வந்த காரியம் வாகாய் உரைத்து
வந்த வாறே மறைந்திடு" கென்றேன்.
ஆண்டு நிகழ்ந்த அற்புதம் கேண்மின்
நீண்ட கைகளும் நெடிய கால்களும்
பரிதி முன்னர்ப் பனிபென மறையப்
பருத்த வுடம்பு பளிங்கென வாச்சே
நேயரே கேளீர் நீணிலம் தன்னில்
மாயமாய்த் தோன்றும் வருத்தமும் நோயும்
மலைபோல் வரினும் மலைப்புறு தெதிர்த்தால்
கலைப்புறும் கார்போல் காற்றதின் முன்னே.

51-ம் பாட்டு.

வீண்பெருமை

1. நலங்கெழு பிரான்சிஸ் வேந்தன் நாற்றிசை கீர்த்திமல்கப்
புலங்கெழு பிரான்சு தேசம் புகழுடன் ஆளுங் காலை
கலங்கெழு மாதர் மக்கள் களிப்புடன் பார்க்க வந்தல்
வலங்கெழு மிருகப் போரை வனப்புடன் நடத்தா நிற்ப.

2. மதிபொரு மடவார் தாமும் மதிப்புறு வீரர் தாமும்
நிதிபெரு கனவான் மாரும் நீதிசெய் தலைவர் தாமும்
குதிதரு சிறாரும் மிக்கக் குணமிகு குடியா னோரும்
கொதிதரு காட்சி பார்க்கப் பொம்பலாய்க் கூடிவந்தார்.

3. அரணிய மிருக வேந்தர் அடலொடு மற்போர் செய்ய
இருணிற இரும்பால் வேலி யியன்றநல் அரங்க மொன்றில்
நிரைநிரை யாக விட்ட நீண்டபெர் பீடம் தன்னில்
கருணைகூர் அரச னோடு கனபெயர் அமர்ந்து நின்றார்.

4. தூண்டிடு பசியா லங்கு சொல்லரும் மூர்க்கத் தோடு
காண்டகு போரைச் செய்து கடித்தவை ஒன்றைபொன்று
கீண்டியே மேலுங் கீழுங் கிடந்தவை உருளுங் காலை
யாண்டெழு துகளைக் கண்டு அரசனும் சொல்ல லுற்றான்

5. உரமிகு வீரரேனும் உயர்வலி தீர ரேனும்
செருமிகு தலத்தை அண்டா சேதமில் மேடை மீது
வெருவற விருத்தல் சால மேன்மைதா னெனவோர்
(மாது
பெருமையால் மதிகெட் டுத்தன் பிரியனின் விறலைக்காட்ட

6. மந்திரி மார்கள் மன்னர் மாண்புறு மாதர் மற்றோர்
வந்துறு சபையிற் றன்னின் வனப்புறு கைமே
(சொன்றைச்
சிந்தனை சிறிது மின்றி சிங்கத்தி னருகில் வீசிச்
சுந்தரன் முகத்தைப் பார்த்தாள் சூழ்ந்தவர் மலைக்க
(லுற்றார்.

7. கனமுறு டீலோர்ஜ் என்பான் கன்னியின் செய்கை கண்டு
மனமுறுக் கலோடு பாய்ந்து மங்கைதன் கைமேஸ் பற்றி
வனமிருகங்கள் தன்னின் வரவதை உணரு முன்னர்
சனமிகு மேடை மீது தாவினான் க்ஷணத்திற் றானே.

8. பூண்டிடு மண்பு நீங்கப் புதைந்திடு மனத்த னாகி
மீண்டவன் மேசை மாதின் மின்னுறு முகத்தே றிந்தான்
ஆண்டகை பார்த்து வீரன் ஆற்றலை மெச்சிச் சொல்வான்
ஈண்டவள் செய்கை முற்றும் இழிதரும் பெருமை
(அன்றோ?

9. வாதைதான் வந்த போது வலியரும் உயிரைப் பாரார்
நீதுதான் விலக்க வென்று தீயினுள் நுழைந்தாற் பேறு
ஏதுதான் நன்மை யுண்டாம் இங்கிதில் மோச மன்றி
பேதைதன் செய்கை நோக்கிற் பேதமை யதனில் வேறு?

52-ம் பாட்டு

ஜாவர் பெருமான் அல்லது நன்றி மறவான

1. நெடுங்கடல்சேர் பார்சீக கிருபனின்பந் திரியேழைக்
கடும்பசிதீர்க் குங்கருணைக் கடலான ஜாவர்தனைக்
கொடுங் கோலன் மாஹரூனும் கோபத்தாற் கொலைசெய்ய
கொடும்பழியை குடிகள்பின் குறைசொல்வ ரெனவஞ்சி

2. பிழையிழைத்த அமைச்சன்தன் பெயருரைப்போர்
(மாள்வரென
பழைய பெரும் இராச்சியத்தில் பதிந்துள்ளோர்
(அனைவருக்கு
குழலெடுத்துக் காவலராற் கூறுவித்துக் கொற்றவனும்
முழவதிரச் செய்திட்டான் முறையில்லான் முற்கோபி.

3. துயர்விளைய வாடியங்கு துன்புற்ற குடியனைத்தும்
பயம்விளைய, வாய்மூடி, பதுங்கியங்கு பேச்சற்றார்
நயம்விளைத்த அவன்புகழை நண்பன்மண் டர்மட்டும்
பயமழித்து, வீதியிலே, பகிரங்க மாய்க்கூற,

4. சினமிகுத்த வேந்தன்தன் சேவகரை யனுப்பியங்கு
கனமிகுத்த மண்டரைக் கைதியாய்க் கொண்டுவந்து
கனலொத்த கோபமுடன் கரமிணைத்துக் கட்டிடவே
மனமொத்த மகிழ்ச்சியுடன் மண்டரங் கேதுரைப்பான்

5. "தப்பாவு இல்லெனை தூயவனாய் ஆக்கிவைத்து
குப்பையிற் கிடந்தேனை கூட்டியிங்கே உயர்த்திவைத்து
தப்பிதங்கள் களைந்திடவே தக்கவழி தான்காட்டி
ஒப்புடனே வாழ்வதற்குதவிசெய்த குரவனுக்காய்,

6. என்தளைபை நீக்குவித்த வெம்பெருமான் ஜாவருக்காய்
வன்தளையும் நிந்தனையும் மகிழ்வுடனே ஏற்கேனோ?
புன்தளையிற் சிக்குண்டு புரண்டவெனைப் புரந்தோனை
புன்தளையே பூண்டிடினும் போற்றாதே போவேனோ?"

7. மண்டரின் மனநிலையை மன்னவனும் மதித்தாங்கு
தண்டித்து வருவதொரு சவுக்கியமும் இல்லையென்று
"அண்டத்தை தனியாளும் அரசன்யான் அருளுரைகேள்
கண்டேனுன் மனவுறுதி கண்டுகளி கூர்ந்தேனே,

8. உய்ந்திடவே உன்றனுக்கு உவப்புடனே வாக்களித்தேன்
செய்ந்நன்றி பெரிதெனவே தெரிந்தெடுத்துக்
(கூறினையால்
மொய்ந்திடுமா ணிக்கக்கல் மோலியினை ஒளிசெய்யப்
பெய்ந்திடுங்கல் ஒன்றையான் பெயர்த்தெடுத்தேன்
(கொள்கவென,

9. வணக்கமுடன் அதைவாங்கி வானோக்கி ஏந்தியவன்
"கணக்கதில்லா நன்மைகளைக் கருணையுடன் ஈந்தாய்முன்
இணக்கமுறு இக்கொடையு முன்னருளே"
(யென்றிசைத்து
பிணக்கமில்லா ஜாவரென்னும் பெரியவனைப் புகழ்ந்தானே.

53-ம்பாட்டு

மாண்டது நாயே

புன்மையை விலக்கிப் பூரண ராகி
நன்மையை நாடும் நண்பரே கேளீர்
நுவலுவன் ஓர்கதை நூதனப் பிரியரே
அவாவுடன் வந்தே அண்டை யிருந்து
செவிகொடுத் திடுவீர் சிறிது நேரம்
புவிதனி லெங்கும் புகழது பெற்ற
தருமன் என்போன் தஞ்சையில் வாழ்வோன்
அருமை பூண்ட அரிய முகத்தோன்
வாசலில் வந்திடும் வறியோர் தம்மை
ஆசையோ டேற்பான் அன்ன மளிப்பான்
கோப மென்பது கொண்டவ னறியான்
பாப மென்பது பண்ணி யறியான்
பாவலர் தாமும் பட்டணத் தோரும்
யாவரும் போற்ற இனிது வாழுழி
குணமது மாறின குக்க லொன்று
கணுவது பார்த்துக் காலிற் கடிக்க
ஊரி லுள்ளோர் ஒருங்கு கூடி
நேரில் பழிதான் நேர்ந்த தென்று

உத்தமன் தன்னை ஊறது செய்த
புத்தியில் நாயைப் புகைந்து பேசி
பித்தங் கொண்ட பிணியின் கடியால்
சத்தியமா யவன் சாவான் என்றார்
ஆங்கு நிகழ்ந்த அற்புதந் தனையே
ஈங்க ளறிய நிகழ்த்துவேன் கேளீர்
விக்கின மற்று விளங்கிடத் தருமன்
பக்கள் மலைக்க மாண்டது நாயே.

இராகம்:—சுருட்டி ஆதிதாளம்

சக்கரவர்த்திக்குச் செயமங்களம்

பல்லவி

சிரீ ஜார்ஜ் மன்னனுக்கு செய மங்களம்—நனி
சீருறு செங்கோலனுக்குச் சுபமங்களம்.

அநுபல்லவி

உத்தம நல்வேந்தனுக்கு ஓதரிய நீதனுக்கு
சத்துரு சங்காரனுக்குச் சாதிகளின் நாதனுக்கு— சிரீ

கண்ணிகள்.

1. துட்டர்கள் நாசனுக்குத் தூயனுக்கு மங்களம்
தொடையல்சேர் மார்பனுக்குத் தோன்றலுக்கு மங்களம்
கட்டமுறு மாந்தர்களின் காவலரண் சீலனுக்கு
இட்டர் அனுகூலனுக்கு ஈடில்லா சாந்தனுக்கு—

2. ஆழியதின் வேந்தனுக்கு அண்ணலுக்கு மங்களம்
ஆதரிக்கும் நாதனுக்கு அன்பனுக்கு மங்களம்
பாழியுறும் வேந்தனுக்கு பங்கமில்லா தீரனுக்கு
ஏழைகள் சகாயனுக்கு ஏதமில்லா தோங்கனுக்கு — ஸ்ரீ

3. ஆதிசயை மூப்பனுக்கு ஆண்டகைக்கு மங்களம்
ஆளுகையி லொப்பில்லாத அண்ணலுக்கு மங்களம்
கோதறவே நீதிசெய்யும் கொற்றவரின் கொற்றவர்க்கு
கொற்றக்குடை கோனவர்க்கு குற்றமில்லா
செம்மலுக்கு— ஸ்ரீ

முதலாம் பாகம் முற்றுப் பெற்றது.

மாணவர் மஞ்சரி

இரண்டாம் பாகம்

காப்பு

ஒண்முடி சிரசில் ஒன்னலர் கூடி
முண்முடி வைத்த முதல்வனைப் போற்றுவாம்.

1. ம் பாட்டு

மேலோரைக் கனம் பண்ணல்

(அரசன்)

1. சேத மின்றித் தேசங் காத்து
வாதில் நீதி மார்க்கந் தேடி
கோதில் ஆளும் கோனை யாங்கள்
ஏத மின்றி ஏற்று வோமே.

(குரு)

2. நாத கீதம் நாடிப் பாடி
வேதம் ஓதி வேர்த்து வாடி
கோதில் லாத கோனைத் தேடும்
போதன் மாரைப் போற்று வீரே.

(ஆசான்)

3. நானா பாடம் நன்றே யூட்டி
வான பாதை மாண்புங் காட்டிக்
கோனான் என்னக் கோலு மோச்சும்
ஞான ஆசான் நத்து வீரே.

(தந்தை)

4. சாதந் தந்து சாந்த மாகப்
பாது காத்துப் பாதை காட்டி
ஓத வைத்த ஒப்பில் லாத
தாதை தன்னைப் போற்று வீரே.

(தாய்)

5. மாதம் பத்து வாடிப் பெற்று
சேத மின்றி தேற்றி யூட்டி
காத லோடு காத்து வந்த
மாதா தன்னைப் போற்று வீரே.

2ம் பாட்டு

விருது விரும்பிய சித்திரர்

சித்திரர் இருவர் செயப்பெற விரும்பி
தத்தம் படத்தைச் சமர்த்துடன் வரைந்தே
அறிவுளோர் கூடுமோர் அகன்ற சாலையில்

குறைவற முடித்துக் கொண்டு வரவே
பலகையில் ஒருவன் பழங்கள் வரைந்தே
பலகணி வைக்கப் பட்சிகள் எல்லாம்
பறந்து வந்து பழமெனக் கோத்த
சிறந்த படமெனச் சேர்ந்தோர் ஆர்த்தார்
பணிவுடன் மற்றவன் பலகையில் வரைந்து
துணியால் மூடித் தூக்கி வைத்திருக்க
கண்ணாற் கண்டவர் காத்திருந் தலுத்து
"அண்ணா வுன்படம் அறிந்திட நாங்கள்
மூடி யிருக்கும் முற்றுணி நீக்கெனக்"
கூடி யிருந்தோர் கொண்டனர் வியப்பு
பலகையைக் கிட்டிப் பார்த்திடக் கண்டனர்
பலகையி லிருந்த துணியே படமென.
மற்றவன் மலைத்து மற்றிது சொல்வான்
"வித்தையில் வல்லாய் விருது னதே
புத்தி யில்லாத புட்களை மயக்கயான்
கற்றோர் எமையே மயக்கிக் காட்டினாய்."
என்றவன் உரைக்க யாவரும் ஒன்றாய்
மன்றதில் நன்றென வாழ்த்தினர் ஒப்பியே.

3 ம் பாட்டு

கிளிப்பிள்ளையின் கதை

கிட்டி வந்தோர் கிளிக்கதை கேளுமின்
எட்ட வுள்ள எழில்கயன் னாவில்
இஸ்பானியன் ஒருவன் இளங்கிளி யொன்றை
இஷ்டமாய் வளர்த்தவன் ஏதோ விலைக்கோர்
கப்பற் காரன் கையிற் கொடுக்க
அப்பா லக்கட லோடி யதனைச்
சீதள மிகுந்த சீமையிங் கிலாந்திலோர்
மேதகச் சீமான் வீட்டிற் சேர்த்து
கிள்ளையை யங்கு கிடந்தவோர் கூட்டில்
பிள்ளையைப் போல பிரியமாய் வளர்க்க
வியப்புறு விதமாய் விளம்பிய சொற்களை
நயப்புற பயின்று நாட்பல செல்ல
மூப்பது வந்து முழுவுடல் இளைத்து
சாப்பிட வேணும் சக்தி யற்றிடத்
தற்செய லாகவோர் தங்க வந்தவர்
சிற்சில ஸ்பானிய சொற்களைச் செப்ப
இளைப்பதை மறந்தே எழில் சிறை விரித்து
களிப்புடன் எதிர்மொழி கனிவாய் இயம்பிப்
பழுத்த செட்டையைப் பாங்குடன் அடித்து
விழுந்து கூட்டில் விட்ட துயிரை.

4 ம் பாட்டு

ஆர்மோசன்

1 ஆர்மோச னென்னும் அதிபதி ஓர்தரம்
பார்சிய மன்னன் படைகளைத் தாக்கியே
போர்வீரச் செய்கை புரிந்திட்டு மாற்றாது
சீர்மாறிப் பட்டான் சிறை.

2. கூடிக் குதித்திடும் கோனார்கள் கொண்டவனை
ஈடில் இறைமுன்னே விட்டிடச் சொல்வான்மன்
"பீடில் இறந்து பிணமதே ஆகுமுன்
கேடில் எதையும்நீ கேள்.

3. "வீரச் செயல்தனை வீரரே மெச்சுவர்
வீர! எவரும் வியந்திடப் போர்முயன்றாய்
ஆதலாலுன் ஆவல் அறிய விளம்பிடாய்
ஈதலிற் பின்னிடேன் யான்"

4. அதிபதி கூறுவான் "அஞ்சேன் மாணம்
மதிபெரும் வாழ்வும் மதியேன் விதிபோல்
கொதித்தெழு தாகத்தைக் கொஞ்சம்யான் ஆற்ற
விதித்திடு" வென்றான் விரைந்து

5. அருகி லுளோரை அரச னழைத்துப்
"பருகிட நீரைப் பணிவுடன் ஈவீர்
செருவினைத் திட்டவோர் செம்மல் எனினும்
வெருவிடப் போர்புரிந்தான் மேல்."

6. வேகமாய் நீரதை வெள்ளியங் கிண்ணத்தில்
தாகமதால் வாடும் தலைவனும் பெற்றபின்
கேலியோ வென்று கெலிகொள்வான் போல்நின்றான்
வேலிபோ லொன்னார் மிக.

7. அண்ணலும் பார்த்ததை அன்புடன் கூறுவான்
"கிண்ணத்தின் நீரையே கிஞ்சித்து மஞ்சா
பருகிடுதை முற்றும் பருகுமுன் யானுன்
சிரசதை வாங்கிலேன் தேர்."

8. அரசனின் சொல்லை அதிபதி கேட்டான்
காதல நீரைக் கவிழ்த்தான் தரையில்
"குடிக்குமுன் உன்னையான் கொன்றிடே னென்றீர்
குடிக்கவதைக் கூட்டீர் இனி."

9. குருசிலு மப்போழ்து கொஞ்சம் மலைத்து
பரிவுடன் சொல்வான் பகைவனை நோக்கிக்
குடித்தபின் மாளெனக் கூறின என்முன்
குடித்தே குலத்துடன் வாழ்.

5-ம் பாடு

சபீனரின் சீர்பங்கம்

ரொமுலஸ் கட்டிய ரோமா புரியில்
சமூல மிருந்துஞ் சனமில்லாமல்
நாட்டி லிருந்த நலமில் மாக்கள்

காட்டி லிருந்த கள்வர் கடையர்
வீடில் லாத வெருங்கை யாளரைப்
பீடில் லாத பெற்றி யோருடன்
கூட்டி யழைத்துக் கூட வைத்தே
நாட்டி னார்தம் நகரிற் றழைக்கவே.
கட்டிய மனைகளைக் காவல் பண்ணிட
பெட்டை பெண்டுகள் பெற்றில ராதலாற்
பக்கத் திலுள்ள பட்டணங் களிலே
தக்க பெண்டிரைத் தாமாய்த் தேடிட,
அயலூ ருள்ள அன்னை தந்தையர்
கயவர் கள்வர் கடியது மறுக்க
இக்குறை நீக்க ஏது வற்றுத்
தக்கதோர் யோசனை சதியே வென்று
நவீன நாட்டியம் நடந்து வதாக
சவானிலம் வீசும் சபீனர் நாட்டில்
விளம்பரஞ் செய்து வெளியிட் டிடவே
களங்க மிலாது கனசன மங்கே
குறித்த தினத்தில் குடும்ப சகிதராய்ச்
சிறப்புடன் பெரியோர் சிறியோர் யாவரும்
ஆடல் பார்க்க ஆணும் பெண்ணும்
கூடித் திரண்டு கோட்டையுள் வந்தனர்.

பந்தய ஆட்டம் பார்த்து மகிழ்ந்தே
சந்தோச மாகச் சகலரு மிருக்க
ஒலிக்குறி தொனிக்கமுன் ஒழுங்குப் படியே
புலிப்போல் ரோமா புரியார் பாய்ந்து
கள்ளமார் கூந்தலார் கையைப் பிடித்து
துள்ளத் துடிக்கத் தூக்கி யேக
ஆயுத மிலாமல் அங்கு சபீனர்
தீயவர் முன்னே திகைத்து ஓடினர்.
சிலநாட் செல்லச் சீராய்ச் சபீனர்
பலனாய்ச் சேனைகள் பலவும் திரட்டி
கள்ள ரோடு கடும்போர் புரிய
உள்ளம் நடுங்கி உரோமை மாதர்
யுத்த பூமியி லோடிச் சென்றே
தத்தம் தந்தையர் தமரைக் கெஞ்சி
பொல்லா ரென்ற புருடரை வேண்டிக்
கொல்லல் தவிர்க்கக் கூவி யழுதனர்.
நல்லார் சொல்லை நயந்தவ ரேற்று
அல்லல் விளைக்கும் அமர்விட் டோய்ந்தே
போரை நிறுத்திய பொற்புறு மாதர்
பேரில் நாட்டினர் பெருவிழா வொன்றை.

6ம் பாட்டு

மகா அலெக்சந்தரும் ஆந்தைகளும்

1. பூருவ நாட்களில் பூவெலாம் வென்றடக்கி
ஊருடன் நாட்டை ஒருங்கழித்துச் சீரார்
பெரும்புகழ் பெற்ற பெரியலக் சந்தர்
இரும்புவி யாளு மிடை,

2. மந்திரி தன்னோடு மாலையாம் வேளையில்
நந்தனஞ் சுற்றியே நன்மலர் கொய்கையில்
விந்தையாய் அங்கோரு வேம்பிலீ ராந்தைகள்
வந்திருந்து வாதிட்டுக் கொண்டு,

3. பண்டைக் கதைபல பன்னிடு பான்மையாய்ச்
சொண்டொடு சோண்டதைத் தொட் டிடவைத்ததைக்
கண்டுசொல்வான் "மந்திரீ காதலர் பேச்சைநீ
அண்டையிற் சென்றே அறி".

4 என்றலும் மந்திரி எந்தலின் சொற்போலச்
சென்று மரத்தின்கீழ்ச் செம்மலின் கண்முனர்
சிந்தனை யோடு சிறுபோழ்து நின்றபின்
வந்தனை செய்தனன் வந்து.

5. அரசனுஞ் சொல்வான் அமைச்சனை நோக்கிப்
"பரிசார் துணைவ! பயந்துநீ நிற்பதென்?
உள்ளதை யெற்கிங் குறுதிகில் நீக்கியே
உள்ளந் திறந்தே உரை,"

6 „ அக்கதை கூறுவன் அன்புள்ள மன்னாகேள்
மக்கள் தலைமையே மணஞ்செயப் பேசியொன்று
தக்கதோர் சீதனந் தான்தருவை யோ?"வெனப்
பக்கத்தி லுள்ளது பார்த்து,

7. குட்டிச் சுவரில் கொடுப்பன்யான் ஐந்நூறு
முட்டிங் கிலாது முறைபோ லவர்வாழ
மட்டில்லாச் சிலனும் மாஆலக் சந்தரும்
கிட்டவே நிற்கிறார் கேள்.

8. மன்னரின் மன்னனின் மாட்சியாஞ் சேனைகள்
துன்னலர் மேற்செலத், துன்னிடும் வீடுகள்
பன்னெறி காடாய் விளங்கும் எண்ணில
என்னினித் தாழ்ச்சி யெனக்கு.

9. படையோடு வேந்தன் பவனியே போகில்
உடையுஞ் சுவர்க்கட் குறுகுறை கூறில்
குடிகளே ; ஆயிரங் குட்டிச் சுவர்தான்
தடைகள் உளதோ தர."

10. எந்தலும் கேட்டிதை எண்ணுவான் மூகனுக்
காந்தியை ஈயுமென் கட்கம் உழைப்பது
ஆந்தையின் இல்லிடம் ஆவது உண்மையேல்
சாந்தனை சாபஞ் சதம்.

11. நிருபன் உணர்ந்திதை நெட்டுயிர்ப் பெய்தி
புரிபவ மோர்ந்து புகுந்தனன் கோயில்
செருவினை நீக்கிச் செகத்துயிர் பேணி
பரிவுடன் பாராண்டான் பின்.

---

7 ம் பாட்டு

சுவாமி பக்தி

---

1. விந்தையாய் ஓங்கிய வெற்பதின் சாரலில்
மந்தையையோர் மாட்டிடையன் மேய்த்தங்கு—வந்திடக்
குக்கற் றொனிபோற் குரைத்தல் செவிவிழ
மிக்க மலைத்தான் வெருண்டு.

2. நாயது யேதென நாற்றிசை சுற்றியே
ஆயுந் தருணத்தில் அங்கக்கன்—சாயலில்
ஓசையது குன்றியே ஊளையிடு செந்துவின்
ஊசலைப் பார்த்தனன் உற்று.

3. கொஞ்சந் திகைத்துப்பின் கூறுவான் மானிட
சஞ்சார மில்லாவித் தானுவில்—அஞ்சிட
எங்கிருந்து வந்திருக்கு மித்தொனி என்றுசென்றான்
சங்கதி தேரவே தான்.

UNDIKULI GIRLS COLLEGE JAFFNA

4. கரந்தவன் சென்றிடும் காளையைப் போல
வருந்தியே முன்வரும் மற்று—இருந்தே
நுழையும் புதருளேயிவ் நூதனத்தை யெல்லாம்
விழைவுடன் பார்த்தான் வியந்து.

5. சுணங்கனைத் தேடித் தொடர்ந்தவன் கண்டான்
மணங்கெழு பூக்கள் மலரும்—அணங்கார்
தடாகமுஞ் செங்குத்தாம் சாரலும் கர்வல்
விடாத விலங்கும் அடுத்து.

6. மலையடி வார மருங்கணைந்தே ஆங்கோர்
தலையோடு மென்புகளும் தாழ—உலைவிற்
கிடந்திடக் கண்டவன் கிட்டியே வந்து
நடந்ததை யோசித்தான் நைந்து.

7. மீயுயர் வெற்பின் முகட்டிலிருந்து வீழ்ந்
தாயுள் முடிவுற்றே அங்கவன் தான்—மாய
நிகழ்ந்ததை யுன்ன நினைவுவர வுள்ளம்
நெகிழ்ந்தான் துயரம் நிறைந்து.

8. யாரென்றும் எத்தின மங்குற்றேன் என்பதும்
ஊருடன் பேரும் ஒருங்கு—சீருடன்
வந்திட ஞாபகத்தில் மல்கும் வியப்பெழ
சிந்தித்தான் நாயின் செயல்.

LIBRARY

T.B.24

9. உப்பிட் டவர்களை உள்ளளவும் எண்ணெனச்
செப்பிடு சொல்தான் சிறந்திட—அப்பிணத்தை
விட்டுச் சிறிதும் விலகாது காத்திட்ட
மட்டற்ற அன்பை மதி.

10. திங்களோர் மூன்றுப்த் திடனுடன் நின்றுமே
அங்கே அகன்ற வெளியிற்—தங்கிக்
கருணையாய் மாண்டோனைக் காத்துநிற்க ஊணும்
இரண மளித்தார் இறை.

8-ம் பாட்டு

உரோமாபுரியின் ஆதி

1. மண்ணவரும் விண்ணவரும் மாற்றலரும்
மித்திரரும் மகிழ்ந்து போற்றும்
எண்ணரிய மாண்புடைய இத்தாலி
தேசமதின் இராச தானி
விண்ணகர்க்கு நேரிதென விளம்பிடுமா
ரோமைநகர் விர்த்தாந் தத்தை
வண்ணமுடன் எடுத்துரைப்பேன் வந்திருந்து
கேட்டிடுவீர் மகிழ்ந்து நீவிர்.

2. தீதகற்றி யரசாண்ட வேந்தொருவின்
இருகுமாரர் செனித்தா ராக
ஏதமற்ற மூத்தவனும் இரட்டையராம்
குழந்தைகளை யீன்று மாண்டான்.

பாதகமே உருவெடுத்தோன் யாராளு
மாசைகொண்ட பயனில் தம்பி
தாதைதனை நீக்கிவிட்டுத் தாணிதனைக்
கொடுமையொடு தானே யாள்வான்

3. முன்னவனின் இருமக்கள் முறைகேட்டை
பின்னீக்க முயல்வரென்ன
முன்னமொரு மடமாது முடியோனின்
மொழிக்கஞ்சி முயன்ற வாறு
பன்னவராம் குழந்தைகளை மறைவாகப்
பேழையிலே வைக்கச் செய்து
பின்னவரை நட்டாற்றில் விட்டிடவே
விதித்தனனப் பெரிய பாவி

4. கடிவாளம் கழித்தோடும் கந்துகம்போற்
கன்மலையின் கவட்டில் நின்றே
அடிவார மதைத்தாண்டி யாற்றலோடே
அடித்தேகு மளவில் வெள்ளம்
கொடுபாவி நோக்கமது கொஞ்சமெனும்
பலிக்காமற் கோண வென்றே
நடுவாற்றில் விடுபேழை நலமாகக்
கரைசேர நடத்திற் றன்றே

5. தட்டிநிற்கும் பெட்டியிலே தயங்கியழும்
குரல்கேட்டுத் தலத்திற் றங்கும்
குட்டிகளைப் பறிகொடுத்த கோணாயப்
பாலகரைக் கொண்டு சென்று

கிட்டிநின்ற மாத்தடியில் கிடத்தியரு
ளுடனணைத்துக் கிழமை பூண்டே
இட்டமுடன் பால்கொடுத்துக் காத்திடுமால்
கண்காக்கும் இமையை யொத்தே

6. கானகத்துப் பறவைகளும் கண்டவரை
நல்லுணவு கருதித் தேடி
யீனமிலா அருளோடங் கினிதூட்டும்
யாவருக்கு மினிய தந்தை
வானபர னருங்காப்பி லவரோடி
விளையாடி வளரு மொல்லை
ஆனினமேய்த் திடுமிடைய னவர்கண்டே
மகிழ்ந்தனனாய் அழைத்துச் சென்றான்

7. களவாகத் தமதுரிமை கவர்ந்தெடுத்த
காவலனின் கறவையெல்லாம்
வளமாகப் புல்வளர்ந்த வரைதோறும்
மேய்க்குமவன் வாடி தன்னில்
உளமார மகிழ்ச்சியொடு நாட்கழித்து
நல்லுடம்பு முடைய ராகி
விளையாடும் விளையாட்டில் வீரரென்ன
விருதெடுத்து விளங்கி னாரே.

8. மூதானை மந்தைகளை மேய்த்து வரும்
இடையரொடு முரணி நின்று

வாதாடி வழக்குரைக்கும் வல்லரசன்
ஆயருடன் மகிழ்ந்து சேர்ந்து
போதாமோ மதியாமோ வெனப்புகழும்
முகப்பொலிவோர் பொருது காலை
சூதாகச் சூழ்ந்தங்கு சிறுவர்தமைச்
சிறைகொண்டார் தொன்மை யாயர்.

9. கோலிழந்த கொற்றவன்முன் கோபாலர்
கோபகரைக் கொண்டு செல்லப்
பாலியரைப் பார்வையிட்டுப் பாராண்ட
பார்த்திபனும் பகர்வான் "வீர
வாலிபரே! வாதாடி வம்பிழைக்க
வந்தவரே! வழுத்து வீர்நீர்
பாலகலா வாயிடையர் பாலகரோ
பகைதொடுத்த பான்மை யென்னே?"

10. கானுற்றில் வந்ததுவும் கானகத்திற்
கோனுயின் காப்பில் வாழ்ந்து
கோனுரைக் கூடினதும் அவருரைப்ப
மூதாதை குறித்து நோக்கி
தானுளத் தன்னிளைய புதல்வனிந்தச்
சதிமோசம் தான்செய் தானென்
றுனுத காதலுடன் பேரர்களை
மருங்கிருத்தி அறைந்தான் அன்றே.

11. கேள்வியுற்ற பாலகரு முளம்பதற
மயிர்சிலிர்ப்பக் கிட்டி அன்பால்
தாள்விழுந்தே பணிந்துமுத்தந் தானீந்து
மூதாதை தனக்கே செங்கோல்
ஆள்விழும மளிப்பமென அறைகூவி
அரசனுடன் அடர்த்துக் கொன்று
சூழ்முடித்து சொற்படியே மூதாதைக்
காசீந்து துயரை நீக்கி,

12. பாரிடத்தே தமக்கெனவோர் நகரியற்ற
மனங்கொண்டு பல்கால் நோக்கி
யாருரைத்த விடநன்று மெனமுன்னர்
மிதந்தநதி யிடத்தே யேகிக்
காடுத்த பலைமுகட்டில் சகுணமது
நோக்குங்கால் கனிட்ட னை
பேறெடுத்த ரீமசின்முன் அறுபறவை
தோன்றுதலை பெரிதுங் கண்டான்.

13. மூத்தவனும் ரொமியூலஸ் முன்னேபத்
துப்பறவை முடுகித் தோன்ற
நேர்த்தியது ரொமியூலஸ் வாக்கென்றே
ஒப்பியபின் நினைத்த வாறே
சீர்த்தியுடன் எழுமலைமேல் ரோமையென்று
நகர்கட்டிச் சிறந்தான் என்பர்;
பார்த்திடுமி னிதுவேரோ மாபுரியி
னுதியெனப் பகரும் நூலே.

9-ம் பாட்டு

துட்ட கைமுனு.

1. ஒன்னலரும் போற்றிடவே எல்லாளன்
அருஞ்செங்கோல் ஓச்சி யெங்கும்
நன்னெறியி லாண்டுவா வாடியங்கு
மாவலியா நதிக்கே யப்பாற்
தென்னவனை திறமையொடு தானுண்ட
காவன் னு தீச வேந்தன்
மன்னுபெரு புகழோங்க ஆண்மக்கள்
இருவர்தமை மகிழ்ந்து பெற்றே.

2. ஊத்தையறு கடலளித்த ஒண்டொடியாள்
ஈன்றெடுத்த ஒள்ளி யோரில்
மூத்தவனை கைமுனுவென்றும் இளையவனைத்
தீசனென்றும் மூனிவி லாத
நீத்தவர்கள் சொற்கிணங்கி நற்றினத்தில்
நாமமது நிலைக்கச் சூட்டி
பார்த்தவர்கள் புகழ்ந்திடவே பலகலைகள்
பயிற்றுவித்துப் பார்த்து வந்தார்.

3, ஈராறு வயதினிலே கைமுனுவுந்தான்
தந்தையொடும் இளவ ளோடும்
சீராக அன்னமதை உணும்போழ்து
நற்றூதை சிறந்த சோற்றை

ஓராறு பிடியாக திரட்டிமிக
உவப்புடன் "ஒன்றொன் றாக
ஓராணை நீர்செய்தே இட்டமுடன்
இச்சமயம் உண்ணு" மென்றும்,

4. " உருப்பிடித்த முதற்பிடியை குருக்களுக்கு
மோசமதை உன்னோ மென்று
விருப்புடனே வாக்களித்து உண்டிடுவீர்"
என்றங்கு விளம்ப வேந்தன்
உரைப்படியே தந்தையற்கு அடங்கியவர்
உண்டளித்தார் உவந்தே வாக்கு.
பருப்பமுறு மறுபிடியை யவர்க்களித்து
பார்த்திபனும் பகர்வான் அப்போ.

5. "நீராரும் கடலுடுத்த நேமியிலே
நேசமுடன் நீங்கள் ஒன்றாய்
ஊராரின் புகழ்பெறவே பிணக்கின்றி
உடனுடனே உயிர்போற் தங்கி
நேராக நேயமுடன் இருப்பமென்ன
ஆணையது நிகழ்த்தீ" ரென்னப்
பாராள்வான் புத்திரரும் பத்தியுடன்
சத்தியங்கள் பண்ணி னாரே.

6. மீந்திருந்த மறுபிடியை வேந்தனவன்
தானெடுத்து விறலோர்க் கீந்து
"பாந்தமுட னிருநிலமாள் எல்லாள
வேந்தன்மேற் படையெ டாதே.

சாந்தமொடு வாழ்வமெனத் தந்திடுவீர்
ஆணை"யெனச் சாற்றக் கேட்டு
பாந்தளெனச் சீறியவர் பாய்ந்தெழுந்து
படுக்கையறை படர்ந்தார் நொந்தே

7. சென்றவரைப் பார்வையிடச் செங்கமல
விகாரதேவி சென்ற போது
கன்றலுடன் கட்டிலிலே கால்மடக்கிக்
கைமுனுவங்கு கிடக்கக் கண்டு
குன்றனையத் திணிதோளாய் கிடப்பதேனோ
மஞ்சமதில் குறுகி யிங்கே?"
என்றவனை முகநோக்கி ஏக்கமுடன்
ஈதுரைப்பான் இயலார் வேலான்.

8. "பொன்புனைந்த மஞ்சமதில் பொலிவுடனே
யான் துயிலப் போமோ? கூறாய்.
தென் புறத்தி லோசைசெயும் திரையாழி
யெனைநெருக்கத் தியங்கு மென்னைத்
துன்புறுத்தும் தமிழரோன்ற துட்டப்பேர்
வடபுறத்திற் சுற்றி நிற்க
மின்பிறக்கும் மேனியினாய்! எப்புறத்தில்
நீட்டிடுவேன் விளப்பு" கென்றான்.

9. வாலிபரும் வாளமரும் வில்வித்தை
மல்யுத்தம் வளமாய்க் கற்று
பாலியராய்ப் பார்த்தெடுத்துப் பலமிகுந்த
படைதிரட்டிப் பகருந் தந்தை

பாலனாகிப் புறநாட்டுத் தமிழருடன்
அமர்புரிந்து பலனைக் காணும்
காலமிதே யாதலினால் விடைகொடுத்திர்
எனநின்றார் கழறி யன்றே.

10. பன்னிநின்ற பாலர்மொழி வெறுப்பீய
பருவாலே பலிக்கு மென்று
மன்னவனு மஞ்சியவர் மன்றாட்டை
மறுத்திடவே மக்கள் தம்முள்
முன்னவனாம் கைமுனு வென்போன் மொய்குழலா
ராபரணம் முயன்று தேடி
மின்னிழையைப் பெண்ணணியீர் அணியுமென
அனுப்பினானே வெகுளி மிஞ்சி

11. கனல்விடுத்துக் காய்ந்தெரியுங் காவலனின்
கடுஞ்சினத்தாற் காந்தா னாகி
புனல்மிகுந்து பூமலிந்த மலைநாட்டில்
புரவலனார் போன்று மட்டும்
கனல்வருத்தும் கடுஞ்சுரத்தின் காய்கனிகள்
தின்றுகொண்டு காலம் போக்க
அனல்மிகுத்த இனத்தவர்கள் துட்டனென்று
பெயரிட்டார் அன்று தொட்டு.

12. கடைசியிலே பிதாமடியத் தம்பியவன்
தன்னுரிமை கவர்ந்தா னென்னத்
தொடைசிறக்கும் மணிமார்பன் தேடிவந்த
தூதுவர்கள் சொல்லக் கேட்டு

சடிதினிலே மலைநாடு விட்டிறங்கி
தன்னூரே கருதிச் சார்ந்து
படைதிரட்டிப் படுக்களத்தில் இருபெரும்போ
ராற்றியபின் பதிகைக் கொண்டான்.

13. அரசுரிமை கவரிளையோன் அடைக்கலமாய்
குருக்களிட மடைந்தா னாகக்
குரிசிலவர் சொற்கேட்டு கோபமதை
நீக்கியுளம் குளிர்ந்தான் பின்னை
இருசமாம் தமிழருடன் இகலுடனே
செய்திடவே எண்ணங் கொண்டு
பொருபடைகள் சேகரிக்கப் புபவலியர்
பப்பத்தாய்ப் பொருந்திக் கூட்டி

14 நயமுறவே மெய்க்காப்பாய்ச் சூரர்கள்
ஈரைவர் நாடிச் சேர்த்து
வெயிலெரிக்கு மாயுதங்கள் பலவணிந்த
வில்வீரர் மிகுந்து செல்ல
பயமுறுத்தும் மதகரிகள் வெம்பரிகள்
படையணியாய்ப் பக்கஞ் செல்ல
செயமிகுந்த தலைவரொடு பெருநதியை
அரவுபர்த்தோர் சென்றார் தாண்டி.

15. ஆற்றின்மீள் கரையதையே அரணுக்கி
யெதிர்த்தவரோர் ஆற்ற லற்று
காற்றின்முன் பதரெனவே கரந்தொளித்தார்
காளையர்முன் காவல் விட்டே.

நாற்றிக்கும் வளமிகுந்து நனிசிறந்த
நகரெல்லாம் நாசஞ் செய்து
ஆற்றல்சேர் உஜிதபுர அளிநகரை
அவ்விளைஞர் அணுகினாரே.

16. விந்தையுறு வளநகரின் பெருமதிலின்
வனப்பதையே விளம்பப் போமோ?
அந்தமுறு அரண்மதிலும் அதைச்சுற்றித்
தோண்டுவித்த அகழி மூன்றும்
பந்தமதின் நாற்புறமும் இருப்புவாயில்
செய்தவர்கள் பாது காத்து,
வந்தையுறு சிங்களவர் பயமற்றுச்
சிறப்புடனே வாழ்ந்து வந்தார்.

17. பற்றிபெரி பட்டணங்கள் பதியிலுள்ளோர்
பயந்துவந்து பதுங்கக் கண்டு
வெற்றியுடன் விரைந்துவரும் வெம்படைகள்
அண்டுமுன்னே விறலார் வீரர்
கொற்றவனின் கொடிபறக்கும் கோட்டைமதில்
காவல்செயக் குறித்த பேரை
சுற்றிவர நிறுத்திமிகத் துணிவினொடு
காத்திருந்தார் தொன்மை யாளர்.

18. அளவிறந்த சைனியங்கள் அகல்வெளியில்
வந்திறங்கி அரும்போர் ஆற்ற
தளிமமோடு தாக்கவருந் தானைகளைத்
தைரியமாய்த் தமிழர் தள்ள

இளவரசன் யானையது கண்டுலவை
இருப்புவாயில் இடிக்க ஏக
மளமளவென் றூற்றினரே மதகரிமேல்
குங்கிலியம் வழியக் காய்ச்சி.

19 கோக்களிறு நோபொறுக்கக் கூடாம
லருகிருந்த குளத்திற் பாய
வீக்கமுற்ற முதுகினிலே மிகவரிய
மருந்துகளை விரைவிற் பூசி
நீக்கியபின் நோவதையே, முதுகைத்தான்
மூடியவர் நீள்தோல் கொண்டு
தாக்கிடவே ஏவுகையில் கபாடமொடு
கோட்டைமதில் தகர்ந்து வீழ,

20. அணையுடைத்துப் புரண்டோடும் ஆறதுபோ
லுட்புகுந்த அமரார் வெள்ளம்
துணையிலாத நகரமாந்தர் துடித்திடவே
வெட்டியவர் துண்டு துண்டாய்
இணையிலாத எழில்நகரைத் தீக்கிரையாய்
ஆக்கியபின் இரக்க மற்றோர்
துணையதுவாய் கைமுனுவுடன் அனுராத
தொல்நகரைச் சூழச் சென்றார்.

21. நிதிபடைத்த மணிமாடக் கட்டடங்கள்
மாளிகைகள் நிறுவியங்கு
மதிபடைத்த வதனமுள்ள மகளிர்தம்
தமருடனே மகிழ்ந்து வாழ

விதிபடைத்து தலைவர்களும் வித்தகரும்
வர்த்தகரும் வினைஞர் மாரும்
துதிபரப்ப மனுமுறையிற் தொல்நகரை
எல்லாளன் தூயோ னாண்டான்.

22. பாதகர்கள் பட்டணத்தைக் கிட்டியபின்
கொத்தளத்தின் பக்கம் அண்டி
மோதமருக் கேற்றதெல்லாம் முயற்சியுடன்
தேடிவைத்து முன்னங் கூட்டி
நூதனமாய் எண்ணுந்த நுவலரிய
அரண்வேலி நொடியிற் கட்டிக்
கேதனங்க ளேற்றியபின் தைரியமாய்க்
காத்திருந்தார் கெட்டி கூறி.

23. சங்கைபெற்ற தீர்க்கசந்தன் தானையொடு
முன்வந்தே சண்டை செய்யச்
சிங்களவர் சேனை முற்றும் சின்னபின்ன
மாகவொக்கச் சிதறி யோடி
அங்குமிங்குஞ் சாடிடவே தீர்க்கசந்தன்
அரண்வேலி அழித்து நின்று
மங்கிடாது நிமலனுடன் செப்போரில்
அகஸ்மாத்தாய் மாள லானான்.

25126

24\. இடிவிழுந்த மரமெனவே இகற்றலைவன்
படுகளத்தில் இறந்து வீழ
மடிமங்கி விறல்வீரர் முயற்சியற்று
பின்வாங்கி வதனம் வாட
கொடைமிகுந்த குரிசிலவன் எல்லாளன்
யானையின்மேல் கோப மூழ
படைமுகத்திற் புகுந்தங்கு பகைவர்மேற்
பாய்புலிபோற் பாய்ந்தான் சீறி.

25\. தானையின்முன் தார்மார்பன் தாக்கமரில்
தைரியமாய்த் தனிப்போர் செய்ய
பூனையின்முன் எலியெனவே புறங்காட்டிச்
சிங்களவர் போயொளித்தார்
சேனையின்முன் கைமுனுவப்போ கொடியுயர்த்திக்
கொல்களிற்றைச் செலுத்திச் சென்று
யானையின்மேல் இருந்தபடி அருஞ்சமரம்
செய்கோவை இனிது கண்டான்.

26\. செருவாழும் தென்வாயிற் புறத்திலங்கு
சந்தித்தே தெவ்வ ரான
இருவீரர் செய்சமரைப் பார்வையிட
இருதிறத்தின் இகலார் சேனைப்

பொருவீரர் போர்நிறுத்த, பொருவிலாத
எல்லாளன் போக்கே கிட்டி
அருமீட்டி ஒன்றெடுத்தே ஓச்சிடவும்
காளையவன் அகன்று தப்பி,

27\. வளைமதில்வாய் முன்னுடைத்த வன்களிற்றை
ஏவவது வலிய கொம்பால்
வளமுடைய எல்லாளன் வேழமதைத்
தாக்கியங்கு மடியக் குத்த
களமதிலே அரசன்தன் கரிசரிய
தான்சரிந்து கவிழ்ந்து வீழ
களபமதின் காலிடையே யகப்பட்டு
மடிந்தொழிந்தான் கவினர் வேந்தன்.

28\. குற்றமற்ற குடையேந்தல் கொலைக்களத்தில்
பொன்றிடவே கூடியங்கு
கற்றவரைக் கற்றவரே காமுறுவர்
எனமுதியோர் கழறல் ஒத்து
வெற்றிபெறு விறல்வீரன் எல்லாளன்
வீரியத்தைப் புகழ்ந்து பேசி
கொற்றமுறு கொடிவேந்தைக் குலமுறையாய்க்
தகனமது கொண்டு செய்து.

29. கோமகனார் விழுந்திறந்த விடந்தனிலே
கட்டுவித்துக் கோரி யொன்றைத்
தீமையிலாத் தீரனவன் சின்னமதைக்
காப்பதற்குத் திட்டஞ் செய்து,
காமருறு வாழ்வேந்தர் தாமுமதைக்
கால்நடையாய்க் கடந்து செல்லப்
பூமியெங்கும் முரசடித்து யாவருக்கும்
சாற்றுவித்தான் புகழே பூண்பான்.

10-ம் பாட்டு

ஒரேசியஸ் வீரன்

1. தோமுறு தார்க்கின் வேந்தைத்
தொல்நகர் விட்டே ஓட்டி
ரோமையை ஆள வென்றே
ரோமரில் இரண்டு பேரை
தாமத மின்றித் தேடித்
தவணையுங் குறித்து வொன்னார்
ஏமுற வாழ்ந்தே வந்தார்
ஏதமில் நகர மாந்தர்.

2. பொறையது சற்று மில்லான்
பொர்சினா வென்ற கோமுன்

குறையது நிகழ்ந்த வாற்றைக்
குரிசிலுஞ் சென்று கூறக்
கறையது கெழுமு வாளான்
கடுஞ்சினம் பொங்கி மூள
பறையது கொட்டித் தன்னின்
படைகளைக் கூட்டிச் சேர்த்தான்.

3. அரசனை யெதிர்த்த பேரை
அருஞ்சமர் புரிந்தே வென்று
புரவலன் தன்னை மீண்டும்
புவியர சாள வைக்க
துரகத வீர ரோர்பத்
தாயிரம் தொகையாய்க் கூட்டி
உரமுடன் காலாள் எண்பத்
தாயிரம் ஒருங்கு சேர.

4. மணலெனச் சேனை யோடு
மன்னனும் ரோமை மீதே
அணிவகுத் தேகும் போது
அயலுள குடிகள் தங்கள்
பணிமணித் துணிக ளோடு
பட்டணம் நோக்கி யோட

தணலதே ஆகிற் றெங்கும்
தண்பயிர் மனைகள் வேக.

5. இன்னண நிகழும் வேலை
ஈதறி ரோம ரெல்லாம்
வன்னியில் மெழுகு போல
மனமதில் மலைவு தோன்ற
மன்னனை ஒறுத்த மாந்தர்
மதிலதிற் கூடி வந்தே
என்னினிச் செய்வ தென்று
ஏக்கமுற் றெண்ண லுற்றார்.

6. செம்பதி யென்ன எங்கும்
செந்நிறத் துகளை வீசி
வெம்பரி தானை போடு
வெய்யவர் வருதல் கண்டே
அம்பதி யதனைக் காக்க
அங்கணோர் வழியுங் காணார்
வெம்பிடு மனத்த ராகி
வீரரும் கலக்க முற்றார்.

7. பின்னவர் கன்சல் நின்று
பேசியே மொழிவான் "அந்தோ!

சென்னிகூ லவரண் இப்போ
தெவ்வரின் கையி லாச்சு
மன்னிடு பகைவர் வெள்ளம்
மாநதிப் பாலந் தாண்டில்
என்னதான் செய்து நாங்கள்
எழில்நகர் காக்கப் போறோம்?"

8. ஓரேசியஸ் என்ற பேரான்
ஓணத்தின் வாயில் மூப்பன்
ஒருதனி வீரன் அங்கே
உத்தர மாகச் சொல்வான்.
"இருதிள் தாணி மாக்கள்
இறப்பது சரத மாமால்
செருதனைக் கண்ட பின்னர்
செகத்துயிர் பேணு வாரோ?

9. கூறுவேன் ஒன்று கேளீர்
குவலயம் வாழு மாந்தர்
நூறிலும் சாவ துண்டாம்
ஆறிலும் நொந்து சாவார்
ஈறிலாக் கடவுள் கோயில்
இணையிலா மனைவி மக்கள்

வீருடன் நின்று காத்து
வீவதே மேலாம் பேறு

01. பீடுறு தலைவ! நீங்கள்
பிரியமொ டொன்று சேர்ந்து
நீடிய பால மிங்கு
நீள்நதி விழவே சாய்க்க
கூடிய மட்டும் யானும்
கோதறு இருவ ரோடு
கேடுறு திடுக்க வாயில்
கெட்டியாய்க் காப்ப மென்றான்.

11. ஆயிரம் பேர்தான் வந்தும்
ஆயுத மணிந்த மூவர்
வாயிலைக் காவல் செய்ய
வசதிகள் உண்டு பாரீர்
பாயுமிவ் வாற்றுக் கப்பால்
படரொளி வாளை யேந்த
நேயரி லிருவர் உண்டோ?
நிகழ்த்துவீர்" என்னக் கேட்க.

12. இலத்தியஸ் என்ற ரோமன்
இட்டமாய் வந்து யானுன்

வலத்திலே நின்று கொண்டு
வலியபோர் இழைப்ப னென்றான்
கலக்குறா ஒள்வாள் வீரன்
கருதுமெர் மினசாம் போரான்
" உலப்புறச் சேனை வெள்ளம்
உன்னுடன் தடுப்பன் " என்றான்.

13. ஒரேசியஸ் கூற்றைக் 'கன்சல்'
ஒப்பியே சொல்வான் " நீங்கள்
உரைவணம் அங்கு சென்று
ஒன்னலர் தம்மைத் தாக்க
விரைவுடன் சேதை நாங்கள்
வெட்டியே வீழ்த்தித் தள்ளி
கரவுடை மனத்தோ ரான
கயவர்கை தப்பி வாழ்வோம் ".

14. என்றலும் மூவர் ஒன்றாய்
எழிலுறு கவசம் மாட்டிப்
பொன்றிட அஞ்சா ராகிப்
போர்படை யெதிர்த்துப் போனார்.
துன்றிடு துன்பம் அந்நாள்
தொல்நகர்க் குற்றால் ரோமர்
நன்றெனப் பொருளு மீவார்
நாடிடு முயிரு மீவார்.

15. பருவரல் நீக்கப் போனோர்
படர்முக மலர்ந்தே ஏக
பெரியவர் சிறியர் என்ற
பேதம தில்ல ராகி
கருவிகள் கொண்டு பாலக்
கட்டதைத் தவிர்க்கப் போகக்
குருமிகு கன்சல் தாமும்
கோடரி கையில் கொண்டார்.

16. தாரணி மன்ன ரோடும்
தயங்கிடாத் தளங்க ளோடும்
போரணி பொருந்தி வந்த
பொர்சினா சேனை வெள்ளம்
பேரிகை முழங்க வெங்கும்
பெருங்கொடி பறந்து வீச
மாரியிற் றிரண்டு பொங்கும்
வாரிபோ லார்த்து வந்தார்.

17. அடித்திடு புயல்முன் நின்றே
அசைவுறா திருக்கு மால்போல்
அடுத்திடு பகைவர் சேனை
அண்டையில் வந்த போதும்

மடித்திரார் அஞ்சா ராகி
வன்திறல் மூவர் நிற்க
படுத்திட வந்த வீரர்
பார்த்தனர் உரத்தே நக்கார்.

18. மூவரைக் கண்ட வீரர்
மூன்றுபேர் குதிரை மீது
தாவியே கிட்டி வந்தார்
தரையினில் பாய்ந்து வாயில்
வரவிட வெண்ணிக் தங்கள்
வாளதை உறையின் நீக்கி
கேவல மடைய வங்கு
கேடகம் தாங்கி வந்தார்.

19. வந்திடு மூவர் தம்மில்
வலனுடை ஆனஸ் என்போன்
முந்திரி நிறைந்த தேசம்
முழுமையு மாட்சி செய்தோன்
சுந்தரச் சீயஸ் என்போன்
இருப்புசேர் சுரங்க முள்ளோன்
அந்தமார் பிக்கஸ் என்போன்
அரணுள கோட்டை ஆள்வோன்.

20. ஆனசைப் பற்றித் தூக்கி
இலத்தியஸ் எறிந்தா ஞற்றில்
ஊனறச் சியஸ் உச்சி
எருமினஸ் பிளந்தான் வாளால்
ஈனமில் ஓரேசி யஸ்தன்
ஈட்டியாற் குத்தப் பிக்கஸ்
மேனியி லூறு பட்டு
மேதினி வீழ்ந்தான் மாண்டு.

21. முடியணி மன்னர் பார்க்க
மூவரும் பட்டு மாள
ஒடுகிய வாயில் தாண்ட
ஒன்னலர் வேறு மூவர்
கடலதிற் கொள்ளை செய்யும்
கள்ளலா சுலசு தானும்
அடலொடு கோலங் கொன்ற
ஆரன்சோ டாக்னஸ் வந்தார்.

22. எருமினஸ் கையால் ஆரன்ஸ்
இன் னுயிர் பொன்றி மாள
அரியபோர் ஆற்றி ஆக்னஸ்
இலத்தியஸ் கையால் மாண்டான்

ஒரேசியஸ் கள்ளன் நெஞ்சில்
உருவிடக் குத்திச் "சோரா
ஒருவரும் இனிமேல் அஞ்சார்
உன்கொடி கண்டே" என்ருன்.

23. அலையென ஆடி அங்கே
அகல்வெளி நின்ற பேர்கள்
மலையென வீர ரண்டு
மாண்டுமே மண்ணில் வீழ
கலகல வென்றே முன்னம்
களித்தவர் கலங்கி யுள்ளம்
உலைவுற நிரையின் நின்றே
தளம்பினர் ஓதம் ஒத்தே.

24. அணிகளாய் வகுத்து நின்ற
அப்பெரு சேனை வீரர்
மணிகெழு வாயில் நின்றே
மன்னிய அறுவாள் தூரம்
அணுகிடார் விலகிநிற்க
அடலொடு பிரித்து நீக்கி
அணிபெறு தூக மீது
ஆஸ்றாம் பிரபு வந்தான்.

25 மண்டமர் கடந்தோன் வாளை
மாற்றலர் தூக்கப் போமோ?
கொண்டனின் முதுகிற் றாங்கும்
கேடயம் மடிப்பு நான்காம்
கொண்டலை நிகர்க்தும் வேகக்
குதிரைமேல் வந்து மேவத்
தண்டுகள் விலகிப் போகத்
தயங்கினோர் ஆற்ற லுற்றார்.

26. முன்னடி நின்ற மூவர்
முன்பவன் முறுவல் செய்தே
பின்னிடு வோரை நோக்கிப்
பிரபுவும் இகழ்ந்து கன்றிக்
கொன்னுறும் கோணய்க் குட்டி
குழுவினைக் கொன்ற பின்னர்
என்னுடன் தொடா்ந வீரோ
எழில்பெறு நீவிர் சொல்லீர்.

27. உருவின வாளை யோங்கி
ஓரேசியஸ் உச்சி தாக்க
விரைவுடன் வந்த வீசனை
வேதிகை கொண்டு காத்துச்

சிரமதில் விழாது தாங்கச்
சித்தகம் உரைசி ஒள்வாள்
உரமுடன் தொடையிற் றாக்க
உதிரமும் வந்த தோடி.

28. ஆறெனக் குருதி பாய
ஆயசம் மேலிட் டங்கு
ஏறனை வீரன் சற்றே
எருமினஸ் மேலே சாய்ந்தே
ஊறடை உழுவை யென்ன
உரனொடு முகநேர் பாய்ந்து
வீறுறு கட்கம் கொண்டு
வீரனும் உருவக் குத்த,

29. குத்தின குத்தால் வீரன்
குறும்பிடி வாயுட் போந்து
மத்தக மூடு சென்றே
மறுபுறம் வந்தே நிற்க
குத்திரம் விளங்கி நிற்கும்
கோடரம் மின்னல் பட்டே
மத்தியில் வீழ்தல் போல
மண்ணிலே வீழ்ந்து மாள,

30. மிடலொடு கழுத்தைக் காலால்
    மிதித்தவன் கைவாள் பற்றி
தடவையோர் நாலு தானே
    தடங்கையால் இழுத்த போதே
அடலுறு கட்கம் கையில்
    அலகொடு வந்த தென்றால்
கடவிணை குத்தின் ஆற்றல்
    கணித்திடப் போமோ பின்னர்?

31. பொதும்பரில் நறவச் தேடி
    புகுத்தவன் கையைக் கொத்த
வெதும்பிடு நாகஞ் சீற
    வெருண்ட வக்கனையே போல
ஒதுங்கின ஒன்னார் நோக்கி
    ஒரேசியஸ் ஏது சொல்வான்
"விதுப்புடன் விரைந்து வாரீர்
    விருந்தை உண்ண" வென்றான்

32. ஈண்டிவை நிகழும் வேலை
    இயலுறு ரோம ரெல்லாம்
காண்டகு பாலத் தூண்கள்
    கருத்துடன் வெட்டிக் கொத்திக்

தீண்டியே அசைத்த பின்னர்
    கிட்டினி வீழு மென்று
தாண்டிடக் கூவி னின்றார்
    தகைமைசேர் மூவர் தம்மை.

33. மன்னிடு ரோமர் கூவ
    மாண்புடன் திரும்பி னாரே
இன்னலும் நீங்கிற் றென்றே
    எருமினஸ் இலத்தி யஸ்தாம்
ஒன்னலர் மத்தி இன்னம்
    ஒரேசியஸ் நிற்கக் கண்டே
முன்னினர் துணைய தாக
    முடுகியே திரும்பிச் செல்ல.

34. அடியது வைக்கு முன்னே
    அடியொடு பால மங்கே
இடியது இடித்த வண்ணம்
    இடிந்திட ஒரேசி யஸ்ஸை
துடியனும் செக்றஸ் தார்க்கின்
    "தொடர்ந்தினிப் பிடியு" மென்றான்
வடிவுறு மன்போர் சீனா
    "வந்துனைச் சமர்ப்பி" யென்றான்.

35. விழுத்தகு பால மங்கே
விழுந்திட வணையே யென்ன
கழித்திடு பெருக்கு நீரைச்
சுவரென யெழுப்ப வெள்ளம்
பழித்திடு ஆற்ற லோடு
பலகையைப் பாலத் தோடே
கொழித்திடு மாழிக் கெற்றக்
கொடுநனி போயிற் றம்மா.

36. ஏதிலார் சொல்லைச் சற்றும்
ஏற்றிடா தாற்றை நோக்கி
“ தாதையே ரோமர் போற்றும்
தகைமிகு தைப ரேகேள்
பாதையிற் றியங்கு மென்னைப்
பார்த்தருள் புரிக ” வென்று
சீதமார் நீரிற் பாய்ந்தான்
சிறப்புறு கவச மோடு.

37. பாய்ந்தவன் களைப்பி னாலும்
பட்டதோர் காயத் தாலும்
பாய்ந்திடு வெள்ளத் தாலும்
படைகலன் பாரத் தாலும்

தேய்ந்திடு வலிதான் குன்ற
செம்மையாய் நீந்த வாற்றான்
மாய்ந்திடு வோரைப் போல
மலிதரு சலத்தில் மூழ்க.

38. நகைத்திடு பகைவர் தாமும்
நட்புறு நண்பர் தாமும்
திகைத்தவர் கலங்கி யுள்ளம்
திறந்திடு வாயை மூடார்
பகைப்பற கண்ணை யூன்றிப்
படர்திரை பார்த்து நீர்மேல்
தகைப்புறு வீரன் சென்னி
தோன்றிடத் தட்டி யார்த்தார்.

39. மதிப்புறு மாட்சி யோனை
மாரியாற் பெருகு வெள்ளம்
மிதப்பென கீழும் மேலும்
விசையொடு தள்ளிச் செனறும்
எதிர்ப்புடன் நீந்திப் போதல்
யாவரும் பார்த்தே வீரன்
துதிப்புறு செயலை நாடிச்
சோர்வின்றி நோக்கி நின்றார்.

40. தீரம தெஞ்சா நெஞ்சன்
        தீர்த்திகை யுதவி யாலே
வீரியம் குன்றா னாகி
        விரிகரம வீசி யங்கு
வாரியை நோக்கி நீந்தி
        வந்தவன் கரையைக் கிட்ட
ஊரினர் சூழ வந்தார்
        உயர்த்தியே தூக்கிச் சென்றார்.

41. கரிசனை யோடு ஊரார்
        காவியே கொண்டு போகப்
புரிசையில் நின்ற பேர்கள்
        பூமலர் சொரிய லுற்றார்
வரிசையாய்ப் பெண்கள் நின்று
        வாழ்த்தினார் அரற்ற லுற்றார்
புருஷர் தாம் சுமந்து பின்னே
        போற்றியே அவையிற் சேர்த்தார்.

42. அளவற உவந்து போற்றி
        ஆசன மளித்துக் கன்சல்
வளமலி கழனி யொன்றை
        மானிய மாக வீந்து

வளருக அவன்சீ ரென்ன
        வெண்கலச் சிலையை வார்த்து
பளபள வென்று மின்ன
        பட்டண மத்தி வைத்தார்.

43 பதுமையைச் செய்த வண்ணம்
        பகருவேன் இன்னும் கேளீர்
முதுகிலே கவசந் தாங்கி
        ஊன்றிய முழங்கா லோடு
செதுக்கிய சிலையிற் பொன்னால்
        சீரியோன் கதையைத் தீட்டிப்
புதுமையே யென்று யாரும்
        புகழ்ந்திட காட்டி னாரே.

44. சோரியாய் மழைதான் ஊற்றச்
        சூறையும் விரைந்து வீச
மாரியின் குளிரை நீக்க
        மண்டெழு நெருப்பைச் சுற்றி
பாரியும் மக்கள் தாமும்
        பண்புடன் இருந்து கேட்க
வீரியன் கதையைச் சொல்லி
        விஸ்தரித் திடுவர் சில்லோர்.

45. கூடியே இருந்து மாதர்
கூடைகள் முடைகு வோரும்
ஆடைகள் செய்ய வென்றே
ஆயிழை தனை நூற் போரும
மேடையில் இருக்கும் வேளை
மெச்சிடப் புகலு வாரே.

11-ம் பாட்டு.

குறள் அறுபது

1. வித்தக மீயும் விமலன் பதமதைப்
பத்தியாய்ப் போற்றாய் பணிந்து.

2. அரசனி னாணையை அன்புட னேற்றுச்
சிரசினிற் றாங்கல் சிறப்பு.

3. ஆத்திரப் பட்டோர் அரிய கருமங்கள்
கீர்த்திபெறச் செய்வரோ கேள்.

4. இடுக்கண் உறுங்கால் இடைகட்டிக் கொள்வோன்
நடுக்க முறுவானோ நைந்து.

5. ஈவுளோர் தேட்ட மிறைகிணறு போலங்கு
மேவி மிகுந்திடுமே மேல்.

6 உள்ள தோளித்திங்கே ஓமது செய்வோனைக்
கள்ளரிற் காண்பாய் கடை.

7. ஊக்க முழைப்பிங் குயர்பதவி உய்திட்டே
ஆக்கம் பெருக்குமோ ராறு.

8. எறும்பின் வழியதை எண்ணி அடையின்
உறுங்கொல் வறுமை உரை.

9. எறலும் தாழலும் என்றும் நிலைத்திரா
மாறியே மாரியும் வரும்.

10 ஐயனின் வழிப்பட்டே ஐந்தை அடக்குவோன்
மெய்யடி போற்றாய் விரைந்து.

12. ஓடிடும் நீரிலும் உண்டென்பர் சாரமது
பாடலில் ஆய்வாய் பயன்.

13. ஔஷத மேனும் அளவுகடந் துண்டாக்கால்
வெவ்விஷ மாகுமே மேல்.

14. கற்றோர்தம் கல்வியால் காட்டும் பயனென்கொல்?
மற்றவர்க் கூட்டலே மாண்பு.

15. சக்கர மாய்ச்சுழல் சாகரஞ் சூழ்புவியில்
தக்கோர்ணாய்த் தங்கல் தகும்.

16 வருமுன்னே காப்போன் மதிப்புறு செல்வன்
பருவத்தே செய்வாய் பயிர்.

17. நிறைந்த கதிரே நெகிழ்ந்து மடியும்
குறைந்தே குலுங்குங் குடம்.

18 ஆபத்து வேளை அறுநீச நண்பனே
சாபத்தை ஏற்கும் சவம்.

19 முகமன் விரும்பியே மோச மடைவோர்
அகமதி லாழ மிலார்.

20 விதவையின் ஆஸ்தி விழைந்து கவர்வோன்
பகரெனக் கொள்ளுவர் பார்.

21 பொறுமை யிலாதான் புகழழிந் திங்கு
சிறுமையு மெய்துவான் தேர்.

22 பாலது விட்டதும் பள்ளியை நோக்கிடு
காலங் கடத்தலே கேடு.

23. வில்லெடுத்து நாணேற்றி விண்மீனை எய்தக்கால்
செல்லும் மதியளவு சேண்.

24. குரைத்தே குதித்திடும் குக்கல் கடியா
தூரத்தே முபலாரு முண்டு.

25 வெயர்க்க விறுவிறுக்க மெய்வருந்தி நட்டோன்
அயர்ந்தங்கு நித்திரிப்பான் அன்று.

26. பாய்ந்துருளும் கல்லின்மேல் பாசி பிடிக்குமோ
மாய்ந்திடினும் நின்னிலையில் மாள்.

27. கனியால் அறியலாம் காய்க்கும் மரத்தை
வினைபால் நார்தமை மேல்.

28 தாகதத்தைப் பாகர் தாவண்டை சாய்ப்பர்
பருகிடப் பண்ணுவரோ?

29. விரும்பும் பொருளில் வெருங்கையோ டேகேல்
திரும்பு சிறிதேனும் பெற்று.

30. நல்லார்க்கும் பொல்லார்க்கும் நன்மாரி பெய்தலால்
அல்லாதார் நீக்கலோ அன்பு?

31. நீணிலத்தில் நற்குணங்கள் நீசர்பால் தோன்றுவோ
கோணகம் கொண்டலையுங் கல்.

32. உறவினர் ஒன்றுப் ஒருமித்து வாழ்ந்தால்
மறவரும் அஞ்சுவரே மற்று.

33. கைப்பொருள் மல்கிடக் கர்த்தன் மறந்தவர்
மெய்ப்பொருள் காண்பரோ மேல்.

34. அடிவாங்கித் தேராத அன்புசேர் மைந்தன்
கடிவாள மில்பரியே காண்.

35. பொற்பேழை ஏறியே பூவலம் வந்தோரும்
புற்பேழை செல்லாரோ ? புக்கு.

36. செல்வத்திற் செல்வம் தெவிட்டாத செல்வமாம்
கல்வியாம் செல்வமது காண்.

37. அலைத்தலில் நீராழம் அன்றோ? அளவார்
அலப்பில் மவுனர் அகம்.

38. பத்தியே மக்காள் பரத்திலுய்க்கும் மேனியின்
சுத்தியும் சொல்லிலச் சால்பு.

39. எண்ண எழுத இயலாத பெண்டிரை
மண்ணெனக் கொள்ளலாம் மற்று.

40. பகையாக ஆர்த்தோர்பின் பண்பினராய் வந்தால்
நகையாது ஏற்றல் நலம்.

41. பூணணியோ மாதற்கு பொன்னும் மணியுமிங்கு
நாணுடைய கற்பதுவே நம்பு.

42. இடமொடு காலம் இசைய முயன்றால்
முடிவிலா வெற்றிதரும் முன்னு.

43 மண்டல வாழ்வும் மணமும் மகிழ்ச்சியும்
கண்டாய் கழியுங் கணு.

44. ஞாலம் புரத்தல் நலமென நச்சுவோர்
ஆலமென் றஞ்சுவர் பின்.

45. உத்தமருக் கிங்கே யொருதீமை யுண்டாமோ
எத்தனை எண்ணம் அடும்.

46. சுழலும் சருகன்றோ துட்டன் நிலையில்
அழிவனோ நல்லோன் அலைந்து.

47. புத்தியைக் கேட்பவன் புத்திரன் ஆவதொடு
சித்தி பெறுவான் சிறந்து.

48. மீசையுங் கேசமும் வெண்ணிற மாகியும்
ஈசனைத் தேடார் என்?.

49. சேட்டிலான் செய்திடும் சீரில் செலவுகள்
மட்டில் வறுமையே மற்று.

50. மானிடர்க்கு வேண்டுமோ மாளுதற்கு வேறேது
மான மழிந்தபின் மற்று.

51. பிறவி பிறப்பு பிணியுடன் மூப்பே,
இறைவன் விதித்தவைகாண் இங்கு.

52. கொடுங்கோல் அரசன் கோடிகீழ் வாழ்தல்
நெடுந்துயர் ஆழ்த்தும் நிதம்.

53. பொருபோர் புரிந்தே புறங்காட்டிச் சென்றோன்
வருபோர் புரியானோ? வந்து.

54. மதகினோ டள்ளுண்டு மாய்வோன் பதரை
உதருன் பிடிப்பான் உவந்து.

55. தாவுறும் துன்பத்திற் தாங்கிய நண்பனை
யாவரே போற்றார் இனிது?

56. வித்தகர் என்போர் விழித்திங் குழைத்தோரே
மற்றோர் உறங்கிமடி வோர்.

57 கிளர்சினம் பூண்டோர்க்கு கிட்டுமோ? தைக்கும்
வளைசிறு வில்லே மதி.

58. கண்ணியம் நாடுவோன் கார்கோள் கடப்பானே
நுண்ணிய நூல்பல வாய்ந்து.

59. கனியில் மரமே கனலுக் கிரையாம்
கனிவிலார் வாழ்வே கசப்பு.

60. காத்திரத் தோடு கடவுளைத் தேடுக
மாத்திரையிற் மாள்வார் பலர்.

12-ம் பாட்டு

விடுகதை வெண்பாக்கள்.

1. பார்மேற் பறந்திடும் பட்சியு மல்லவே
நார்மேலும் நின்றாடும் நண்பனே— நீர்மீ
திருக்குமொரு மீன்போல் இருக்குமுரு சொல்வீர்
மருக்குலவு நல்லீர் மகிழ்ந்து.

2. விண்ணில் இருந்திடும் விண்மீன் அதுவல்ல
மண்ணில் இருக்கும் மறைந்துள்ளே— எண்ணீர்
மறந்திடார் பெண்டிர் வருந்தியே சேர்ப்பர்
திறந்தெரிந்து கூறீர் தெளிந்து.

3. தொட்டவர் பின்னே தொடர்ந்திடு மப்பனே
மட்டமோ நெற்பயிரின் மட்டமே — இட்டமாய்
வெண்ணிலத்தில் வீணாய் விளைந்திடும் வித்லதையுன்
நுண்ணறிவால் தேர்ந்து நுவல்.

4. காக்குமே வெம்மைக் கதிரோன் தன் வெப்பமதைக்
காக்கையின் எச்சமதைக் காக்குமே— காக்கும்
துளிநனைத்தி டாமற் துணிமணியை அன்பின்
வெளியிடாய் வீரா விடை.

5 பயந்தனைத் தீர்க்கும் பணிவரவை யோட்டும்
வயது சென்றோர் கையுதவி யாகும் — கயமைவலி
நாயின் கடிவிலக்கும் நாடிவரு பேயகற்றும்
நீயிதனைக் கூறுய் நினைந்து.

6. பறந்திடும் காற்றில் பதரது வல்ல
மறைந்திடும் மாலை மருவ — குறைந்தாற்
குறையும் மழைதான், குடிமாண் பகலும்
அறையீர் இதனை அறிந்து.

7. தொங்கியே வாழ்ந்திடும் தூக்கணமும் அன்றுமே
மங்கல் வெளிநாடு மாலையன்று — மிங்கிதுதான்
வாயாலே தின்றகனி வாயாலே என்பார்கள்
சேயே உரையாய் தெரிந்து.

8. அரைக்காசு பண்டமது ஐம்பது பேர்க்கு
சரிக்கான பங்காம் சபையில் — தரிக்கின்ற
வெண்துயிலுக் கொப்பாகும் வெண்மை நிறமுடை (தாம்
ஒண்டொடியாள் கூறீர் உரை.

9. தோலிலே செய்வர் துருத்தியதுவல்ல
காலிலே மாட்டிடும் கழலது — போலல்ல

உல்லாசம் ஈந்திடும் ஒய்யாரப் போக்கிலே
நல்லோசை ஈயும் நவில்.

10. மணவறை செல்லும் மணவாளன் அல்ல
மணமது வீசுமலர் அல்ல — திணிவுடை
கல்லில் உரைத்திடக் கந்தக் குழம்பாகும்
எல்லவரும் பூசிடுவர் என்?

11. கங்குலில் தோன்றிடும் கள்வனு மல்லவே
மங்கலில் வந்திடும் வௌவால்போல் — எங்கணும்
கொம்பனைப் போலவே கொம்பிருந்தும் முட்டாது
கொம்பிருக்கும் பட்சியெது கூறு.

நீதி வசனங்கள்

முதற் பாகம்

அன்பே அறமாம்.
அஞ்ஞானம் அகற்று.
ஆசையை அடக்கு.
இரப்ப திழிவு.
இரட்சை நாடு.

ஈசன் மறுக்கேல்.

ஈன்றோர்ப் பேண்.

உண்மையே உயர்வு.

ஊதாரி யாகேல்.

எளியோர் துணையில்.

ஏறுமுன் எண்.

ஐம்புலன் அடக்கு.

ஒன்னலர் நேசி.

ஓரம தன்னேல்.

ஔஷதம் காவேல்.

இரண்டாம் பாகம்

அறிவின் பெருக்கம் அழியாச் செல்வம்.

மாறுபாடு வினைக்குக் கேடு.

தேனே யெனினும் தெவிட்டப் புசியேல்.

மின்னுவ தெல்லாம் விண்மீன் ஆமோ?

கால தாமசம் சாலவே மோசம்

மக்கள் என்போர் மாண்பட வாழ்வோர்.

பிறர்நலம் தேடுபின் தன்னயம் வாய்க்கும்.

கோப மடக்கின் கோமகன் ஆவாய்.

செல்வ மிருந்தென் சீரிலார்க் கழிவே.

சுகத்தோ டிருக்கச் சுத்தமே வேண்டும்.

தாழ்வும் வாழ்வும் தன்வினைப் பயனே.

உண்மையாம் நண்பன் உயிரையுங் கொடுப்பான்.

ஊக்க முடையோன் உயர்வினை யடைவான்.

நாவை அடக்குவோன் நயமது காண்பான்.

மூன்றும் பாகம்.

1. எளியோரை ஏளனங்கள் செய்ய வேண்டாம்
இயலாத குருடுமை பழிக்க வேண்டாம்
களியாட்டிற் காலமதைக் கழிக்க வேண்டாம்
கள்வருடன் பங்காளி யாக வேண்டாம்
அளியாது தனந்தனையே புதைக்க வேண்டாம்
அகந்தையொடு வீண்பெருமை காட்ட வேண்டாம்
ஒளியாரும் உன்னதத்தின் சோதி தன்னை
ஓயாது போற்றிடுவாய் ஏழை நெஞ்சே.

2. வீணாக வார்த்தைகளை யலப்ப வேண்டாம்
விருந்தினரை மனநோகப் பேச வேண்டாம்
காணாத சங்கதியைப் பரப்ப வேண்டாம்
கண்டதெல்லாம் வாயுளறித் திரிய வேண்டாம்

கோணாத பாதைவிட்டு விலக வேண்டாம்
கோபமதை மனதினிலே பேண வேண்டாம்
வாணாளை வரையறுக்கும் வல்ல வேந்தை
வந்தனைசெய் அடியவரை மதிப்பாய் நெஞ்சே.

3. தாய்தந்தைக் கெதிர்மாற்றம் பேச வேண்டாம்
தளர்ந்தாரைத் தாங்கிடவே மறக்க வேண்டாம்
வாய்தன்னால் வம்புதனை விளம்ப வேண்டாம்
வலியவரைப் பகையாக்கிக் கொள்ள வேண்டாம்
பாய்ந்தென்றும் விளையாடத் தவற வேண்டாம்
பயமுறுத்தும் வீண்கதைகள் கேட்க வேண்டாம்
ஆய்ந்திட்ட ஆரணத்தின் மூலந் தன்னை
அன்புடனே ஏற்றிடுவாய் ஏழை நெஞ்சே.

4. பழுக்காத பழந்தனையே தின்ன வேண்டாம்
பகிராமற் பார்க்கவைத்து உண்ண வேண்டாம்
அழுக்கான ஆடைதனை அணிய வேண்டாம்
அயலார்மேல் அழுக்காறு கொள்ள வேண்டாம்
இழுக்கான பழக்கமதை நத்த வேண்டாம்
இருதயத்தை ஆசையினிற் செலுத்த வேண்டாம்
அழிக்காது பாவியையும் அணைக்கும் வேந்தை
அடைக்கலமா யடைந்திடுவாய் பேதை நெஞ்சே.

5. புரவலனின் ஆணையதைக் கடக்க வேண்டாம்
புரோகிதரின் புத்திமதி தட்ட வேண்டாம்
வரவதிற்கு மேற்பட்ட செலவு வேண்டாம்
வாக்கதுதான் பண்ணியபின் மறக்க வேண்டாம்
பரமனது கற்பனையை மீற வேண்டாம்
பணமதுதான் தெய்வமென்று நத்த வேண்டாம்
வரமனைத்தும் ஈந்தருளும் ஈசன் பாதம்
வருவினைக்குத் தஞ்சமெனச் சேராய் நெஞ்சே.

6. சேபதமயில் இல்லமதிற் தங்க வேண்டாம்
தீட்சையதை அசட்டையது செய்ய வேண்டாம்
கெபிதனிலும் கர்த்தனைநீ மறக்க வேண்டாம்
மேலோரை அற்பமதாய் எண்ண வேண்டாம்
சபைதனிலே குழப்பமதைப் பண்ண வேண்டாம்
சத்தியங்கள் எடுத்தற்கும் பண்ண வேண்டாம்
விபதமற்ற நெஞ்சினரைக் காத்து நிற்கும்
விமலனைநீ விருப்புடனே வாழ்த்தாய் நெஞ்சே.

7. இடி இடிக்கில் மரத்தடியில் நிற்க வேண்டாம்
இரக்கமது இல்லாதோர் சேர்க்கை வேண்டாம்
துடிதுடிக்க வுயிர்களைநீ வதைக்க வேண்டாம்

துன்புறுத்திப் பிராணிகளை நடத்த வேண்டாம்
குடிகுடிக்க வொருபோதும் விரும்ப வேண்டாம்
குளியாமல் அழுக்கோடு திரிய வேண்டாம்
நடுநடுங்கிப் பவமுணர்ந்தே நிமலன் தன்னை
நடுத்தினத்தின் தஞ்சமென அடைவாய் நெஞ்சே.

மாணவர் மஞ்சரி

இரண்டாம் பாகம் முற்றுப் பெற்றது.

மாணவர் மஞ்சரி

மூன்றாம் பாகம்

சிம்சோன் வெண்பா

பாயிரம்

கடவுள் வாழ்த்து

பிதாவாகிய கடவுள்

நேரிசை வெண்பா

1 நாவலர் போற்றிடும் நற்றமிழிற் சிம்சோனின்
பாவினை பண்புடன் பாடுதற்கு—மூவனாய்
மூன்றில் முதல்வனாய் மூவுலகு மூலமாய்த்
தோன்றிய நாதன் துணை.

குமார கடவுள்

2 பாருரு வானாமுன் பாலனாப் வீற்றிருந்து
பாருளோர் மீளப் பலியானைப் — சீருற
விண்தல மீதிருந்து வீழும் மழையெனப்
பண்தர வாராய் பரிந்து.

பரிசுத்தாவி

3 ஆதியி லேகனா யந்திரத்தி லாடிப்பின்
சோதியிற் சோதியெனத் தோன்றியே — பூதலத்தோர்
ஈடேற மெய்மறை ஈந்த பரிசுத்தா
நாடியே யீந்தருள் நா.

அவையடக்கம்

4 தாமரைமுன் கூசா தலையெடுக்குந் தும்பையென
நாவலர்முன் பாவியற்ற நாடினேன் — பாவலரே
காருணியங் காட்டிக் களைவீர் குறைகுற்றம்
சீரன்ன நீராரே சேர்ந்து.

5 அம்பா னுதரித்த ஆபிரகாம் சந்ததிமே
லம்புவியிற் சிம்சோ னரசாண்ட — சம்பவத்தை
எல்லையி லாழியெனும் ஏராரும் செந்தமிழிற்
சொல்லுவான் வந்தேன் துணிந்து.

6 வித்தக வேத விவிலிய நூலிலிவ்
வுத்தம காதையை யோர்ந்தெடுத்துப் — பத்தியாய்ச்
செந்தமிழ்ப் பாவில்யான் செப்பல் முடவன்முன்
செந்தேன் விரும்பிய சீர்.

7 கடவுளின் திவ்விய கற்பனை மீறி
மடமையால் மாய்ந்து மடிந்த — அடலுறு
அண்ணலின் காதையை ஆவலாய்க் கற்றுணர்ந்து
மண்ணோரே நீக்கீர் மறம்.

நூல்

செனன காண்டம்

நாட்டுச் சிறப்பு

1 நீர்மிகுந்த கானானின் நேரில் நிலவளத்தை
சீர்மிகவே செப்பத் திறனுண்டோ? — பார்மிசை
ஈடிதற் குண்டோ வெனச்சாற்றும் தேசமது
நாடிடுவோர் போற்றிடும் நாடு.

2 வடமேற்கில் லீப்னோன் வடகிழக்கில் எர்மோன்
நெடுவரைகள் தாங்கியே நிற்கும் — தடமதில்
வான்தோய் தருக்கள் ; வழிந்தங்கு பாயுமே
கான்தோய் நதிகள் களைத்து.

3 தேனோடும் பாலோடும் தேயம் பலஸ்தீனா
வானாடே யொக்கும் வளமுற — கானானின்
யோர்தான் நதிக்கரையில் யோகிகளின் கூட்டமதை
யார்தான் கணிப்பர் இனி.

4 யூகமாய்ச்செய் நீர்க்கால்கள் யோர்தா னிருகரையில்
வேகமாய்ப் பாய்ந்து விளைத்திடும் — தாகமதால்
வாடி வறண்டிடும் வாற்கோ துமைவயல்
நாடு செழித்தோங்க நன்று.

5 புற்றலமை தானமொடு பூத்த மலர்க்கானம்
நற்றண்ணீர்க் கேணிகள் நன்கங்கு — பெற்றே
குளங்களு மோடைகளும் குட்டைகளு மல்கி
வளங்கொண் டிருந்தே மற்று.

6 ஓங்குகே தாரம் ஒலிவமரத் தோப்பொடு
தீங்கனிச் சோலைகளாம் திக்கெலாம் — பாங்குடன்
தொங்கு திராட்சத் தொகுதியாம் தோட்டங்கள்
அங்கு மிகுந்த வடுத்து.

7 தித்திக்கும் நல்ல திராட்சச் செடிகளின்
மத்தி தளைத்து வளர்ந்திருக்கும் — அத்தியொடு
மாதளை தூதாயீம் மற்றும் கனிமரங்கள்
ஏதே னெனும்பொழி லொத்து.

8 அரியும் காடியும் ஆளுகைசெய் காடு
நரியோடு கோணாய்கள் நாடும் — வரையில்
மலைத்திரள் மல்கிடுமம் மானாட்டின் மாண்பை
உரைத்திட வுண்டுமோ நா?

9 கூட்டமா மொட்டைகளும் கோவேறு மந்தைகளும்
வாட்டமில் மாவும் வளர்ந்தங்கு — நாட்டிலே
மேய்ப்பர் குழாங்களொடு மேன்மையாய் வாழ்ந்திடும்
வாய்ப்பதைக் கூறவோ மற்று.

10 இந்திய தேயத் திலங்குபட் டாடைகள்
விந்திய மாணிக்க மேதகு — விந்தையுற
ஆபர ணாதிகோண்டவ் வூர்வணிகர் சேர்த்தனர்
மாபர மொட்டைமேல் வைத்து.

11 தீருசீதோன் மன்பெரு செல்வத் துறைமுகங்கள்
சேரும் மாக்கலங்கள் செப்பரிய — சீருளவாம்
பண்டமாற்று செய்வோரும் பல்பொருட்கள் விற்போரும்
கண்டவிடம் நிற்பர் கலந்து.

12 விரைசெறி பண்டமேற்ற விள்ளரும் மாண்பிற்
திரைசெறி மத்திய சிந்தின் — கரைசேர்
பாய்மரக் காட்சியோ பார்வைக்குத் தோன்றும்வான்
தோய்மரச் சோலையே போல்.

மாதர் மக்கள் சிறப்பு

13 இழையணி மாதர் இடுப்பிற் குடத்தை
மழையொடு தூக்கியே காண்பார் — குழலார்தம்
தோழருடன் பேசுந் தொனிதா னெழுப்பிடும்
யாழி னிசையென வாங்கு.

14 மங்கலப் பெண்டிர் மணிக ளொலிக்குமே
அங்கடல் வாழ்ந்தே ஒலிதரும் — சங்கென
ஆங்கவர் மேலணி ஆடை சொலிக்குமே
ஓங்குவான் வில்நிற மொத்து.

15 விளையாடு பாலரின் வெற்றியி னார்ப்பும்
வளையாடு கையினர் வாழ்த்திக் — களையாத
மென்னோசைப் பாடலும் வீதியிற் கேட்குமே
என்னேர முந்தா னிசைந்து.

16 பக்கமெலாம் பார்க்கப் பளிங்குமா மாளிகைகள்
சொக்களாவு வீடுகள் தோப்புகள் — திக்குக
ளெங்கும் நிறைந்திட இஸ்ரேல் எருசலேயிற்
பங்கமற வாழ்ந்தனர் பண்டு.

செல்வத்தால் நேர்ந்த ஈனம்

17 செல்லம்வந் தூறச் செவிடுமை யந்தகராய்ச்
சில்லோர்தா மாவரெனச் செப்பிடுவர் — அல்லோ
வதுபோல் நிலையிலா ஆஸ்திநம்பித் தேவை
மதிபோய் மறந்தனர் முற்று.

18 பச்சை மாத்திற் பழுதுவந் துற்றபோல்
இச்சையால் ஈச னிகழ்ந்திட்ட — வச்சனப்
கோதுறு வன்பெலிஸ்தர் கொள்ளையாய்ப் போயினர்
தீதது சூழத் திகைத்து.

19 மாசுறு நீரார் மறம்பயில் சிந்தையார்
தோஷமுறு விக்கிரகத் தொண்டுபுரி — நீசர்
இரக்கமற்றே செய்த விடுக்கண் பொறும
லுருக்குற்றே நைந்தா ருளம்.

கடவுளிரக்கத்தா லிரட்சகன் தோன்றல்

20 கற்பனை மீறிக் கடவு ளடிதொழார்
அற்ப ரடிகீழ் அழுங்கிடத் — தற்பரன்
பாவ முணர்த்திப் பரிவுட னெண்ணினர்
காவல னேற்படுத்தக் காண்.

21 பன்னிரு கோத்திரத்தில் தாண்மரபிற் பாலனுக்காய்ப்
பன்னாளாய் நோற்றுப் பயனற்றே — இன்னலுறும்
பத்தன் மனோவாதன் பத்தினி யாளுடன்
நித்தலை வேண்டினன் நின்று.

22 பத்த ரிருவரும் பத்தியாய்ப் பூசனை
புத்திரன் வேண்டிப் புரிந்திட — அத்தவத்தை
தொண்டர்க் காணுகும் தொல்புவி நாயனார்
கண்டுதூது விட்டார் கனிந்து.

தெய்வ தூதன் காட்சிதரல்

23 மாது சிரோமணி மங்கை வயற்றெழில்
நாதன் தொழுது நடத்தவோர் — தூதனும்
பட்டப் பகலிலே பார்த்தோர் திகிலுறச்
சட்டெனத் தோன்றினன் தான்.

24 "மங்களம் கூற மகிழ்வுட னிங்குற்றேன்
பங்கய நேர்வதனாய்! பார்த்திடாய் — எங்களுயர்
அத்தன் அருளினால் அன்னையே யாகுவாய்
பத்தியின் மாட்சியைப் பார்.

25 உன்னிட மவ்வா றுதிக்கும் புதல்வன்
தன்னின மொன்னார்முன் தாழ்வுறா — மன்னனாய்
வீற்றிருந்து வீராதி வீரனென மிக்கதோர்
ஆற்ற லடைந்திருப்பான் அங்கு.

26 பேதாய்! கவனியாய் கொற்றவன் தோன்றுமுன்
தீதைத் தினமுந் திரட்டியே — வாதை
யிழைக்கு மதுபான மேனைய தீட்டை
முழுக்க வகற்ற முயல்.

27 பின்னுமோர் செய்தி பிரியாய் யியம்புவன்
மன்னன் சிரசில் வனப்புற — மன்னிடும்
செம்மயிரைக் காப்பாய் சிரையாது சற்றுமது
செம்மல் உயிர்நிலை தேர்.

28 புத்திரன் தன்னைநீ பூரணனுக் கென்றுமே
தத்தமது பண்ணியே தாள்பணி — உத்தமியே!
ஆற்றுவா யிப்பணி ஆவலாய் நீயென
சாற்றியே சென்றான் தனி.

29 தேடியலைந் திட்டதோர் தெய்வம் குறுக்கிட
நாடியதை நாதனும் ஈந்தருள — வாடிடும்

நாயகன் தன்னிடம் போய் நாரிகூற வெண்ணினள்
தூயன் பகர்ந்திட்ட தூது.

30 புருஷனிட மப்போது புட்பமவ ளேகி
இருதயம் இன்பால் இலங்கிப் — பெருகச்
செயலுறு தூதுவன் செப்பின யாவும்
மயலி லுரைத்தாள் மகிழ்ந்து.

31 முனிவன் மலர்ந்த முகமொடு கேளா
தனிமுதலின் தாள்போற்றித் தாழ்ந்து — "கனிவாய்
அழுகுங் குழந்தைக் கமுதளிக்கு முன்னே
பழுதற வாழ்த்துவோம் பார்.

32 பறக்கொணுப் பார்ப்பின் பசியதைத் தீர்க்கும்
சிறைக்குலம் போலச் செறியும் —கறைபட்
டுலேவுறும் ஆன்மா வுயிர்த்திடச் செய்யும்
தலைவனே! தாழ்வோம் பணிந்து.

33 வேலை நெறிதப்பி வெருண்டிடும் மாலுமி
காலியான வோர்துறை கண்டவாறு — பால
னில்லையென நொந்த விடாரற் றியவா
புலையனேன் போற்றிடேனோ வந்து.

34 நெஞ்சில் நிறுவி நிதசெபஞ் செய்வோரின்
விஞ்சுவினை நீக்கி விளங்கிடும் — தஞ்சமே
யானிங்கு ணுள்ள மிசைந்தறிய வத்தூதைத்
தானிங் கனுப்பீரோ சற்று?"

இரண்டாம் தூது

35 முதியோன் நிதமும் முதல்வனை வேண்டக்
கதிரிடை மண்டும் களைகொய் — மதிபொக்கும்
தோகையள் முன்னரே தோன்றினன் தூதுவன்
ஏகனார் ஏவ இசைந்து.

36 கண்டனள் மின்போற் கணவனை அண்டியே
தெண்டனிட்டுச் சொல்வாள் தெளிந்திட — அண்டர்கோ(ன்
உந்தன் செபத்தை உகந்தே யருளினன்
வந்திடீர் இன்னே வயல்.

37 அங்கது கேட்டலும் ஆவல் மிகுந்துளே
அங்கயற் கண்ணி அடிதொடர்ந்து — "மங்களமாய்
அன்றுரை செய்த அருந்தவன் நீவிரோ
என்றதைக் கூறுமென

38 அத்தனின் ஆலய மெங்குமே வைகலாய்ப்
புத்திர வேண்டல் புரிந்துநீ — பத்தனே

நின்றனை ஆதலால் நிர்மலன் ஏவிட
அன்றிங்கு வந்தேன் அறி.

39 மறைதெரி சீரியோய் மற்றினுங் கேளாய்
இறைநான் அருளுடன் ஈயும் — சிறுசுதன்
கூந்தலை நாவிதன் கொண்டு குறைத்திடாது
நேர்ந்திடாய் நித்தனுக்கு நேர்.

40. மாதவள் பின்னும் மதுவதை நீக்கியே
தீதெனத் தள்ளுவாள் தீட்டதை —பேதமில்
கற்பனை முற்றுமே கைக்கொண்டு வந்தீரேல்
தற்பரன் ஈவார் தயவு.

41. செவ்வியோய் பின்னுங்கேள் செம்மல் தருஞ்சுதன்
நவ்வார் நசரேயன் நம்பியே —அவ்வணம்
எட்டுணையும் தாளா திணங்கி வளர்த்திட
கட்டுடன் காக்கக் கருது".

42. "எந்தனுக் குன்சொல் இயலுக" என்றுமே
வந்திடு ஒற்றனை வாழ்த்தி "யுன்பேர் —எந்தாய்!
அடியோர் தமக்கே அருள்செய்வீ ரெ"ன்ன
அடியினை போற்றினன் அங்கு.

43. "நாம முரைக்க நவின்ற முனிவனே
தாமதைக் கேட்டல் தகுதியோ — ஓமத்
துதிசெபம் செய்குவீர் தூயோன் தனக்கே
அதிசயம் மென்பேர் அறிந்து."

44. "பண்ணுவேன் ஓர்மனு பத்தனே நல்கிடீர்
உண்ணவே பட்சண முண்டதை — உண்ணவே
இட்டயாய் இவ்விடம் இச்சணம் தங்கிடில்
கட்டமோயெம் பாக்கியமே காண்."

45. "உன்னதர் தூதன்யான் உண்டிட நின்றிடேன்
உன்னிடுநை வேத்யம் உகந்திடப் — பின்னைநீ
வானவன் முன்னிலை வாகாய்ச் செலுத்துவாய்
யானோ சுணங்கேன் இனி."

46. உள்ளத்தி லூறிடும் உள்ளன்பு ஓங்கிட
வெள்ளா டடித்து விருப்புடன் — தள்ளிடா
தாரணச் சட்டம்போ லக்கினியி லிட்டுமே
பூரணனைப் போற்றினர் தொன்று.

47. ஓங்கி யெழுந்ததே உத்தம னிட்டதீ
பாங்காய் யெரிந்ததே பண்புடன் — ஆங்கவன்

சேர்ந்தோர் திகிலுறச் சேர்ந்தே பயந்திட
நேர்ந்ததோர் அற்புதம் நேர்

48. கொழுந்துவிடும் தீயதைக் கோவலன் தூதன்
விழுந்துமே பார்த்து விரைந்தே — எழுந்தனன்
அக்கினி வாகனனாய் அத்தரத்தி லேகிடவே
திக்கற் றடைந்தார் திகில்.

49 "கடவுளைக் கண்டோமே கண்டோரும் மாள்வார்
முடிவிதுவே" என்றார் முனிவர் — மடிவில்
மொழிவாள் மனைவியும் "முன்தூ தனுப்பார்
பிழையாது விண்ணவர் பேச்சு".

பாலகன் பிறப்பு

50. ஈசன் அருளோங்க இஸ்ரே லிடும்பைநீங்க
தேசில் பெலிஸ்தர் தியங்கிட — ஆசில்
மறைதான் விளங்கவே மாசில்லாப் பாலன்
பிறந்தானே பாரிடை பண்டு.

51. மறுப்படா திங்களென்ன வந்த மகவைக்
கறுப்பிலாப் பெற்றோர் கனிந்தே — முறைப்படி

வேதபா ராயணம் மேன்மையாம் கல்வியும்
ஓதவழி செய்தனர் ஒத்து.

52. பாலக னப்போ படித்திடு வித்தையொடு
சீலமார் மல்யுத்தஞ் சீர்சிலம்பஞ் — சால
உயர்ச்சிதரும் வில்வித்தை யோடுவெற்றி வீர
முயற்சிகளில் நின்றான் முதல்.

சேனன காண்டம் முற்றுப் பெற்றது.

மணம்புரி காண்டம்

53. செம்மலாம் சிம்சோனும் சீருடன் சுற்றுகையில்
திம்மனாத்து மாதர் திரண்டங்கு — தம்மிடுப்பில்
மட்குட மேந்தி மகிழ்வுடன் செல்லுதலைக்
கட்கொண்டு கண்டான் களித்து.

54 பெண்ணுக் கணிகலமாம் பேரழகுக் கோருருவாம்
கண்ணுங் கருத்துங் கவர்ந்திடும் — நுண்ணிடை
மாதவளைக் கண்டே மயங்கித் திகைத்திட்டான்
வாதில் மலைத்திடா மன்.

55. பெற்றோ ரடுத்துப் பெலிஸ்தரின் பெண்மயிலாம்
குற்றமில் மாதைக் குறித்துவந்தேன் — மற்றொரு

பெண்ணை நினையேனென் பெற்றோரே என்றனன்
அண்ணலெனத் தோன்றியவன் அங்கு.

56. மைந்த னுரைத்தவந்த மாற்றஞ் செவியேற்று
நைந்திடு நெஞ்சமுடன் நண்ணியவர்—“அந்தோ”
தகுந்த மடந்தையர் தாணி விலையோ
மிகுந்த அறிவா விளம்பு.”

57, அவனசை யாம லனுவசை யாதே
அவரிதை யோரா தலைந்து—“தவசின்
பலனு யுதித்தவெம் பாலகா! கேளாய்
நலனுடன் கூறுவோம் நன்று.

58, ஆண்டிடு சாதியார் அஞ்ஞானக் கொள்கையர்
ஆண்டவ ராணை அறியாயோ—மீண்டுமுன்
மாதுலன் வீட்டிலே மங்கை இருக்கையில்
பாதகர் சம்பந்தம் பாழ்.

59. உயர்குல யூதரில் ஒண்டொடியைத் தேடித்
துயர்தீரச் சொல்லிலப் பெண்ணின்—பெயர்தான்
பயந்தோர் தமையடுத்துப் பண்புறப் பேசி
வியந்திடவே செய்வோம் விருந்து.

60. கள்ளுற்ற கூந்தலாள் கன்னி யவளல்லால்
கொள்ளுவனோ வேறு கறுத்துநீர்—தள்ள

இடிவிழுந்த வோர்மரமாய் இல்வாழ்க்கை விட்டே
மடிவன்யான் மண்ணிலே மாண்டு

61. பன்னாளாய் நோற்றுப் பரிவுடன் பெற்றமகன்
மின்னாள்தன் அன்பால் மெலிவுறப்—பின்னவன்
பற்றால் பயந்தே பதைபதைத்து நொந்தவனைப்
பெற்றவள் பாடு பெரிது.

62. வேகமாய் ஓடிடும் வெள்ளம் மறிக்கலாம்
மோக மறித்தல் முடியுமோ—ஆகாதே
மற்றவன்தான் வாழ மனமிசைந்து கொண்டனர்
பெற்றபனம் கல்லாமோ பின்?

மணம் பேசச் செல்லல்

63. நன்முனியும் புத்திரனும் நாடி நடந்தாரே
பன்மலர்ச் சோலை பரந்தவொரு—பொன்வனத்தே
புத்திர னேர்நடையும் போதன் தளர் நடையுஞ்
சித்திரமாய்த் தாளமிடச் சென்று.

64 காண்டா மிருகமுறை காரிருள் பூத்தவனம்
தாண்டி வருங்கால் சலக்கினறு—தோண்டமுன்
பூதமொன்று அவ்வண் புறப்பட்ட காலைதபோல்
காதலன்முன் வந்ததரி காண்.

65. சினமிகவே பார்த்திடுவான் சீரான பாலன்
கனல்மிகக் கான்றிடும் கண்சிவப்ப — மனமதில்
எந்தையை உன்னினன் ஏகபரன் ஆவியப்போ
வந்தவன்மேல் தங்கினதே மற்று.

66. பாலசிங்கம் கிட்டப் பலவானு மேதுசெய்வான்
கோலா லடித்திடக் கோலில்லை — பாலிபனும்
மந்தையி னூடென வாய்பிடித்தே பிய்த்தெறிந்தான்
தந்தை யறியான் சமர்த்து

67. பேரார் பெலிஸ்தரும் பெண்தேடி வந்தவற்கு
சீரார் விருந்துகள் செய்வித்தே — நேரார்கம்
தாக்கமறில் நேரில் சமர்த்த னெனவறிந்து
வாக்களித்தார் பூரித்து மணம்.

68. முனிவன் அவனும் முகூர்த்ததினங் கூறி
தனிவலி மைந்தன் தனக்குக் — கனிவாய்
விரும்பி மணம்முடிக்க மீண்டுவர வெண்ணித்
திரும்பினன் அங்கிருந்து தேர்.

சிம்சோனின் திருமணம்

69 சின்னாட் கழியவே சிம்சோன் சிறப்புடன்
பொன்னாரும் மேனிப் புனைகுழலைச் — சொன்னாற்போல்
மாலைசூட அவ்வண் வரும்போது நின்றனன்
பாலசிங் கத்தையே பார்த்து.

70. நாற்றமெழு சிங்கத்தின் நற்றோல் தனிலங்கு
தோற்றிய அற்புதமென் சொல்லுவேன் — ஏற்ற
மதுகரத்தின் கூடொன்று வாய்ந்திருக்கக் கண்டே
அதுகரத்திற் கொண்டுண்டான் அங்கு.

71. பங்கிட்ட பட்சணம் ஆற்றும் பசியென்பர்
தங்கிவருந் தாதைக்கும் தானீந்தான் — அங்குற்ற
தோரான் முனிவன் ; தெரிந்தகூர் அம்பெனினும்
வீரியம் பேசுவதோ வீறு.

72. மாப்பிள்ளை வந்தார் மணப்பந்தர் போட்டார்கள்
தோப்பின் மலர்கள் தொடுத்தங்கு — வாய்ப்பதாய்
ஆவலுடன் தோரணங்கள் அந்தமுறக் கட்டுவித்து
மேவலுற்றார் பந்துக்கள் மிக்கு.

73. வச்சிரக்கால் நாட்டி வைரமணித் தூணெழுப்பி
மெச்சிடவே வேய்ந்த மணவறையில் — எத்திசையும்

கின்னர கீதங்கள் இன்னிசை செய்திடக்
கன்னியை மாலையிட்டான் காண்.

74. தோழன்மார் முப்பதுபேர் தொன்முறைக் கேழ்நாள்
ஏழு விருந்தருந்தி ஏற்றினர் — வாழநனி
வந்திடு தோழரை வாகாய் முகநோக்கி
மைந்தனுங் கூறுவன் மலர்ந்து.

75. "உச்சிதத் தோழர்காள்! உண்டோர் விடுகதை
பட்சிக்கப் பட்சணமும் பாருளோர் — மெச்சும்
பலத்தோ னிடமிருந்து பாக்காம் மதுவும்
பலித்ததெப்போ கூறுவீர் பார்த்து.

76. விடுப்பீரேல் ஏழ்தினத்தில் வீரர்காள் தேறி
கொடுப்பேன்மு பத்துக் கொடையாய் — உடுப்பதில்
முப்பான் துயிலும்; முடியாது போமாகில்
தப்பில் தருவீரோ நீர்?"

77. ஆகட்டு மென்றவர்கள் ஆனமட்டும் பார்த்தார்கள்
ஆகடியம் செய்தார் அருகிருந்த — தோகையர்தாம்
தீனப் பெலிஸ்தரோ தீயெழக் கண்சிவந்து
மானமற்று மங்கையிடம் வந்து.

78. "கேலிகள் பண்ணக் கெடுநினைவு கொண்டாயோ?
நீலி யழைத்தாயோ நீதமின்றி — ஞாலமதில்
நன்றுநீ வாழ நயந்தறிந்தே கூறிடுவாய்
உன்றன் புருஷனிடம் ஓர்ந்து.

79 பெண்ணென வந்தவப் பேதை கணவனிடம்
கண்ணி "யென் கண்ணுக்குக் கண்ணுயான — எண்ணும்
அரிய துணைவ! அரும்பொருளை யிப்போ
உரையீர் அடியாளுக் குற்று"

80 மன்னவனும் கூறுவான் "மங்கையே கேளிதையென்
அன்னை யறியாளே பின்னைநீ — யென்னை
அலட்டுதல் நீதியோவென்" றன்புடன் சொன்னான்
அலத்தனுறு ஆயிழைக் கங்கு.

81. "மறைப்பீரோ நாதா மணுட்டி தனக்கு?
முறைப்படி கொண்டவுயர் மோய்ம்பா — சிறப்பாய்
இருபேரு மொன்றாய் இணைந்தது மெய்யேல்
இருதயம் வேறோ யியம்பு."

82. மூவிரு நாளாய் முனிமகனைத் தானலட்டிப்
பாவியவள் தொந்தரை பண்ணிட — ஆவிநொந்து

சொன்னானே பெண்டிலுக்குச் சூட்ச மருமமதை
கொன்னாளர் கோரிக்கை போல்.

83. தீதி லுருவான தீயவர் கேட்டறிந்து
சூதாக முன்வந்து சொல்லிடுவர் — "கோதிலாய்!
இங்குண்டோ தேனில் இனிப்பு? பலமதிலே
எங்குண் டரிக்கே எதிர்?"

84. சினவழல் பொங்கிடச் செப்புவான், "என்றன்
மனையால் உழுதீர் வயலை — முனைவற
தீயவர் தேட்டையே தீயவர்க் கென்றினி
நேயரே ஈந்திடுவேன் நேர்."

85. அலங்கஞ்சூழ் அஸ்கலோன் ஆடி நிலையிற்
கலங்க வடித்தான் கடிது — பலங்கொண்டே
வேண்டிய வஸ்திரம் விந்தையாய்க் கொள்ளையிட்டு
தாண்டினான் திண்ணியன் தான்.

86. "தோழரே! கொண்டுவந்தேன் சொற்போற் தவறாது
தாழுவேன் உம்முன் சமர்த்தரே — வாழுவீர்
நாரியவள் செய்திட்ட நம்பிக்கைத் தோசமதாற்
பாரமிதோ போறேன் பகைத்து.

87. திரும்பினான் காளையுந் திம்மனத்தை விட்டே
விரும்பியே வேண்ட வெறுத்துத் — திரும்பியே
தன்னிலம் சென்றனன் தாங்கொணாக் கோபமதை
மன்னன் மனத்தில் மறைத்து.

88. மாதுலன் வெட்கி மருமகன் போனதும்
"மாதை மறுமணஞ் செய்வித்தல் — தீதாமோ
வென்றொரு தோழனுக் கேந்திழையை ஈந்தானே
மன்றல் மனையிலே வைத்து.

மணம்புரி காண்டம் முற்றுப்பெற்றது.

வினைசூழ் காண்டம்

89. நாளது சென்றிட நாயகியைக் காணவந்தான்
காளையும் வெள்ளாடு கைப்பிடித்து — மாளிகை
வாசலில் நின்றதன் மாமனைத் தாண்டினான்
நேசியிடம் செல்ல நினைத்து.

90. மாதுலன் அப்போ மறித்தான் வழியதை
மாதைப் புறக்கணித்தாய் மன்னாநீ — ஆதலால்
உன்னது தோழனுக்கே ஒண்டொடியை ஈந்தேன்
இன்னமும் சேளா யிசைந்து.

91. சவுந்தர வாட்டியவள் தங்கை பொருத்தி
உவந்தவளை ஈவேன் உனக்குச்—சிவந்தே
முனிந்திடேல் என்றான் முனிமகனை நோக்கி
மனந்தனில் வாடி மருண்டு.

92, ஆங்கது கேட்டலும் அன்னோன் மலைப்புற்று
தாங்கொணாக் கோபமொடு சாற்றுவான்—தீங்கு
விளைத்த பெலிஸ்தர்கை வெம்பழி வாங்கா
திளைப்பனோ பாரீர் இருந்து.

93. பன்னரும் தீரமாய்ப் பாலை வனநரி
முன்னூறு பற்றியே முற்றையும்—பின்னின்று
ஆடிடும் வால்களா லங்கே பிணைத்தனன்
சோடுசோ டாகத் தொடுத்து.

94. வாலதின் நாப்பணே வைத்து வரிந்தனன்
பாலனும் பந்தமதைப் பாங்காகச்—சால
விளைந்த வயலில் வெருட்டியே விட்டான்
முளைந்த பயிர்தீய மூண்டு.

95. தீயவர் தானியம் தீக்கிரை யாகியே
மாயமாய் அங்கே மறைந்திட—ஆபாசங்
கொண்டவர்கள் வந்தனர் கும்பலாய்க் காலையில்
உண்டான நட்ட முணர்ந்து.

96, காட்டினா ரப்போது காரணஞ் சில்லோர்தாம்
"எட்டிக்குப் போட்டியாய் இங்கிஸ்ரேல்—நாட்டவன்
மாமனவன் பெண்ணை மறுமணஞ் செய்விக்க
பூமணக்கும் நாடழித்தான் புக்கு.

97. கும்பலாய்க் கொள்ளார் குரோதமுடன் கூடி
வம்பதாய் மாமன் வசித்தபெருங்—கெம்பீர
இல்லமதை அக்கினிக் கீந்தன ரிரையாகப்
பொல்லாத வெம்மக்கள் போய்.

98. தெரிந்தனன் வீரனச் செய்தி சிவந்தே
பொரிந்தன கண்ணிணை பொங்கி—வருந்தி
மெலிவுற வாங்குவேன் வெம்பழி யெந்தன்
வலிமை யறியாதார் மாட்டு.

99. ஆனகாலை சிம்சோனும் அங்கியெனச் சீறியே
தீனர் குழாங்கள் சிதறிட—மானமுறு
வாளமர் செய்தான் வளைந்த பெலிஸ்தர்கள்
காளைமுன் ஓடக் கலைந்து.

100. சாய்ந்தனர் சில்லோரே, சாய்ந்து மிதிபட்டுத்
தேய்ந்தனர் சில்லோரே திண்டாடி—மாய்ந்தோர்
கணக்கிலர்; வீசிடும் காதலன் முன்னர்
உணக்கமுற் றோடினர் விட்டு.

101. துட்டர் படையைத் தூத்தி யடித்தானே
பட்டண மெங்கும் பரவவே—சட்டென
உட்டெளி வில்பெலிஸ்தர் ஓடி மறைந்தனர்
கட்டழகன் கிட்டிடக் கண்டு.

102. எத்தாம் மலைச்சிகரம் ஏறினன் உச்சிக்கே
பார்த்தார் பெலிஸ்தர், படையெடுத் - தார்த்தார்போ
[ய்க்
கூடினர் இஸ்ரேல்முன் கொந்தளித்துக் கிட்டினர்
ஆடினர் சீறினர் அங்கு.

103. தொண்டுசெய் இஸ்ரேலர் தொல்லைகள் சூழ்ந்ததைபே
கண்டனர் காதகர் தண்டுகளைக்—கொண்டுவா
"கப்பங் குறைந்ததோ? காவல் முறைப்பாடோ
செப்புவீர்" என்றனர் சென்று.

104. உங்கள் குலத்தவன் ஊறுமிகச் செய்ததன்பின்
எங்களைக் கொள்ளையிட் டேத்தாமி—லங்கு
கொடுமுடியிற் தங்குகின்றான் கோதுறு பொல்லாக்
கொடுமையோனைக் கொண்டுவாரீ ரிங்கு.

105 ஏத்தாம் மலைச்சிகரம் ஏறினபின் மூப்பர்கள்
"பார்த்திபனீ மீட்பனெனப் பார்த்திங்கு—காத்திருந்
[தோம்

துக்கமற்று வாழ்ந்தயெமைத் தூபா! வுனைக்கட்டு
விக்க விதித்தார் பகை.

106. கேட்டே நகைத்தான் "கெடுகாலம் ஒன்னலர்க்கு
வாட்டமின்றிக் கட்டுவீர் வந்துமே—கேட்டபடி
கட்டிக் கொடுப்பதல்லாற் கைபோடோ மென்றுநீர்
கட்டாயம் வாக்களிப்பீர் காண்"

107 ஆணழகன் கேட்க அருள்பெருகும் மூப்பர்கள்
ஆணை கொடுத்தார்கள் அன்புடனே = தாணையம்
போட்டே பெலிஸ்தர் பொருப்படியில் நின்றார்கள்
ஆட்டமொடு ஆண்டகையைக் காத்து.

108 வயவன் தனையே வருந்த விறுக்கிப்
பயமறவே கட்டியபின் பண்பாய்த் — துயாமுடன்
தூக்கினர் சேந்தூக்காய்த் துட்ட ரிடம் சேர்த்தனும்
வாக்கதுபோல் சென்றார் மறைந்து.

109. கொந்தளித்துச் சீறியே கொற்றவனைச் சூழ்ந்தனர்
வெந்திற லொன்னார் வெதும்பியங் — கந்த
நெருக்கிடும் கட்டுகள் நேரே அறுந்த
நெருப்பிட்ட நூலை நிகர்த்து.

110. ஆயுதமொன் றில்லாமல் ஆண்டவனை உன்னிட
னாயனருள் நல்க நயந்தங்கு — காயும்
களைமிசை கர்த்தபத் தாடையென்பு கண்டே
விரைவிற் கரத்தெடுத்தான் மேல்.

111. கடுமழல் கான்றிடு கண்ணினன் வீசப்
படுபவஞ் செய்யும் பகைவர் — அடிபோரு
தோடினர் சாடி யொளித்து மறைந்தனர்
பீடில் பெலிஸ்தர் பிரிந்து.

112. தனியாழி வெய்யோன் தருங்கதிர் பொங்கித்
தனியனாய் நின்றவன் தன்மேற் — துனியொடு
வீழத் திகைத்து வெதும்பி மயங்கினான்
தாழாத் தகையோன் தளர்ந்து.

113. தாகமது விஞ்சிடத் தண்ணீரைக் காண்கிலன்
வேகும் நிலத்தில் வியர்ப்புடன் — சோகமுற்று
ஓடினான் தேடினான் ஒப்பிலா வீரனும்
வாடினான் தன்னா வாண்டு.

114. அத்திரி தாடையால் ஆயிரம் வீழ்த்தனர்
பித்தனாய்த் தாகத்தால் பீடற்றேன் — நித்தனே புன்

பாதார விந்தம் பணிந்தேன் விழுந்துயான்
ஆதாரம் நீயே யளி.

115. களைத்திடும் வீரனும் கர்த்தனை வேண்ட
பிளந்தது லேகி பெருகிக் — களத்தில்
நதிபரந் தோடினது நாத னருளா
லதிபன் அருந்திட வன்று.

சிம்சோன் தலைவனாதல்

116. பூனையைக் காணப் புறங்கொடுத் தோடிடும்
ஈன வெலிபோல் எதிரிகள் — தானகலப்
பார்த்திருந்த விஸ்ரேலர் பண்புட னார்த்தனர்
பார்த்திப னாக்கிப் பணிந்து.

117. ஆண்டோர் இருபான்பின் அன்புடன் இஸ்ரேலை
ஆண்டுமே வந்தான் அருள்பெற்றே — ஆண்டகையும்
மாற்றலர் அஞ்சிட மன்னர் புடைசூழ
ஆற்றலொடு வீற்றிருந்தான் அங்கு.

118. பன்னிரு கோத்திரரும் பங்கமற்றுத் தானிருந்து
மன்னன் குடைநிழல் வாழ்ந்திருந்தார் — இன்னலற
நீதி விளங்க நியாயம் விசாரித்தான்
கோதி லுதித்திட்ட கோ.

119. கோணாத கோலோச்சிக் கொற்றவனும் குற்றமுறு
வீணான பூசம் விலக்கியே — காணொணா
நித்தனைக் கர்த்தனை நிர்மலனைச் சுத்தனைப்
பத்தியாய் ஏற்றினன் பண்டு.

120. புல்லதைச் செம்பதைப் பொன்னதை வெள்ளியைக்
கல்லதைக் கும்பிடாது கைகூப்பி — வல்லதேவை
அல்லும் பகலும் அருச்சித்து வாழ்த்தினர்
பல்லாசி பெற்றவர் பார்.

சிம்சோன் தாசி மனைசெலல்

121. கேடுவரு முன்மதி கெட்டுவரும் என்பரே
பாடுவர வோரணங்கைப் பார்த்தவன் — நாடியே
காசா நகரமதின் காவல் கடந்தங்கு
தாசி மனைபுக்கான் தாழ்ந்து.

122. இராயனவன் வந்தான் இருமதிற்கா சாவில்
நிராயுதனாய் என்றறிந்து நேரார் — இராவில்
இருப்புக் கதவை யிழுத்தடைத்து ஊரின்
வரைப்பதையே காத்தா வளைந்து.

123. பெருமா னறிந்தான் பெலிஸ்தரின் சூதை
ஒருவனாய் ஏகி ஒருவித் — தெருவின்

இரும்புக் கதவை யிழுத்தசைத்தான் நெஞ்சில்
விரும்பும் விமலன் தொழுது.

124 காவலன் பேர்த்தே கதவை நிலையொடு
தூவுடை தோளிலே தூக்கினன் — மேவி
இலவண்டை காத்தே யிருக்கும் கிளிபோல்
வலவர்கள் காவல் வலிது.

125 அண்ண லதைக்காவி அந்தமுறு பர்வதத்தே
தண்ணீர்க் குடம்போற் றரிக்காது — விண்ணோர்
கொடுமுடி சேர்த்தபின் கொற்றமருள் நித்த
னடிவணங்கி யேற்றினான் அங்கு.

திரும்பவும் சோரப்பெண் வீடுசெலல்

126· விட்டிற் பறவை விளக்கொளி யீந்திடும்
மட்டிலா நோவை மறந்துபின் —கிட்டுமாப்போல்
மாயவலை சிக்கிய மானிடர் மீண்டுமத்
தீயவழி செல்வரே சேர்ந்து,

127. சோரோக் நதியண்டை சோரப்பெண் வீடொன்றைத்
தாரார் மகிபனும் சார்ந்தானும் — பாரீரே
பெண்மயக்கம் அன்றோ பெருமயக்க மென்பாராம்
நுண்மைசோ மூதோர் நுகர்ந்து

128. விலைமாதின் வீடுவர மீண்டும் பகைவர்
தலைமக்கள் அங்கேகித்"தங்காய்!—தலைவனும்
சிம்சோனின் மாவலி சிந்திடு மாறுதான்
எம்செவிக்குக் கூறாய் எடுத்து.

129. கூறுவையேல் வெள்ளி குறையாதோ ராயிரம்
நூறுடன் ஈந்திடுவோம் நோக்குவாய்—வீறார்
அவனின் உயிர்நிலை ஆய்ந்தறிந் கூறில்
தவனமொடு தான்தருவோம் யாம்."

130. பொதுமக ளப்போ பொருத்தமது பண்ணிப்
பதிவிரதை போலப் பணிந்து – சதிவிளைக்க
மன்தனைப் போற்றி "மகிபனே கூறென்றாள்
"உன்தன் உயிர்நிலை விண்டு."

131. பகையோர்தம் சூதெனப் பார்த்தவன் சொல்வான்
"வகையாய் அகணிவட மேழு – தகையார்
உலராத பச்சை யுளதா யெடுத்துச்
சிலராற் றளைந்தே தெரி."

132 பெண்ணவள் சொற்போல் பெலிஸ்தரும் கொண்டுவர
ஒண்ணுதற் காத லொழித்துமே – கண்ணயர்ந்து

நித்திரிக்கும் வேளைமன்னை நீசமதாய்க் கட்டியே
"சததுருக்க" ளென்றாள் சதி

133. கைக்கட்டும் கால்கட்டும் காய்கனலில் வீழ்ந்திட்ட
வைக்கற் றளையென வாய்விட—நீக்கி
உரமுடன் தாக்கினன் ஒன்னார் பனிபோல்
இரவிமுன் ஓட இரிந்து.

134. தெரியவே வஞ்சத் தெலீலா ளுரைப்பாள்
"பரியாசம் பாத்திபா பண்ணித்—தெரியாத
பேதையே னென்று பெரும்பொய் புகன்றீரே
ஈதுமக் காகுமோ யிங்கு.

135. உள்ளதை யிப்போ ஒளியாது கூறுமென்றாள்
உள்ளங்கை நெல்லிபோல் உள்ளான—கள்ளமதைக்
கண்டிடு சிம்சோன் காவாய் மொழிவான்பின்
ஒண்டொடிக் குண்மை ஒளித்து.

136. வழுங்காப் புதுக்கயிறு வாகா யெடுத்தே
ஒழுங்காகக் கட்ட வொழிந்து—மழுங்கிடும்
என்றனின் மாபல மேந்திழையே நம்புவாய்
என்றனன் சிம்சோன் இசைந்து.

137. நித்திரை வேளையினில் நீலியவள் கட்டியே
பத்திரம் பண்ணிவிட்ட பின்னரே—"சத்துருக்கள்
வந்தா ரெழும்புவீர் வாழ்மன்னா வென்றனள்
தந்திர வாட்டியவள் தான்.

138. கனவி லிழையெனக் கட்டு விடவே
சினமொடு சீறி எழுந்தான்—முனைவரோ
காற்றில் பறந்திடும் காய்ந்த சருகென
ஆற்றாதே ஓடினர் அங்கு.

139. தெரிவரப் பொய்யும் தெளிவாக வப்போ
தெரிவையும் மன்னன் முன் சென்று—மருவியே
"ஆதரங் கூறி யடியாளை நீரேய்த்தல்
நீதமோ நேசா நுவல்.

140. நீரோமெ யன்பொடெனை நேசிப் பதிலையென
வீரா! தெளிவாய் விளங்கிற்று—பாரீர்
மறுத்திடு மன்னா மறுபடியும் வாழக்
குறித்தீரேல் கூறீரோ கொல்?

141. சடையது பின்னித் தரையி லறைபாய்
நெடியதோ ராணி நிறுவி—மடியுமப்போ

குன்றியென மாபலம் கூறினேன் சத்தியம்
என்றனன் மன்னன் எடுத்து

142. மாதவன் வேணியை மாட்டி யறைந்தனள்
பாதகர் வந்திடப் பார்த்ததும்—"காதகர்
நேசா"வெனக்கூவ நீலி வழக்கம்போல்
வீசி யெழுந்தான் விரைந்து.

143. சடையுடன் நீங்கத் தரையுட னாணி
மடையர் பெலிஸ்தர் மதியில்—மடியக்
கணிகையு மேங்கியே கண்ணின்றம் ஓயா
தணிகெழு நீருகுத்தா ளங்கு.

144. "மூவிசை மன்னா! முழுப்பொய் புகன்றனை
காவலாவுன் நேசம் காவற — பாவியான்
கிஞ்சித்தும் பெற்றிடக் கிட்டிடா தாகையாற்
றுஞ்சிடலே வாசி தொலைந்து"

145 அலட்டினாள் நித்தம் அவன்மனம் நோக
அலட்டவே சொல்வான் அரசன் — அலுத்து
"சவாகன் கத்திச் சவரமது செய்யத்
தவறிடுமெ னாண்மை தளர்ந்து."

146. எழுமுறு செற்றாரை " பின்னு மொருவிசை
தாமதமில் வந்திடீர் தன்மனத்தை —பூமான்
திறந்தே வெளியிட்டான் திண்ணமி" தென்றாள்
மறந்தனை யோம்பிடும் மாது.

147. மன்னன் உறங்குழி மாது சிரைத்தனள்
கொன்னார் மயிரைக் குறைத்துப்பின் — மன்னா
பதிவிருந்த சத்துருக்கள் பாரிதோ" வென்றாள்
பொதுமகள் வஞ்சகம் பூண்டு.

ழும்பு தமிழ்ச் சங்கம்

148. சிங்கமெனப் பாய்ந்தனன் சீறிச் சினந்தவன்
அங்கு சிறைப்பட்டான் ஆண்மையது — மங்கவே
அங்கியில் விட்டிலென அன்னாள் உறவதால்
பங்கமுற வந்ததே பார்.

149. பிடித்தனர் ஒன்னார் பிடுங்கினர் கண்கள்
அடைத்தார் சிறையிலே யங்கே — அடைத்துக்
கனத்த விலங்குகளைக் கால்களி லிட்டார்
மனத்தில் வைராக்கியம் வைத்து.

150. வெண்கலத்தில் நல்ல விலங்கிட்டு வைத்தார்கள்
மண்டல மங்கையர்போல் மாவரைக்க— உண்டவர்கள்

கொண்டாட்டங் கொண்டாடிக் கொற்றவனை ஆட (வைக்க
கொண்டாரோ பெண்ணணங் குறித்து.

151. உற்றவரைக் கொன்றுதம் ஊரழித்து நாடழித்த
பற்றலனைத் தானவர்கள் பற்றிடவே — குற்றமில்
தாகோ னருள்தயவைத் தக்கபடி கொண்டாடி
மாகோட்டஞ் செய்ய மதித்து.

152. வாதைமிகச் செய்த வயவனைத் தானடக்க
நாதனருள் செய்தார் நமக்கென — பாதகர்
அந்தகனும் சிம்சோனை ஆட்டுவித் திம்சிக்கச்
சிந்தித்தார் சேர்ந்தே சினந்து.

153. நேத்திர மில்லான் நெறியே வருவதற்குப்
பாத்திர மில்லாத பையனைப் — பார்த்தவர்
விட்டார்; அவனங்கு வேந்தனைத் தாங்கலா
யிட்டுமே வந்தான் இசைந்து.

154. கூட்டிவரும் பையனைக் கோமகன் தானோக்கி
ஆட்டம் பிடிக்குதையா அஞ்சுகிறேன் — நாட்டிய
தூண்களின் மத்தி தொடவே கிறுத்துவாய்
ஆண்டவர் ஈவார் அருள்.

155. கூரையைத் தாங்கிடும் கோவிலின் தூணிடை
வீரியன் காட்டிடும் வித்தையின் — சீரையே
பார்த்தவர் ஆர்ப்பு பரவையில் நின்றெழும்
ஆர்ச்சனை ஒத்ததே யங்கு.

156 ஆண்களும் பெண்களும் ஆடை யணியுடன்
காண்கவே வந்தார் கணக்கிலர் — நாண்கெழு
மின்னார்தம் ஆபரணம் வீசிச் சொலித்திட
ஒன்னார்தாம் கூடினர் அன்று.

157. கோவிலி னுட்புறம் கும்பலாய் மேவினர்
தூவின வெள்தரை தொட்டிடா — தாவினர்
பாடிப் புகழ்ந்தனர் பண்புடன் தாகோனை
யாடினர் சாடினார் அன்று.

158. பல்லிலாக் கோளரியைப் பட்சிகள் சூழ்வதேபோல்
மல்லியற்றும் கோவை வளைந்தனர் — பொல்லாரும்
வல்ல வாசனை வஞ்சப் பெலிஸ்தர்
அல்லலு லாழ்த்தின ரங்கு.

159. கோவில் குருடனைக் கோமகனும் குன்றியே
போலியர்செய் நிந்தையைப் பொறுத்திட்டு—சீல
[முற

விண்ணோர் இறைவனை வேண்டினான்; உண்டுமோ
மண்ணோர்க்கு மற்றோர் துணை.

160. முடித்தான் செபமதை முன்னவன் கேட்டார்
பிடித்தனன் தூணைப் பிடித்தே—பிடிக்க
அடியொடு வீழ்ந்ததே ஆலயம் அவ்வண்
மடியமூ வாயிரர் மாண்டு.

161. விடுத்தா னுயிரையே வேந்தனு மாண்டு
எடுத்தே யினத்தவ ரேகி—முடித்தனர்
பல்லருஞ் சாச்சடங்கு பண்டு முறைப்படி
கல்லறை வைத்தார் கலுழ்ந்து.

162. தித்திப்பால் வீயுமீ தேனிலே; பட்சணத்தின்
மத்தியில் சிக்கியங்கு மாளுமே - மச்சந்தான்
மானிடர் சிற்றின்ப வாரியில் அள்ளுண்டு
மான மிழப்பர் மடிந்து

163. சீரிலான் வாழ்வும் சிறப்பும் மறையுமே
ஈரிலான் ஆணை இகழ்ந்திடேல்—பாரிலே
வீரியம் ஆண்மை விருதா நிலையுள
காரியம் பத்தியே காண்.

சிம்சோன் வெண்பா முற்றுப்பெற்றது

வாழி

பாணர்கள் போற்று மெங்கள் பார்த்திபன் வாழிவாழி
நாணமும் நட்பும் வாய்ந்த நங்கையர் வாழிவாழி
மாணதை நாட்டு மெங்கள் மைந்தரும் வாழிவாழி
மாணவர் கற்கு மிக்த மஞ்சரி வாழிவாழி.

மாணவர் மஞ்சரி முற்றுப்பெற்றது

25126

ERRATA

பிழை திருத்தம்

பக்கம்	கவி	வரி	பிழை	திருத்தம்
22	வெண்பா	2	சென்னலமில்	சொன்னலமில்
56	3	1	முருகப்	மிருகப்
57	8	2	முகத்தே	முகத்தெ
74	4	2	மற்று	மாறி
74	8	2	ஒருங்கு	ஒருமிக்கச்
75	10	2	வெளியிற்	வெளியதிற்
78	10	2	கோணுயின்	கோணுயின்
89	28	5	விரல் வீரன்	விறல் வீரன்
101	28	2	அங்கு	அங்கே
126	5	4	இருந்தே	இருந்தகே
140	65	2	கண் சிவப்ப	கண்ணன்